கல்கி

KALKI 6.11.88 ரூ. 2.



கேரளச் சிறப்பிதழ்-II

"தமிழக மக்களே ஏமாந்து விடாதீர்கள்..."

— கேரள முதல்வர் நாயனார் பேட்டி


nutrine நியூட்ரின் குலாப் ஜாமுன் மிக்ஸ்.
மிருதுவான.ருசிமிகு குலாப் ஜாமுன்.
ஒரு 200 கிராம் பேக் கொண்டு 50 சுவைமிகு குலாப் ஜாமுன்கள் தயாரிக்கலாம். வெளியே பார்ப்பதற்கு பொன்நிறம், உள்ளே மிருதுவான ரச நயம். இந்தப் பண்டிகையிலே, உங்கள் மிட்டாய்க் கடைக்காரர் பொறாமையடையட்டும், நீங்கள் நியூட்ரின் இன்ஸ்டன்ட் குலாப் ஜாமுன்களை ருசித்து மகிழுங்கள்.
nutrine INSTANT
GULAB JAMUN MIX
பொறாமையடையச் செய்யுங்கள்,
உங்கள் மிட்டாய்க் கடைக்காரரை.
Rediffusion NC/6019 a R T



தேர்தல் களத்தில் விடை எழுதுங்கள்

"படித்தவர்கள் மட்டுமேஓட்டுப்போட வேண்டும் என்று சட்டம் இருந்திருக்குமா னால்...!" என்று சிலர் "அத்தைக்கு மீசை முளைத்தால்...!" என்கிற கதை பேசுகிறார் கள். காலஞ் சென்ற அமைச்சரவையில் இரண்டே இரண்டு பேர்தான் படிக்காதவர் கள். மற்றவர்கள் எல்லோரும் படித்தவர்கள்; பலர் பட்டம் பெற்றவர்கள். அந்த அமைச் சரவை வாழ்ந்த கதை நமக்குத் தெரியும்; நாடறியும்.

படிப்பு மட்டும்போதாது. பலர் படிக்காது உலக ஞானம் பெற்ற தலைவர்களாக இருக் கிறார்கள். 'படிக்காத மேதைகள்' என்று இவர்களைப் பாராட்டுகிறார்கள். ஆனால் உலக ஞானம் மட்டும் போதாது. அடிப்படை யிலே இவர்களுக்கு நல்லொழுக்கம் இல்லாத வரையில் இவர்கள் எந்தவிதமான மேதைக ளாகவோ, சாணக்கியர்களாகவோ நிபுணர் களாகவோ இருந்தெல்லாம் பயனில்லை. அடிப்படையில் நேர்மையில்லாத மேதை தன்னுடைய வாதத் திறமைகளை— வாய் ஜாலத்தை— பிறரை ஏமாற்றத்தான் உபயோ கிப்பான். அதைத்தான் நாம் பார்த்து வருகி றோம்.

ஒரு கணவனுக்கு ஒரு மனைவிதான் நாட் டின் சட்டம். அதை மீறி 'சின்ன வீடு' வைத் திருப்பவர்கள் உண்மையிலேயே சட்டத்தை மீறுகிறார்கள். பெண்மையைக் கேவலப்படுத் துகிறார்கள். நமது நாட்டில் நல்லொழுக்கம் இல்லாத தலைவர்களின் செயல்களைக் கண்டு கொள்ளாத ஒரு நிலை நிலவுகிறது. அது அவர் சொந்த விஷயம் என்று பேசுகிறார் கள். தனி மனிதர்களாய், பொது வாழ்விற்கு வராதவர்களாய் இவர்கள் இருந்திருந்தால் இவர்களது ஆசாபாசங்களைப் பற்றி யாரும் கவலைப்படப் போவதில்லை. ஆனால் பொது வாழ்விற்கு இத்தகைய தலைவர்கள்— தலைவிகள் — தேர்ந்தெடுக்கப்படும் போது இதன் விளைவை நாடு அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.

"இவர் யோக்கியமானவருங்க! லஞ்சம் வாங்கினாரென்றால் உடனே அந்த காரி யத்தை செய்து முடித்திடுவார்!" என்று சில ரைப் பாராட்டுகிறோம். காரணம், லஞ்சம் வாங்கிக் கொண்டும் காரியத்தைச் செய்து கொடுக்காத தலைவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள் இவர்களை! தீவட்டிக் கொள்ளைக்காரனுடன் ஒப்பிடும் போது ஜேப்படிக்காரன் நல்லவனாகி விடுகிறான்! ஆனால் இருவருமே திருடர்கள்தான்!

திருட்டையும், லஞ்சத்தையும், ஊழலையும் ஒழிக்க வேண்டும் என்று எண்ணுவதற்குப் பதில், "பத்துசதவிகிதலஞ்சம்பரவாயில்லை! நூறு சதவிகிதம்தான் ரொம்ப மோசம்!" என்று நாம் சொல்வோமானால், கோளாறு நம்மிடம்தானிருக்கிறது.

இருக்கின்ற நிலைகளின் அவலம், கடுமை, கொடூரம், "கொஞ்ச திருட்டைச் செய்து கொள்! திருடுவதில் நியாயமாக இரு!" என்ற மனநிலைக்கு இந்த நாட்டு மக்களைத் தள்ளி இருக்கிறது.

தனிமனிதஒழுக்கம், கணவன், மனைவி நெறிமுறைகள் எல்லாம் அதிகம் மதிக்கப் படாத அமெரிக்க சமுதாயத்தில் மாற்றான் மனைவியை மறுமணம்புரிந்துகொண்டவனை (நெல்சன் ராக்பெல்லர்) நிராகரித்து விடுகி றார்கள். விலைமாதுடன் தொடர்பு கொண் டிருப்பவர்களை நிராகரித்து விடுகிறார்கள் (உதாரணம் செனட்டர் ஹார்ட்). குடிப்பழக் கமும் கள்ள உறவும் கொண்டிருக்கும் தலை வர்களை ஜனாதிபதி பதவிக்கு லாயக்கு அல்ல என்று தோற்கடிக்கிறார்கள். (உதார ணம்எட்வர்டுகென்னடி. ஜனாதிபதிகென்ன டியின் சகோதரர்). இப்படி தனிமனித ஒழுக் கம் குறைந்த நாட்டில் கூட, பொது வாழ்க் கைக்கு வரும் ஒருவன் — ஒரு பெண்மணி — அப்பழுக்கற்றவராக, நல்லொழுக்கம்நிறைந் தவராக இருக்க வேண்டுமென எதிர்பார்க் கிறார்கள்.

நமது நாடு 90 சதவிகித மக்கள், தனிமனித ஒழுக்கம் நிறைந்த — குடும்பஸ்தர்கள் வாழும் நாடு. ஆனால் இங்கே ஒழுக்கம் குறைந்த தலைவர்களையும் தலைவிகளையும் ஏற்றுக் கொள்கிறோம். பிறகு "ஆகா! நாட்டில் ஒழுக் கம் குறைந்து விட்டது. லஞ்சமும் ஊழலும் பெருகிவிட்டது!" என்றுகுறைப்படுகிறோம். ஒழுக்கம் குறைந்தவர்கள், அந்த குணத்தைத் தான் எல்லாத்துறைகளிலும் பிரதிபலிப்பார் கள். அதுதான் நடக்கிறது.

மகாத்மா காந்தி என்ற மனிதர் வாழ்ந்த போது நாடே தூய்மையில், தியாகத்தில், தன்னலமற்ற சேவையில் தோய்ந்து போயிருந் தது. அந்த நன்னிலையைத்தான் நாம்மீண்டும் நாட்டில் உருவாக்க வேண்டும். இது நம்மால் முடியும். அதைச் செய்யப் போகிறோமோ என்பதுதான் கேள்வி. தேர்தல் களத்தில் விடை எழுதுங்கள்!

— டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

"தமிழக மக்களே ஏமாந்து விடாதீர்கள்..."

—கேரள முதல்வர் நாயனார் சிறப்புப் பேட்டி



கேள்வி: மத்திய — மாநில உறவுகள் எப்படியிருக்கிறது — எப்படி இருக்க வேண்டும் என்பதிலிருந்து நமது பேட்டியைத் துவங்குவோம்...

கேரள முதல்வர் ஈ. கே. நாயனார்: அண்மையில் மத்திய — மாநில உறவுகள் பற்றிப் பரிசீலிக்க நியமிக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் கூட பல விஷயங்களை முன்வைத்திருக்கிறது. மத்திய அரசிலுள்ள கட்சி ஆட்சியில்லாத மாநிலங்களில் கவர்னர்களை நியமிக்கும்போது அந்தந்த மாநில முதல்வர்களைக் கலந்து ஆலோசித்து நியமனம் செய்ய வேண்டும். அதோடு, அந்த கவர்னர் மத்தியில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கக் கூடாது. அரசியல் சாசனத்திலுள்ள 356—ஆவது பிரிவை மத்திய அரசு தனக்குச் சாதக்மாகப் பயன்படுத்தி மாநில அரசுகளைக் கலைக்கிறது. அப்படி கலைக்கப்பட்ட எழுபத்தாறு முறைகளில் இருபத்தியாறு முறைதான் நியாயமானது. மற்றவை அரசியல் நோக்கத்துடனேயே செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் சர்க்காரியா கமிஷனே சுட்டிக் காட்டியிருக்கிறது. அதையேதான் நாங்களும் சொல்லுகிறோம். மத்திய அரசுக்குச் சாதகமாக இருக்கிற அரசியல் சாசனத்தின் 356—ஆவது பிரிவு சரியானபடி மாற்றியமைக்கப்பட வேண்டும் அல்லது நீக்கப்பட வேண்டும் என்கிறோம். அதேபோல்தான் மத்திய அரசின் ஏற்றுமதி — இறக்குமதிக் கொள்கையும் தொழில்—பொருளாதாரக் கொள்கையும். அவையெல்லாம் மாநில முதல்வர்களைக் கலந்தாலோசித்து வகுக்கப்பட வேண்டும் என்கிறோம். உதாரணத்திற்குக் கேரளாவையே எடுத்துக் கொண்டால், முன்பு ஆட்சி செய்த இ. காங்கிரஸ் அரசு மத்திய அரசிடம் 1600 கோடி ரூபாயைக் கடனாக வாங்கியிருக்கிறது. அந்தக் கடன் சுமையை இப்போது நாங்கள் தான் சுமக்க வேண்டியிருக்கிறது. இது என்ன நியாயம்? இவை பற்றியெல்லாம் நாங்கள் பிரதமரிடம் எடுத்துச் சொல்லி அறிக்கை சமர்ப்பித்திருக்கிறோம். சாதகமான பதில்களைத்தான் காணோம்!

கேள்வி: அண்மையில் கேரள அரசைப் பற்றிப் பிரதமர் ராஜீவ் காந்தி குறிப்பிட்ட போது, உங்கள் அரசு சரியானபடி செயல் படவில்லை — நிர்ணயிக்கப்பட்ட குறியீடு

களை அடையவில்லை என்று சொல்லியிருக்கிறாரே?

நாயனார்: இதற்கு நான் அப்போதே பதில் சொல்லியிருக்கிறேன். மத்திய அரசு மட்டும் குறியீடுகளை அடைந்து விட்டதா என்ன? ராஜீவ் அரசில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. காரணம் என்ன? அவர்களின் மோசமான பொருளாதாரக்கொள்கைகள்தான்! என்னுடைய அமைச்சரவை மீது இங்குள்ள எதிர்க்கட்சிகள் கூட ஊழல்புகார் சுமத்தவில்லை. ஆனால் ராஜீவின் நிலை என்ன? போஃபர்ஸ், நீர்மூழ்கிக் கப்பல், ஹெலிகாப்டர் பேரம்... என்று ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் அவர் அரசு மீதுதான் சுமத்தப்பட்டிருக்கின்றன. என் கரங்களும், எனது அமைச்சர்களின் கரங்களும் சுத்தமானவை. ராஜீவின் கரங்கள்தான் அசுத்தமானவை! இந்நிலையில்தான் எங்கள் அரசு பற்றி அவர் கருத்துச் சொல்லியிருக்கிறார்!

கேள்வி: இந்திரா காந்தியின் செயல்பாடுகளுக்கும் ராஜீவ் காந்தியின் செயல்பாடுகளுக்கும் இடையில் நீங்கள் ஏதேனும் வித்தியாசம் காண்கிறீர்களா?

நாயனார்: இரண்டு பேருக்குமே ஒரே கொள்கைதான். அதாவது இ. காங்கிரஸின் கொள்கை என்பதே மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் விரோதமாகச் செயல்படுவதுதான். இல்லையென்றால் அவதூறு மசோதா என்ற போர்வையில் பத்திரிகைகளை ஒடுக்க நினைத்திருப்பாரா அவர்? நாடு தழுவியதொரு போராட்டம் நடத்தியல்லவா அந்த மசோதாவை வாபஸ் பெற வைக்க வேண்டியிருந்தது!

கேள்வி: இப்போது புதிதாகப் பிறந்திருக்கும் 'ஜனதா தள்' பற்றி உங்கள் கருத்து என்ன?

நாயனார்: ராஜீவ் காந்தியின் ஜனநாயக விரோதக் கொள்கைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து போராடுவதற்கான நிலையில் மேலும் ஒரு படி முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்வேன். காரணம், அதில் மதவாதக் கட்சிகளான பாரதீய ஜனதா, ஆர். எஸ். எஸ். ஆகியவை சேர்க்கப்படவில்லை. அதுவே நல்ல அறிகுறி. இந்நிலை மேலும் மேலும் முன்னேறுமென்று நம்புகிறேன்.

கேள்வி: கடந்த காலத்தில் மத்திய ஆட்சியைப் பிடித்த எதிர்க்கட்சிகள் பிறகு தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு பரிதாபமாக ஆட்சியை இழக்க நேர்ந்ததே, அது மீண்டும் நிகழாது என்கிறீர்களா?

நாயனார்: நிச்சயமாக நிகழாது. உலகத்தின் எந்த மூலையிலும் முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சி அதே பாணியில் மறுபடியும் நிகழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை.

கேள்வி: ஆனைமலையாறு, நீலாறு, பாண்டியாறு, புன்னம்புழா ஆறு ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் தண்ணீரில் பெரும்பகுதி அரபிக் கடலில் வீணாகச் சென்று கலக்கிறது. அதாவது உங்கள் தேவைக்கு அதிகமாக தண்ணீர் உங்களிடம் இருக்கிறது. இந்நிலையில் அதையேன் நீங்கள் தமிழகத்தோடு பங்கிட்டுக் கொள்ளக் கூடாது?



"கடவுள் எல்லா இடத்திலும் இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட இடத்திற்காக எதற்குப் பிரச்னைகளைவளர விட வேண்டும்?"

நாயனார்: எந்த உபயோகமும் இல்லாமல் தண்ணீர் அரபிக் கடலில் சென்று வீணாகக் கலக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அது எங்கள் தேவைக்கு அதிகமான தண்ணீர் அல்ல; போதுமான அணைக்கட்டுகள் இல்லாமல் வீணாவதுதான் அது. இடுக்கி அணையை இன்னும் மேம்படுத்த இருக்கிறோம். புளியங்குட்டி, மற்றும் பாலக்காட்டுப் பகுதிகளில் அணைக்கட்டுகள் வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்கிறோம். அவர்கள் அனுமதியளிக்க மறுக்கிறார்கள். அதனால்தான் தேவையிருந்தும் எங்களால் பயன்படுத்த முடியவில்லை. இந்

நிலையில் தமிழ்நாட்டோடு தண்ணீரைப் பகிர்ந்து கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை.

கேள்வி: கண்ணகி கோயில் பிரச்னை...

நாயனார்: அக்கோயில் கேரளாவுக்குத் தான் சொந்தமானது என்றும், அப்படியல்ல என்றும் — நம்மிரு மாநிலங்களுக்கிடையில் உள்ள அந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். கடவுள் எல்லா இடத்திலும் இருக்கும் போது ஒரு குறிப்பிட்ட இடத்திற்காக எதற்குப் பிரச்னைகளை வளரவிட வேண்டும்?

கேள்வி: நீங்கள் கடவுளை நம்புகிறீர்களா?'

நாயனார்: நான் நம்புகிறேனா இல்லையா என்பதல்ல பிரச்னை. இந்து மதத் தத்துவப்படி கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார். இந்நிலையில் எதற்காக அநாவசியப் பிரச்னை என்பதுதான். குருவாயூர்க் கோயிலில்கூட சிலர் பணத்திற்காகக் கடவுளின் பெயரால் பிரச்னைகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்து மதத் தத்துவப்படி கடவுள் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்ள மாட்டாரல்லவா...!

கேள்வி: கோயில் தேவஸ்தானங்களில் டிரஸ்டிகளை நியமிப்பதில் கேரள அரசு அநாவசியமாகத் தலையிடுகிறது என்று...

நாயனார்: முந்தைய இ. காங்கிரஸ் ஆட்சியில், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நெக்லஸ் — குருவாயூர்க் கோயிலுக்குச் சொந்தமானது — ஒரே இரவில் களவாடப்பட்டது. கடைசிவரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவேயில்லை. இப்படிக் கடவுளின் பெயரால் நடக்கும் கொள்ளையையும், பணக் கையாடல்களையும் எப்படி அனுமதிக்க முடியும்? அதனால்தான் அரசு தலையிடுகிறது. அப்படித் தலையிடும் போது, கையாடல் செய்ய முடியாமல் போகும் என்பதால்தான் சம்பந்தப்பட்டவர்கள் எதிர்க்கிறார்கள்; பிரச்னைகளை உருவாக்குகிறார்கள்.

கேள்வி: இப்போது கேரளாவில் கொஞ்சம் கொஞ்சமாக ஆர். எஸ். எஸ். பலம் பெற்று வருவதாகத் தெரிகிறதே?

நாயனார்: அவர்கள் வெறும் வகுப்புவாதிகள். இ. காங்கிரஸ் பலமிழந்து வருகிறது. அதனால் ஆர். எஸ். எஸ். பலம் பெற்று வருகிறது. இ. காங்கிரஸிலுள்ள வகுப்புவாதிகள் இடம் மாறுகிறார்கள் அவ்வளவுதான்.

கேள்வி: தமிழகத்தோடு ஒப்பிடும் போது, கேரளாவில் பஸ் கட்டணம் அதிகமாகத் தெரிகிறது...

நாயனார்: எனக்கு அந்த விவரங்கள் தெரியாது. நீங்கள் போக்குவரத்து அமைச்சரைத்தான் கேட்க வேண்டும்.

கேள்வி: பொதுத் தேர்தல் வரவிருக்கும் ஒரு சூழ்நிலையில் தமிழக மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நாயனார்: தமிழக மக்களே இ. காங்கிரஸின் டிரிக்குகளில் நீங்கள் ஏமாந்து விடாதீர்கள். சினிமாக் கவர்ச்சிகளிலும் மயங்கி விடாதீர்கள். கடந்த இருபதாண்டுகளாகக் காங்கிரஸை நீங்கள் நிராகரித்தது போலவே இப்போதும் இ. காங்கிரஸைத் தோற்கடியுங்கள். தி. மு. க. மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட மதச் சார்பில்லாத இடதுசாரி முன்னணியினர் ஆட்சியைப் பிடிக்க ஆதரவு கொடுங்கள். இதுதான் தமிழகத்திலுள்ள உழைக்கும் வர்க்கத்தினருக்கும் மற்றவர்களுக்கும் நான் விடுக்கும் வேண்டுகோள்.

(அன்றைய வேலைகளை முடித்துக் கொண்டு இரவு பத்து மணிக்கு மேல் நாயனார் நமக்குப் பேட்டி கொடுத்த போது களைத்துப் போயிருந்தார். ஆயினும் சிறிதும் ஆர்வம் குன்றாமல் பேட்டியளித்தார். பேட்டி முடிந்தவுடன், ஒரு சாதாரண ஆபீஸ் குமாஸ்தா தனது கைப்பையைத் தேடி எடுத்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்புவது போல், அவரும் தமது சாதாரணக் கைப்பையைத் தாமே கையில் எடுத்துக் கொண்டு நம்மோடு கிளம்பி ஆபீஸிலிருந்து வெளியில் வந்தார். அத்தனை எளிமை!)

பேட்டி: இளங்கோவன்.

அடுத்த இதழில்...

"தமிழ் சினிமாவைச் சீர்திருத்துவது எங்கள் பணி இல்லை!"

— பறவைகள் பலவிதம் திரைப்படம் பற்றி ராபர்ட் — ராஜசேகர்!




அழகும் புத்திசாலித்தனமும் உள்ள
பெண்கள் அணிவதெல்லாம்
சாரதாஸ் பட்டு புடவைகளேதான்!
சாரதாஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 831177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077



இப்போது
ஹார்லிக்ஸ்
கூடுதல் கால்ஷியத்துடன்
Great Nourisher
"வளரும்
குழந்தைகளுக்கு
கூடுதல்
கால்ஷியம் தேவைப்படுகிறது."
ஹார்லிக்ஸ் இப்போது கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப்பட்டிருக்கிறது—வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் மிகவும் முக்கியமானது.
ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது—புரோட்டீன், விட்டமின்கள், மினரல்கள் மற்றும் கார்போஹைட்ரேட்டுகள்—இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. இப்போது கூடுதல் கால்ஷியத்திலும், கூடுதல் ஆரோக்யம்.
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்
Horlicks
WITH EXTRA CALCIUM
The Great Nourisher
HTA-6037 TAM

கல்லூரிப் பரீட்சையில் சினிமாக் கேள்விகள்!





- குணச்சித்திர நடிப்பு என்றால் என்ன? புன்னகை மன்னன் படத்தை ஆதாரமாய்க் கொண்டு விளக்குக.
- ஒரு ஒளிப்பதிவாளர், இயக்குனராய் மாறினால், அது படத்துக்கு பலமா? பலகீனமா? அப்படி மாறி தயாரிக்கப்பட்ட படங்களை ஆதாரமாய்க் கொண்டு விளக்குக.
- குறிப்பு வரைக: பாலசந்தரிசம்.

''இப்படியெல்லாம் கல்லூரிப் பரீட்சையில் கேள்வி கேட்கிறார்கள்!''

''ஆச்சர்யமாயிருக்கே! எங்கே? பிலிம் இன்ஸ்டிடியூட்டிலா?''

''இல்லை! சென்னை லயோலா கல்லூரியில்!''

''என்னது? கண்டிப்புக்குப் பெயர் போன லயோலாவில், சினிமா பற்றி கேள்விகளா?''

''ஆமாம் சார், ஆமாம். அங்கே திரைப் படத் திறனாய்வைப் பாடமாகவே மாணவர்களுக்கு போதித்து வருகிறார்கள்!''

சினிமாக்காரர்களை தேவலோகப் பிறவிகள் போல அண்ணாந்து பார்க்கிறவர்கள் ஒரு வகை; 'சீ! சினிமாக்காரன்தானே!' என்று மட்டமாய் நினைக்கிறவர்கள் ஒரு வகை. இவை இரண்டுமின்றி, 'கலைஞர்கள் என்கிற முறையில், அவர்களிடமுள்ள திறமைகளை மதித்து மரியாதையுடன் பார்க்கிற புதிய வகையினராய் மாணவர்களை உருவாக்கத்தான் இந்தத் 'திரைக் கலை இயல்' படிப்பு.

இந்த ஐடியா எப்படி உருவானது? இந்தப் படிப்பு சொல்லித் தர முக்கிய காரண கர்த்தா தமிழ் பேராசிரியர் ராமு. அவர் சொன்னார்: ''எங்கள் கல்லூரியிலே ஒரு தடவை புகைப்படக் கண்காட்சியினைத் திறந்து வைக்க மாணவர்கள் நடிகை ஒய். விஜயாவை அழைத்தார்கள். இன்னொரு விழாவைத் தொடங்கி வைக்கச் சுகாசினியை வரவழைத்தார்கள். இந்த விழாக்களுக்கு மாணவர்களின் வருகை அதிகமாய் இருந்தது. மாணவர்களுக்கு சினிமா மேல் உள்ள மோகத்தை அறிவுபூர்வமாகவும் ஆக்க பூர்வமாகவும் மாற்ற வேண்டும். அதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எனக்கு அப்போதுதான் தோன்றியது. அதன்படி உருவானதுதான் எங்கள் கல்லூரியின் திரைக்கலை மன்றம். இது நடந்தது 81—ம் ஆண்டு. அப்போதைய முதல்வர் ஃபாதர் சூரியகோஸ், மாணவர்களுடைய கலை ஆர்வத்தை நல்ல முறையில் வளர்க்கிற அமைப்பு என்கிற முறையில் மன்றத்துக்கு அனுமதியும், ஆதரவும் அளித்து உற்சாகப்படுத்தினார்.

''மாணவர்களிடையே திரைக் கலை மன்றம் பெற்ற அமோக வரவேற்பைக் கண்ட போது, ஏன் சுய ஆட்சி அந்தஸ்து பெற்ற நம் கல்லூரியில் சினிமாவையும் ஒரு பாடமாக்கக் கூடாது என்று தோன்றியது. அடுத்த ஆண்டில் பிரின்சிபாலிடம் இக் கருத்தைத் தெரிவித்தேன். விஷயம், பாடத் திட்டக் குழுவின் கூட்டத்தில் அலசப்பட்டது. வெகுண்டவர்களும் உண்டு; வரவேற்றவர்களும் உண்டு; கடைசியில், திரைக் கலை இயலை பாடமாக்குவது என்றே முடிவெடுத்து, பாடத் திட்டமும் உருவாக்கப்பட்டது.''



வீடு பற்றி பாலு மகேந்திராவுடன் 'டிஸ்கஷன்.'

இப்படிப்புக்கு கே. பாலசந்தர், பாரதி ராஜா, பாக்யராஜ், பாலுமகேந்திரா, ஏ.வி. எம். சரவணன், கமல் போன்ற பலர் ஆலோசகர்களாய் உள்ளனர்.

திரைக்கலை இயல் மாணவர்களுக்கெனப் பிரத்தியேகமாய் சினிமாக்கள் திரையிடப்படும். அதனைத் தொடர்ந்து, படத்தின் இயக்குனரும், மாணவர்களும் படத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்துக் கலந்துரையாடுவார்கள்.

முதல் மரியாதை படத்தைப் பார்த்துவிட்டு, பாரதி ராஜாவுடன் மாணவர்கள் பேசிய போது, மாணவர்கள் கேட்ட கேள்விகளைப் பார்த்து டைரக்டரே வியந்து போனார். ''நகையைப் பிடுங்க வரும் வில்லனின் கால் கட்டை விரலை, ரஞ்சனி கடிக்கிறார். வாயினுள் சிக்கிய விரலை வில்லன் கத்தியால் நறுக்கி விடுகிறார். இது எத்தனை கொடூரமான, உணர்ச்சி பூர்வமான காட்சி! ஆனால் படத்தில், இது, வில்லன், ஆற்றில் கால் கழுவுவது போல மிகச் சாதாரணமாய்க் காட்டப்படுகிறதே!" என்று ஒரு மாணவர் கேட்ட போது, பாரதி ராஜா, ''அது தவறுதான்'' என ஒப்புக்கொண்டதோடன்றி, இத்தனை நுணுக்கமாய்க் கேள்வி கேட்ட மாணவரை மனசாரப் பாராட்டினார்.

பாக்யராஜ் வந்திருந்த போது, ஒரு மாணவர் இடக்காக, ''இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி கோமாளியாகவே இருக்கப் போறீங்க?'' என்று கேட்ட போது, பாக்யராஜ் அளித்த சூடான, சுவையான பதில்:

''கோமாளி வேஷம் போடறது ஒண்ணும் சாதாரணமான விஷயமில்லீங்க. சர்க்கஸ்ல ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு திறமையைத்தான் காட்டுவாங்க. ஆனா, கோமாளி, அத்தனை பேர் வரும் போதும் கூடவே வந்து அவங்க செய்யறதையெல்லாம் செய்யணும். அதோட நிக்காம, ஜனங்களைச் சிரிக்கவும் வைக்கணும். ஆக, கோமாளிதானுங்களே, மத்தவங்க எல்லாரையும் விடத் திறமைசாலி?''

இந்த மாணவர்களுக்கு மேலே குறிப்பிட்ட இரு டைரக்டர்கள் தவிர பாலசந்தர், பாலுமகேந்திரா, மகேந்திரன், கமல், சோ, மேஜர், வி. கோபாலகிருஷ்ணன், ராஜேஷ் முதலியோரும் ஆசிரியர்களாய் மாறி வகுப்பெடுத்திருக்கிறார்கள். சிவாஜி நடிப்பு பற்றி 'லெக்சர்' கொடுத்திருக்கிறார்.

இந்தப் படிப்பில் மாணவர்களுக்கு அகில உலக சினிமா, இந்திய சினிமா, தமிழ் சினிமா பற்றியும், எடிட்டிங், ஒளிப்பதிவு, டைரக்ஷன், திரைக்கதை, நடிப்பு போன்ற திரைப்படத் துறையின் பல்வேறு பிரிவுகள் பற்றியும் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

இவர்களுக்குப் 'பயிற்சிப் பணி (அசைன்மென்ட்)களும் தரப்படுகின்றன. இதன்படி சிதம்பரம், முதல் மரியாதை, ராஜ பார்வை, நாயகன், வீடு, கோகிலா, இது நம்ம ஆளு போன்ற படங்களைப் பார்த்து விட்டு, அக்குவேறு ஆணிவேறாக விமர்சித்திருக்கிறார்கள். சினிமா பற்றி கருத்தரங்குகளும் நடத்தப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே திரைக்கலை இயலைப் பாடமாக்கிய முதல் கல்லூரி என்கிற பெருமையைப் பெற்றுள்ளது லயோலா.

கடைசியாக ஒரு விஷயம். 'வீடு' படத்தைப் போட்டிக்கு அனுப்பி விட்டு, லயோலா கல்லூரியின் திரைக்கலை இயல் மாணவர்களுக்கு ஸ்பெஷலாய்ப் போட்டுக் காட்டினார் பாலுமகேந்திரா. படத்தைப் பார்த்து விட்டு, மாணவர்கள் தெரிவித்த ஒருமித்த கருத்து: ''இந்த வருட ஊர்வசி விருது அர்ச்சனாவுக்குத்தான். சிறந்த தமிழ்ப்பட விருது 'வீடு' படத்துக்குத்தான்.''

அப்போது பாலுமகேந்திரா, 'நாயகன்' சிறப்பான படம்தானே? என்று கேட்க, மாணவர்கள், ''நாயகன் படம் கமலுக்கு வேண்டுமானால் சிறந்த நடிகர் விருதைப் பெற்றுத் தரும். ஆனால் அதற்குச் சிறந்த பட விருது கிடைக்காது'' என்று சொன்னார்கள்.

லயோலா மாணவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு சரியாகி விட்டது.

— எஸ். சந்திரமௌலி.



அவர்: பிச்சைக்காரன் அந்த வீட்டு முன் நின்னு சப்தம் போடறானே... ஏன்?

இவர்: தீபாவளிக்குச் செஞ்ச மைசூர் பாகை அந்த வீட்டு அம்மா, திருவோட்டில் போட்டாங்களாம். திருவோடு ரெண்டா உடைஞ்சிடுச்சாம்...!

— ராஜிராதா.

லயோலா கல்லூரி மாணவர் அருண் என்ன சொல்கிறார்?




Bisleri CLUB SODA

"இந்த உலகத்தில் சுத்தமான தண்ணீர் குடிக்க கிடைக்காமல் இருக்கும் ஒவ்வொரு மூன்றாவது மனிதன் இந்திய குடிமகன், என்று நாக்பூரிலிருந்து ஆராய்ச்சி செய்யும் **NATIONAL ENGINEERING AND ENVIRONMENTAL RESEARCH INSTITUTE (NEERI)** கூறுகிறது. ஆகையால் நான் எப்பொழுதுமே "ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ்" முறையில் நன்றாக சுத்தப்படுத்திய தண்ணீரை உபயோகிக்கும் "பிஸ்லேரி கிளப் சோடா" வையே விரும்பிக் குடிக்கிறேன்."

நீங்களும் உங்கள் உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர் : சென்னை பாட்லிங் கம்பெனி லிட்.



காலையில் எழுந்தவுடன் உங்கள் முகம்
இப்படியா சொர சொரவென்று இருக்கிறது?
உங்களுக்கே தெரியும் உங்கள் முரடான தாடியை வசப்படுத்த தேவை ஒரு விசேஷமான பிளேடே.
முரட்டு தாடி உள்ளவர்களுக்கு உறுதியே உருவான இரட்டை பிளேடுகளை இதோ அளிக்கிறது வில்டெக். புதிய ஸாவேஜ் 2.
மிகச் சிறந்த ஸ்டீலிலிருந்து தயாரிக்கப்பட்டது. இணையற்ற கூர்முனை கொண்டது. மூன்று முறை விசேஷ அமிலங்களால் பூசப்பட்ட ஸாவேஜ் 2, மிகவும் எளிதான முறையில், சுத்தமான, மழமழப்பான சவரங்களை அளிக்கிறது.
மேலும் ஸாவேஜ் 2, சர்வதேச "ஃபிக்ஸட்" மற்றும் "ஸ்வைவல்" ரேசர்களுக்கும் பொருத்தமானது.
காத்திருப்பானேன்! இன்றே ஸாவேஜ் 2 தரும் புதிய அனுபவத்தைப் பெறுங்கள்!
Blade 2
Blade 1
புதிய
ஸாவேஜ் 2
இரட்டை பிளேடுகள்
முரட்டு தாடியை வசப்படுத்துகிறது.
OBM 2759 TAM



நேர்மைக் கட்சி

நீங்கள் கேட்டவை — தராசு

பரம்பரை ஆட்சி வசனத்தைப் பிரதமர் வெட்டச் சொன்னாராமே?



* **பி. ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி.**

? **எங்கே சார் இத்தனை நாளாகக் காணோம்?**

! ஒரு காரியத்தைத் தொடர்ந்து ஒருவர் பல காலம் செய்து கொண்டு வரும்போது அலுப்பு ஏற்படுவது இயல்பு. சில நாள் விடுமுறை கொடுத்தால் புதிய உற்சாகம் பிறக்கும். பாட்டரி ரீ-சார்ஜ் செய்து கொண்டு வந்திருக்கிறேன்!





* **கு. கணேசன், சென்னை — 15.**

? **நாவலர், பண்ருட்டி போன்றோருக்கு ஜெயலலிதாவிடம் கிடைத்த மரியாதையைக் கண் கூடாகக் கண்ட பின்பும் அவர் கட்சியில் சேர்ந்திருக்கும் எம். பி. எஸ்.ஸின் துணிச்சலைப் பற்றி?**

! எல்லாக் கட்சியிலும் வாழ்க்கை நடத்தியுள்ள எம். பி. எஸ்.ஸைச் சேர்த்துக் கொண்ட ஜெயலலிதாவின் துணிச்சலை விட அது ஒன்றும் அதிகமல்ல.





அவமதிப்பு

* **மனோபாரதி, பாண்டிச்சேரி.**

? **இன்றைய உப்பு சப்பில்லாத விஷயம் எது?**

! கார்த்திக் — ராகினி திருமணம்.

'சரி'



வாழ்த்துக்கள்



* **தாரை பி. இளங்கோ, தாரமங்கலம்.**

? **ராஜீவ் காந்தி திருச்செந்தூர் கோயிலில் சட்டையுடன் தரிசனம் செய்தது பற்றி...?**

! ஒரு நல்ல திருப்பம். காலத்துக்கு ஏற்ப சில மரபுகள், பழக்க வழக்கங்கள் மாறுவது பரிணாமம், மற்றும் நாகரிக வளர்ச்சியில் இயல்பு. ராஜீவுக்கு மட்டும் அளிக்கப்பட்ட சலுகையாக இல்லாமல் பக்தர்கள் அனைவருக்குமே உரிமை வழங்கி விடலாம். அவரவர் விருப்பப்படி சட்டை அணிந்தோ, அணியாமலோ வர அனுமதிக்கலாம். பி. கு.: நான் தீவிர முருக பக்தன்.

* **சீர்காழி சாமா, தென்பாதி.**

? **மிளகாய் விலையைக் கேட்டால் வயிறு எரியவில்லை?**

! மற்ற பண்டங்களின் விலையைக் கேட்டால் வயிறு குளிர்ந்து போகிறதாக்கும். வேணுமானால், 'மந்திரியைப் பாதிக்குமா மளிகை விலை?' என்று புதுமொழி உருவாக்கி இன்னும் கொஞ்சம் வயிறு எரியலாம்!

* **ஆர். ரத்தினசாமி, புன்செய் புளியம்பட்டி.**

? **மிகுந்த கெட்டிக்காரத் தனத்தைவிட நேர்மை நாணயம் இவற்றுக்கு முக்கியத்து**

வம் தரும் கட்சிதான் இன்றைய தமிழகத்துக்குத் தேவை என்று ஆளுனர் கூறியிருக்கிறாரே?

! அவர் கூறியது உண்மை. கெட்டிக்காரத்தனத்தைக் காசு கொடுத்துப் பெறலாம், வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம்; நேர்மை ஒழுக்கம் முதலியவற்றைப் பணம் கொடுத்துப் பெற முடியாது. ஆனால் இவற்றுக்கு மதிப்புக் கொடுக்கும் கட்சித் தலைமை தமிழகத்தில் எங்கே இருக்கிறது? அப்படியே இருந்தாலும் தேடிக் கண்டுபிடிக்கும்படியான அந்தத் தலைமை, பதவிக்கு வருவது எப்படி?

* **எஸ். அருண்குணா, சென்னை — 15.**

? **சால்மன் ரஷ்டியின் நாவலுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பது குறித்து...?**

! அது முஸ்லிம்களின் மனத்தைப் புண்படுத்துமாம்; தடை விதித்து விட்டார்கள். ஜீஸஸ் கிரைஸ்ட் சூபர் ஸ்டார் என்றொரு திரைப்படம். கிறிஸ்துவர்கள் மனம் புண்படுமாம்; தடை விதித்து விட்டார்கள். அசடுகள், பிராமணர்களைக் கிண்டல் செய்தோ, இந்து மதத்தை தூஷித்தோ நூல் எழுதினால் அல்லது திரைப்படமெடுத்தால் எந்தவிதமான தடையும் விதிக்கப்பட மாட்டாது என்பது கூடவா தெரியாது? அதை எழுதி, அல்லது படமெடுத்துத் தொலைவது தானே... எதற்கு அனாவசியமாக...

* **மஞ்சுதேவன், கல்கத்தா.**

? **ஷார்ஜாவில் இந்தியாவின் ஆட்டம் எப்படி?**

! ஆரம்ப சூரத்தனம் போகப் போக பிசுபிசுத்து விட்டது என்றாலும் வெங்சர்க்கார் உலகின் முதல் தர பாட்ஸ்மனாக உயர்ந்திருக்கிறார் என்ற லேட்டஸ்ட் நியூஸ் ஆறுதல்.

* **பாக்கியமுத்து, திருச்சி — 20.**

? **தர்மசங்கடத்தை உம்மால் விளக்க முடியுமா?**

! 'பல்வேறு அமைச்சரகங்களின் ஊதாரிச் செலவுகளைக் கட்டுப்படுத்தப் போகிறேன்' என்று மத்திய நிதி அமைச்சர் தெரியாத்தனமாகக் கூறிவிட்டார். 'பிரதமரின் அமைச்சரகத்திலிருந்து ஆரம்பிக்கிறீர்களா?' என்று தராசு அவரைக் கேட்டால் அது. அவருக்குத் தர்மசங்கடம்!

* **ரூ. 20 பரிசு பெறுபவர்:**
பி. தனபால்,
115/1, பாரதியார் வீதி,
காரைக்கால், — 609 602.

* **கே. வி. நாதன், நெய்வேலி.**

? **ஜனாதிபதி வேங்கடராமன், நாதத்துவார அரிசன ஆலயப் பிரவேசத்துக்குத் தாம் தலைமையேற்று நடத்துவதாகக் கூறியுள்ளது குறித்து?**

! அரிஜன ஆலயப் பிரவேசத்துக்கு இன்னமும் இயக்கம் நடத்த வேண்டிய நிலையில் நாம் இருப்பதே வெட்கக்கேடான விஷயம். இந்த அவமானத்தைத் துடைத்தெறிய ஆர். வி. போன்று உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் தலைமை ஏற்பது வரவேற்கப்பட வேண்டிய விஷயம். வாழ்த்துங்கள்.

* **எம். முஹம்மது பஜ்ருதீன், திருவாரூர்.**

? **மு. வி. மகாபாரதத்தில் பரம்பரை ஆட்சி பற்றிய வசனத்தை ராஜீவ் வெட்டச் சொல்லி விட்டாராமே?**

! இன்று பரம்பரை ஆட்சி நடந்தாலும் அது ஜனநாயக முறைப்படிதான் நடக்கிறது. புராணத்தில் பரம்பரை ஆட்சி முறிக்கப்பட்டிருந்தாலும் அது ஜனநாயக மரபுப்படி அல்ல. எனவே ராஜீவ் கிளர்ச்சி அடைந்திருக்க அவசியமே இல்லை.

* **எம். இராதாகிருஷ்ணன், வாணியம்பாடி.**

? **முதல்வர் பதவியைத் தூக்கி எறிந்த ஹெக்டே பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

! நல்லவேளை, அவர் ராஜினாமாவை வாபஸ் வாங்கச் செய்ய வி. பி. சிங் பறந்தோடி வரவில்லையே என்று மகிழ்கிறேன். கோமாளித்தன அரசியல் பல்டிகள் அருவருக்கத் தக்கவை.

* **பி. தனபால், காரைக்கால்.**

? **இந்தி எதிர்ப்பு விவகாரத்தில் தற்போது கலைஞரின் போக்கு எப்படி இருக்கிறது?**

! "ஹிந்தி வெறியர்களுக்கு இடம் தந்து விடாதீர்கள்" என்று தமிழ்நாட்டில் பாரதப் பிரதமர் தந்திரப் பிரசாரம் செய்யுமளவுக்கு விட்டுக் கொடுத்து விட்டுத் தவிக்கிறார் மனுஷன்!

* **கோபு, சென்னை — 20.**

? **ஹுசேனுக்கு ஏற்பட்ட அவமதிப்புப் பற்றி?**

! செருப்பு அணியாததால் ஓர் 'அரிஸ்டோகிளப்'பிலிருந்து அந்த ஓவிய மேதை வெளியேற்றப்பட்டது அநியாயம், அக்கிரமம் — சந்தேகமில்லை. ஆனால் செருப்பு அணியா விரதத்தால் ஹுசேன் என்ன சாதிக்கப் போகிறார்? அதைவிட பத்து ஏழைகளுக்கு அவர் செருப்பு வாங்கிப் பரிசளித்தால் உருப்படியான காரியமாயிருக்கும். கவனியுங்கள் — எளிய வாழ்க்கைக்குச் சட்டை அவசியமில்லை என்று கருதிய காந்தி கூட செருப்பைத் துறக்கவில்லை.

கல்கி

தீபாவளி மலர்

1988



விமரிசையான வண்ணப்படங்களின் வரிசை

அட்டைப்படம்:

* இடது பாதம் தூக்கி ஆடும் நடராஜப் பெருமானின் நடனத்தில் மனம் குவிய மேலட்டையைப் புரட்டவே மனம் வராது!

அருள்வாக்கு:

* காஞ்சி முனிவரின் வண்ணப்படம்; அருளுரை.
* ஜெயேந்திரர், சங்கரானந்தேந்திரர் வண்ணப் படங்கள்.

ஆன்மிகம்:

* ஷிர்டி பாபா — வண்ணப்படம்: லதா.
* அண்மையில் கும்பாபிஷேகம் கண்ட திருவாரூர் தியாகராஜர் வண்ணப்படம் மற்றும் திருத்தலக் காட்சிகள்: தனுசு.

புராணம்:

* உத்தர ராமாயணம் தெரியும்; இது வேறு ஓர் அபூர்வமான அற்புத ராமாயணம்! வண்ணப் படங்கள்: வினு.

தல யாத்திரை:

* உடுப்பி மத்து கிருஷ்ணரை நேரில் தரிசிப்பது போல் வண்ணப்படம். மோகினி அலங்காரத்திலும் காணலாம்!

அழகிய இந்தியா:

* காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை பாரதத்தின் எழில்களை வண்ணங்களில் வடித்துத் தருபவர்: கே. வி. ஆனந்த்.

நகைச் சுவை:

* ஓவியர் உமாபதியின் வண்ணச் சிரிப்பு மற்றும் அரசியல் கார்ட்டூன்.
* ஏராள நகைச்சுவை வெடிகள்.

கலைகள்:

* யக்ஷகானம் என்ற புத்துயிர் பெற்ற அபூர்வக் கலை இதயத்தை மட்டுமல்ல, அதன் வண்ணங்களால் கண்ணையும் பறிக்கும்! வண்ணப் படங்கள்: யோகா.
* தமிழகத்தின் கைவினைஞர்கள்; அவர்களுடைய கலை, மற்றும் வாழ்க்கை.

இலக்கியம்:

* மீ. ப. சோமு தேர்ந்தெடுத்த பொறுக்கு மணியான கவிதைகளுக்கு எடுப்பான வண்ணச் சித்திரங்கள் தீட்டியிருப்பவர் கோபுலு.


அமரர் கல்கி:

* தவுல் கந்தப்பப்பிள்ளை கூறிய கதைகள் வரிசையில் மூன்றாவதான "நாடகக்காரி" — அமரர் கல்கியின் குறுநாவல். ம. செ. தீட்டிய வண்ணச் சித்திரங்களுடன் ஜொலிக்கிறது.

மற்றும்: —

* கவிமலர்; கோகுலம் பக்கங்கள்; மங்கையர் மலர்; ஏராளச் சிறுகதைகள்; கட்டுரைகள்; புகைப் படங்கள்; பிரபஞ்சன் எழுதிய குறுநாவல்.

தீபாவளியன்றே எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.
விலை ரூ. 30/—.
ரிஜிஸ்தர் தபாலில் பெற ரூ. 37/— அனுப்பவும்.
மானேஜர், கல்கி, சென்னை — 600 032.



தமிழ் மக்கள்
உன்னைப் போல யார் இருக்காங்க?
அ.தி.மு.க. (ஜெ)
அ.தி.மு.க. (ஜா)
ராஜீவ் தமிழக விஜயம்
முதல்வர் பதவியே போற்றி!
தி.மு.க. ஆட்சி போற்றி!
தேர்தலே வருக, போற்றி!
திரளும் வாக்குகள் போற்றி!
பதவியே சரணம்!
சரணம்!
இந்திப் பிரச்னை



கல்கி

1988 நவம்பர் 6
மலர் 47 இதழ் 14
விபவ ஐப்பசி 21



கூலி கொடுத்துக் கூட்டம் சேர்க்கிறார்கள்!

ராஜீவ் காந்தி அண்மையில் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்த போது 'ஜா' அணியைச் சேர்ந்தவர்கள்; 'ஜெ' அணியைச் சேர்ந்தவர்கள் ஆகிய இரு பிரிவினருமே அவரை வரவேற்றிருக்கின்றனர். இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. அதாவது, ராஜீவ் காந்தியை, நேருவின் பேரனை, பாரதப் பிரதமரை, காங்கிரஸ் தலைவரைக் காண வந்த கூட்டம் தவிர, கூலிப் பட்டாளமும் ஏராளமாகத் தருவிக்கப்பட்டிருக்கிறது என்பது தான். கூலிப் பட்டாளத்துக்கு எந்தத் தலைவரிடமும் ஈடுபாடு கிடையாது; எந்தக் கட்சிக் கொள்கையும் தெரியாது. நாட்கூலி கொடுத்தால் அவர்கள் ஜானகி அணிக்கும் போய்ச் சேர்வார்கள்; ஜெயலலிதா அணிக்கும் செல்வார்கள்; ராஜீவ் காந்தியைக் காணவும் கூட்டமாக வந்து மொய்ப்பார்கள். எனவேதான் ஒரு பக்கம் வீரப்பன், 'காங்கிரஸுடன் சேர்வதை விடப் பிராணனை விடலாம்' என்று பேசிக் கொண்டிருக்கும் போதே இன்னொரு புறம் ஜானகி அணியினர் பலர், ராஜீவுக்கு வரவேற்புத் தந்துள்ளனர். இவ்வாறு கூலி கொடுத்துக் கூட்டம் சேர்ப்பது ஜனநாயகத்தில் அருவருக்கத்தக்கது மட்டுமல்ல; நாட்டின் பொருளாதாரத்தையே பாழ்படுத்துவதுமாகும். இது போன்ற காரியங்களுக்காகப் பல்வேறு கட்சிகள் ஏராளமான கறுப்புப் பணம் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகின்றன.

கூலிக்கு ஆள் பிடிப்பது என்ற அநாகரிகம் தமிழ் நாட்டுக்கு மட்டும் பிரத்தியேகமானது அல்ல. தில்லியிலும் உண்டு. சரண்சிங் தமது பலத்தை நிரூபிக்க லாரி லாரியாக விவசாயிகளைத் தருவித்தார். போட்டி போட்டுக் கொண்டு இந்திரா காந்தியும் தமது செல்வாக்கை உயர்த்த அண்டை மாநிலங்களிலிருந்து வண்டி வண்டியாக ஆட்களைக் கொணர்ந்தார். ராஜீவ் காந்தியும் அதே வழியைப் பின்பற்றி வருகிறார். அக்டோபர் 31—ம் தேதி ஒரு மாபெரும் பேரணி நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்.

இதை அறிந்த திகைத், இதுதான் சமயமென்று பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுடன் தில்லியில் காங்கிரஸ் பேரணி நடக்கவிருக்கும் அதே மைதானத்தில் டேரா போட்டு விட்டார். 'இங்கேயே கிராமங்களை உருவாக்குவோம்; இங்கேயே கரும்புப் பயிர் செய்வோம்' என்கிறார். இப்போதைக்கு உணவும் தண்ணீரும் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து தருவிக்கப்பட்டு அந்த விவசாயிகளுக்கு விநியோகமாகின்றன. திகைத் விதிக்கும் நிபந்தனை, 'சமீபத்திய வெள்ளம், வறட்சியால் விவசாயிகள் பெரு நஷ்டம் அடைந்துள்ளனர்; எனவே அவர்களுடைய கடன்களை ரத்து செய்ய வேண்டும்; வரிகளை நீக்க வேண்டும்' என்பன.

இப்போது அவருடைய கோரிக்கையில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்பதை விட, ராஜீவ் நடத்தவிருக்கும் பேரணியின் கதி என்ன ஆவது என்ற கவலை மத்திய அரசைப் பிடித்திருக்கிறது. எனவே திகைத்துடன் பேசி அவர் கோரிக்கைகளை ஏற்று, அல்லது கொள்கை அளவில் ஏற்பதாகக் காட்டிக் கொண்டு அவரை டேரா தூக்கும்படி செய்யத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திகைத்தின் கோரிக்கைகளில் நியாயம் இருப்பின், அவற்றைத் தில்லி முற்றுகை தொடங்கு முன்னரே கவனித்து ஆவன செய்திருக்க வேண்டும். இப்போது பணிவது, மிரட்டல் அல்லது பிளாக் மெய்லுக்கு உடன்படுவது போலத்தான். இவர்களுக்கு இன்று விட்டுக் கொடுத்தால் நாளைக்கு இதே போன்ற முற்றுகை மூலம், தகாதனவற்றைக் கூட அடைவதற்கு வேறு பலருக்கு ஊக்கம் அளித்தாகிவிடும். விவசாயிகளை அடித்து விரட்டவும் முடியாது. உயிர்ச் சேதம் மட்டுமல்ல, விரோத பாவமும் விசுவரூபமெடுக்கும். 'சில சினிமா நட்சத்திரங்களுக்கும் சில தொழிலதிபர்களுக்கும் விசேஷச் சலுகை காட்டும் அரசு, ஏன் விவசாயிகளுக்குச் சலுகை காட்டக் கூடாது?' என்ற கோஷம் எழுப்பப்பட்ட பிறகு, அரசுக்கு விட்டுக் கொடுப்பது தவிர வேறு வழிதான் என்ன?

ஜனநாயகத்தில் ஆட்சிக்கு வருகிறவர்கள் அரசியல்வாதிகளாக இருந்தால் போதாது; அரசியல் ஞானிகளாய் இருக்க வேண்டும். வருமுன் காப்பவனே தொலை நோக்கு உடையவன்; வந்த பின் சமாளிப்பவன் தொல்லை நோக்கு உடையவனே!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

வட்டமேஜை

பம்பாயை விஞ்சுமா மதுரை?

* 'தொண்டைமான் சொல்வதைக் கேளுங்கள்' தலையங்கம் யதார்த்தமானது. நமது "தமிழினத் தலைவர்கள்" மைய அரசுடன் மோதுகிறார்களே தவிர, விடுதலைப்புலிகளுக்கு அறிவுரை சொல்வதில்லை. இவர்களது விடுதலைப்புலிகளின் ஆதரவு பிரிவினை வாதத்தை தூண்டுவதாகவே அமைகிறது. தங்களது கருத்துப்படி இந்திய மண்ணில் இனிமேல் விடுதலைப் புலிகளுக்கு இடமில்லை என்ற நிலையைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதே என் போன்ற பலரின் கருத்தாகும்.

மதுரை — 7, எஸ். திருமலை

* இந்திய — இலங்கை உடன்பாடு வலுவிழந்து இருக்கின்ற இத்தருணத்தில் 'தொண்டைமானின் கருத்துக்களை அரசு பின்பற்றினால் இனி வரும் காலங்களில் ஈழத் தமிழனின் வாழ்வு பிரகாசமடையும் என்பதில் துளிக்கூட சந்தேகம் இல்லை. ஆனால் நடக்குமா என்பதுதான் கேள்விக்குறி.

சின்னமனூர், பா. புல்பமுருகேச ராஜன்.

* பிஞ்சு நெஞ்சின் ஏக்கத்தை, வறுமையின் தாக்கத்தைக் 'குடை' சிறுகதை மூலம் அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் முகிலை. இராச பாண்டியன்.

திருவாரூர், ஆரூர். த. இராஜேஸ்வரி.

* கவிஞர் கண்ணதாசன் சென்சார் அதிகாரியுடன் அடிக்கடி மோதியிருக்கிறார் என்ற செய்தியைத்தான் நான் இதுவரை அறிந்து வைத்திருந்தேன். அதிகாரியின் கருத்தைக் கேட்டு அதை இருபத்தைந்து ஆண்டுகள் கடைப்பிடித்திருக்கிறார் கண்ணதாசன் என்ற செய்தி என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. பெரியவர்கள் எப்போதுமே பெரியவர்கள்தாம்.

சென்னை — 86, எஸ். துரைக்கண்ணு.

* தம்மையும், தமது சந்ததிகளையும், மனித உரிமைக்காகப் பாடுபடும் தென்னாப்பிரிக்க விடுதலைப் போராட்டத்திற்கு அர்ப்பணித்துத் தமது தளர்ந்த 79 வயதிலும் இன்னும் புரட்சி உணர்வுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் — தென் ஆப்பிரிக்க மக்களால் 'அம்மா' என்றழைக்கப்படும் மனோன்மணி அம்மையாரை நினைக்கும் போது மெய்சிலிர்க்கிறது! அதே சமயம், தமிழக அரசியலில் உள்ள பெண்களை நினைத்தால் ரொம்ப ரொம்பக் கூச்சமாக இருக்கிறது. என்ன செய்ய?

சின்னமனூர், எம். எஸ். தாசன்.

* 'சின்னச் சின்னச் செய்திகளில்', 87—ல் நடந்த தேர்வுக்கு இன்று வரை தேர்வு முடிவுகளை வெளியிடாத பம்பாய்ப் பல்கலைக் கழகம் பற்றிப் படித்தேன். கடந்த ஜூனில் நடைபெற்ற அஞ்சல் வழி பி.ஏ. தேர்வு முடிவுகளை இன்னும் வெளியிடாத மதுரை காமராசர் பல்கலைக் கழகம் மேற்படி சாதனையை விஞ்சினாலும் விஞ்சலாம்!

பழனி, பொற்கொல்லன்.

* ஒலிம்பிக் போட்டியில் இந்தியா ஒரு பரிசுகூடப் பெறாமல் முகத்தில் கரியை பூசிக் கொண்டு விழிக்கும் இந் நிலையில், சரவணன் போன்றவர்களுக்கு அரசியல் குறுக்கீடு இல்லாமல் ஆர்வத்துடன் பயிற்சி அளித்துத் திறமைகளை வெளிக்கொணர்வதே இந்தியாவின் தலைசிறந்த நோக்கமாக இருக்க வேண்டும்! இருக்குமா?

திருச்சி, பொன். ராஜேந்திரன்

* 'விட்டுக் கொடுத்தல் மூலமே எதிராளியை வெற்றி கொள்ள முடியும்' என்ற வாழ்க்கையின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் 'இலட்சிய அம்புக'ளின் கதாநாயகி கிருபாகரியின் கவிதைத் தொகுப்புக்காகக் காத்திருக்கிறேன் நானும்!

திருக்குவளை, கவிஞர். வெற்றிப்பேரொளி.

* இன்னும் சுமார் ஓராண்டு காலம் வரப் போகும் டைவி. மகாபாரதம் பற்றி இப்போதே முடிவான விமர்சனம் எழுதி விட்டீர்களே...!


பெங்களூர் — 53, கவிஞர் 'தாரகை'

வை. கோபால்சாமி அடையும் வேதனை...

* கல்கி 16.10.88 இதழில் திரு. அப்துல்சமது தெரிவித்துள்ள செய்தி உண்மைக்கு முற்றிலும் மாறானது. ஷரியத் சட்டம் குறித்து மாநிலங்கள் அவையில் நடைபெற்ற விவாதத்தில் நான் ஆதரித்துப் பேச வேண்டும் என்று என்னிடம் ஸமது நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடிதம் மூலமோ எந்தவிதத்திலும் தொடர்பு கொள்ளவில்லை.

மாநிலங்களவையில் ஷரியத் மசோதாவை ஆதரித்துப் பேச வேண்டுமென்று தலைவர் கலைஞர் ஆணையிட்டதன் காரணமாகத்தான் நான் டில்லிக்கு விரைந்து சென்றேன். ஆதரித்துப் பேசி வாக்களித்த பின் கலைமான் சேட் அவர்களும், பனத்வாலா அவர்களும் என்னைச் சந்தித்து கலைஞர் அவர்களுக்கும், தி.மு. கழகத்திற்கும் நன்றி தெரிவித்தனர். உணர்வுபூர்வமாகப் பல்லாண்டு காலமாக வளர்க்கப்பட்டு வந்துள்ள நல்லுறவை உடைப்பதற்கு அப்துல்சமது அவர்கள் கையாள்கிற முறைகளும், பழகிய பாசத்தை மறந்து கலைஞர் அவர்களைப் பற்றிப் பயன்படுத்துகிற வார்த்தைகளும் மிகவும் வேதனையளிக்கின்றன.

அண்ணாநகர், வை. கோபால்சாமி. இராஜ்ய சபை எம். பி.



டீ காப்பியோடு சேர்த்தி: பிரிட்டானியா மாரி நேர்த்தி.



பிரிட்டானியா
மாரி

LINTAS BIN MRE P 15 2416 TM

இன்று நெருப்பு விழா

1

பம்பாய் செம்மண் நிறத்தில் விடிந்து கொண்டிருக்க—காற்றில் ஏழு டிகிரி 'ஸெல்—குளிர்' உறைந்து போய் — சாந்தாக்ரூஸ் ஏர்போர்ட்டைப் பாலிதீன் பேப்பரைப் போட்டு மூடின சைஸில் பனிப்படலமாய்ப் போர்த்தியிருந்தது. ரன்வேயில் சிவப்பு விளக்குகள் ரத்தமாய் ஒளிர்ந்தன. ஃப்ளோரஸெண்ட் வெளிச்ச — ஏர்போர்ட் லௌன்ச்சில், ஒரு ராணுவ அவசரம். ஆர்வம் ததும்பும் முகங்களோடு லௌன்ச் முழுக்க ஜனம். சூட் தரித்த ஆண்கள். சல்வார் கம்மீஸ்களிலும், சூடிதார்களிலும் — அடர்த்தியான லிப்ஸ்டிக் பூச்சோடு — பாப்தலைப் பெண்கள். கைகளில் அவிழ மறுத்த ரோஜா மொக்குகளைக் கண்ணாடித் தாளில் சுற்றி— பார்சல் செய்யப்பட்ட 'பொக்கே'க்கள். லில்லி மாலைகள். ஏலக்காய், சந்தன, ஜரிகை மாலைகள். குரங்காட்டியின் தோளில் உட்கார்ந்திருக்கும் குரங்கைப் போல் — வீடியோ காமிராவைச் சுமந்து கொண்டு அலையும் — செய்தித்துறையைச் சேர்ந்த வீடியோ-கிராபர்கள். வலது தோளில் ஒரு ஜோல்னா பை — இடது தோளில் காமிரா சகிதம் — நோட்புக்கும் பேனாவுமாய் — அலையும் உள்ளூர்ப் பத்திரிகை நிருபர்கள். 'இந்தியன் ஒலிம்பிக் கமிட்டி' என்று இந்தியில் மட்டும் பிரதானமாய் எழுத்துக்கள் தெரியும்படி — நீலநிற வெல்வெட் பேட்ஜோடு — அரை, முழு — வழுக்கைத் தலை அதிகாரிகள். பக்கத்தில் பட்டுச் சேலைகளில் அவர்களுடைய ஆடம்பர மனைவிமார்கள். அவர்களின் காது மூக்குகளில் வைரங்கள்.

லௌன்ச்சின் பிரத்யேக அறையிலிருந்து வெளிப்பட்ட இந்தியன் ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் — பூபேஷை, பத்திரிகை நிருபர்களில் சிலர் — அவசர அவசரமாய் வந்து மொய்த்துக் கொண்டார்கள்.

''ஃப்ளைட் குறித்த நேரத்தில் வந்து விடுமா...?''

''வந்துவிடும்...'' பூபேஷ் நிற்காமல் நடந்தார். அவர்கள் தொடர்ந்தார்கள். ''இன்றைக்கு எத்தனை விளையாட்டு வீரர்கள் வரப் போகிறார்கள்?''

''முப்பத்திரண்டு பேர்...''

''நீச்சல் வீராங்கனை நிலா இந்த ஃப்ளைட்டில்தானே வரப் போகிறார்...?''

''ஆமாம்...''

''இன்றைக்கு வரப் போகிற முக்கியமான விளையாட்டு வீரர்கள் யார் யார் என்பதைச் சொல்ல முடியுமா?''

பூபேஷ் நின்று — கையிலிருந்த கர்ச்சிப்பால் — நெற்றியில் பயிராகியிருந்த வியர்வைத் துளிகளை ஒற்றிக் கொண்டார். அந்தக் குளிரிலும் டென்ஷன் காரணமாய் வியர்த்துப் போயிருந்தார். கழுத்து டையைத் தளர்த்திக் கொண்டே கேள்வி கேட்ட நிருபரை ஏறிட்டுப் பார்த்து — மெல்லிய குரலில் சொல்ல ஆரம்பித்தார்.

''ஹாக்கிக் குழுவைச் சேர்ந்த பதினைந்து பேர். அத்லெடிக்கில் கலந்து கொள்ளப் போகும் சர்மா, தினேஷ், ரோஸி பால்ராஜ், சுஷ்மா பட்டேல், ஆஷாராவ், டெக்காத்லென் 'போட்டியில் கலந்து கொள்ளப் போகும் அர்ஜுன் கிருஷ்ணா, ஹெப்டாத்தலென் போட்டியில் கலந்து கொள்ளப் போகும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கயல்விழி......'' பூபேஷ் சொல்லிக் கொண்டே போக நிருபர் ஒருவர் இடைமறித்தார்.

''அடுத்த மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் இவர்களில் யார் யார் பதக்கங்களை வாங்குவார்கள் என்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறது?''

பூபேஷ் தம் சதைப்பற்றில்லாத உதடுகளைப் புன்னகையில் விரித்தார். ''எல்லோருமே பதக்கங்களை வாங்குகிற அளவுக்குச் சிறப்பாகப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.''

''ஒவ்வொரு தடவையும் ஒலிம்பிக் போட்டிகளுக்குப் போகும் போது இதே வாக்கியத்தைத்தான் சொல்கிறீர்கள். ஆனால் நம் வீரர்கள் வரும் போது வெறும் கையை வீசிக் கொண்டுதான் வருகிறார்கள். சென்ற இரு முறையும் ஒரு வெண்கலப் பதக்கம் கூட இல்லை....''

''இந்தத் தடவை அப்படி நேராது. ஒலிம்பிக் போட்டிகளுக்கு இன்னமும் ஒரு மாத காலம் உள்ளது. போட்டியில் கலந்து கொள்ளப் போகும் வீரர்கள் அனைவரும் தத்தம் சொந்த ஊர்களில் 'பிரிப்ரேட்டரி பீரியடை' முடித்துக் கொண்டு — டெல்லியில் 'மிட் சீஸன்' பயிற்சிகளை மேற்கொண்டு விட்டு — 'காம்பட்டீவ் சீசனுக்காக' பம்பாய் வரப் போகிறார்கள். இன்னும் இருபத்தைந்து நாட்களுக்கு — பம்பாயில் அவர்கள் கடுமை

ராஜேஷ்குமார்

யான பயிற்சிகளை — திறமையான 'கோச்'களின் மேற்பார்வையில் — எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்.''

வயதான நிருபர் ஒருவர் குறுக்கிட்டு கேட்டார். ''இவ்வளவு கடுமையான பயிற்சிகளை மேற்கொண்ட பின் — லண்டனுக்குப் புறப்படும் நேரத்தில் அத்லெடிக் வீரர்களுக்குக் குதிகால் வலியோ — மல்யுத்த வீரர்களுக்குத் தசைபிடிப்போ வந்து விடாதே?''

எல்லோரும் சிரித்தார்கள்.

பூபேஷ் உறுதியான குரலில் சொன்னார். ''நாம் பதக்கங்களை வெல்லப் போகிறோம். அதிலும் நீச்சல் போட்டியில் நிகிலா குறைந்தது நான்கு தங்கப் பதக்கங்களாவது தட்டிக் கொண்டு வரப் போகிறார். 'ப்ரஸ்ட் ஸ்ட்ரோக்' ஸ்விம்மிங்கிலும், 'ஃப்ரீ ஸ்டைல்' நீச்சலிலும் ஒலிம்பிக்கில் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தப் போகிறார். ஃபார்வேர்ட் டைவிலும், ரிவேர்ஸ் டைவிலும்.... நன்கு பயிற்சி பெற்றிருக்கிறார்.''

ஒரு நிருபர் படபடத்தார்.

''இந்த மாத 'ஸ்போர்ட்ஸ்' இதழில் இந்திய வீரர்கள் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளாமல் இருப்பதே கௌரவமான வழி என்று சொல்லியிருக்கிறதே? அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?''

அதுவரை சிரிப்போடு இருந்த பூபேஷின் பப்பாளி நிற முகம், கோபச் சிவப்புக்குப் போயிற்று.

''நம் வீரர்களும் வீராங்கனைகளும் எந்த நாட்டவர்களுக்கும் சளைத்தவர்கள் இடையாது. நம் வீரர்களை நாமே 'அண்டர் எஸ்டிமேட்' செய்யக்கூடாது. அப்படிச் செய்கிற பட்சத்தில் நம் வீரர்களுக்கு ஒரு 'இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளக்ஸ்' ஏற்பட்டு விடுகிறது. விளையாட்டுகளில் — தோற்பதும் ஜெயிப்பதும் சகஜம். சென்ற ஒலிம்பிக்கில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் போட்டிகளில் கலந்து கொண்டன. ஆனால் பதக்கப் பட்டியலைப் பாருங்கள். ஐம்பதுக்கும் குறைவான நாடுகள்தான் பதக்கங்களை வாங்கியிருக்கின்றன. பதக்கம் பெறாத நாடுகளெல்லாம் விளையாட்டில் திறமைக் குறைவான நாடுகள் என்று சொல்லிவிட முடியாது. தோற்பவர்கள் ஒரு விநாடியின் நூறில் ஒரு பங்கு வித்தியாசத்தில்தான் தோற்கிறார்கள்...'' பூபேஷ் சின்னதாய், கோபமாய் — ஒரு பிரசங்கம் செய்து கொண்டிருந்த அதே விநாடி —

ஏர்போர்ட் லௌன்ச்சில் பரபரப்பு அரும்பியது.

''ஃப்ளைட் ஆ.. கயா...'' — கும்பலில் ஒரு பெண் ஆகாயத்தைச் சுட்டிக் காட்ட — பூபேஷ் நிருபர்களிடமிருந்து கழன்று கொண்டார். ''ஹோட்டல் ஒபேராய் டவர்ஸுக்கு — காலை பத்து மணிக்கு மேல் வாருங்கள்... பேசுவோம்...!''

ஃப்ளைட்டைப் பார்த்ததும் — ஏர்போர்ட் முழுவதும் தீப்பற்றிக் கொண்ட மாதிரியான பரபரப்பு. பூபேஷ் கும்பலில் புகுந்து — முகப்புக்கு வந்தார். கும்பலை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த கமிட்டி அங்கத்தினர் ஒருவரைக் கூப்பிட்டார்.





"காலில் பட்டாக் கட்ட காயத்தைக் குருவிடம் காட்டினேன்..."

"என்ன சொன்னார்?"

"'காயமே இது பொய்யடா'ன்னுட்டார்!"

"மிஸ்டர் ஜோஷி..."

ஜோஷி தலை கலைந்து வேகமாய் வந்தார்.

"ஸார்..."

"செக்யூரிட்டி விங்... எங்கே?"

"முன்னாடி இருக்கிறார்கள் ஸார்."

"ஜாக்கிரதை! யாரையும் நெருங்க விட வேண்டாமென்று சொல்லிவிடுங்கள். போலீஸ்... கோ-ஆபரேஷனை எதிர்பார்க்கிறது தப்பு."

"சொல்லியிருக்கிறேன், ஸார்."

பூபேஷ் முன்னால் ஓடினார்.

விமானம் ரன்வேயின் மறுகோடியில் — பூதாகாரமான பட்சி மாதிரி கீழிறங்கி — ஏர்போர்ட்டை இலக்கு வைத்து வேகமாய் வர — லௌஞ்சில் வாழ்த்து அட்டைகளும், பேனர்களும் உயர்ந்தது. அனௌன்ஸ்மென்ட் ஸ்பீக்கரில் உயர்தரமான கான்வென்ட் ஆங்கிலம் வழிந்தது. அமைதி காக்கும்படி வேண்டிக் கொண்டது.

அடுத்த சில நிமிடங்களில் — வந்து நின்ற விமானத்தின் இடுப்போடு ஸ்டேர்ஸ் போய் ஒட்டிக் கொள்ள — கதவு விலகி — ஸ்டேர்ஸின் உச்சியில் — முதல் ஆளாய் ஹாக்கிக் குழு கேப்டன் உத்தம் தெரிந்தான். லௌஞ்சில் கரகோஷம் கிளம்பியது. தொடர்ந்து ஹாக்கி வீரர்கள் தாட்டி தாட்டியான உடம்புகளோடு — கைகளை ஆட்டிக் கொண்டு — ஸ்டேர்ஸில் உயரம் இழந்தார்கள். கூலிங்கம் மென்று கொண்டு இறங்கினார்கள்.

"அதோ... நிகிலா..." —யாரோ ஒரு பெண் கீச்சிட்டுக் கத்த — ஏர்போர்ட் மொத்த — கும்பலின் ஆரவாரிப்பு கிளம்பிய அதே நேரத்தில் — ஸ்டேர்ஸின் விளிம்பில் நிகிலா பிரசன்னமானாள். பாப் தலைமுடியும், கட்டியிருந்த ஷிபான் சேலையும் காற்றில் வேகமாய் அலைய — நிகிலா ரோஸ்மில்க் நிற ஈறுகள் தெரியச் சிரித்து — கைகளை ஆட்டினாள். ஸ்விம்மர்களுக்கே உரித்தான மெலிதான உடம்பு. கட்டுப்பாடான உணவின் உபயத்தால் எங்கெங்கு சதை போட வேண்டுமோ... அங்கு மட்டும்... சதை போட்டிருந்தாள். ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல வேண்டும் என்கிற தவிப்பு கண்களில் தெரிந்தது.

நிகிலாவைத் தொடர்ந்து கயல்விழி, ரோஸி பால்ராஜ், சுஷ்மா பட்டேல், பாமா, ஆஷாராவ், தினேஷ், அர்ஜுன் கிருஷ்ணா... ஹாக்கி கோச் குருதேவ் சிங்...

லௌஞ்சில் அரவணைப்பு, உச்சத்திற்குப் போயிற்று. கும்பல் 'பொக்கே'க்களை ஆட்டிக் கொண்டு — போலீஸ் வளையத்தை உடைக்க முயன்றது. ஸ்பீக்கரில் அமைதி காக்கும்படி — இந்தியிலும், ஆங்கிலத்திலும் வழிந்த அறிவிப்புகள் ஜனங்களின் காதுகளை எட்டாமலேயே — வீணாயிற்று.

லௌஞ்சுக்குள் பிரவேசித்த வீரர்களை விடியோ காமிராக்கள் வெளிச்சத்தோடு விழுங்க — ஏராளமான ஃப்ளாஷ் காமிராக்கள் எட்டு திசைகளிலிருந்தும் கண்களைச் சிமிட்டின. பத்திரிகை நிருபர்கள் கூடவே ஓடிவந்து — உத்தமிடமும், கயல்விழியிடமும் சின்னச் சின்ன கேள்விகளாய்க் கேட்டார்கள்.

"தற்போதைய ஹாக்கி டீம் எப்படியுள்ளது?"

"அருமையான வீரர்கள்."

"தங்கம் வெல்லுவீர்களா?"

"நிச்சயம்."

"பாகிஸ்தான் வலுவுள்ள அணி என்று கூறப்படுகிறதே?"

"அதைவிட வலுவான ஆஸ்திரேலியா அணியையே உலகக் கோப்பைக்கான போட்டியில் தோற்கடித்திருக்கிறோம்..."

"மிஸ் கயல்விழி! ஹெப்டாத்தலேன் போட்டியில் இந்தியா சார்பாகக் கலந்து கொள்ளப் போகும் முதல் பெண்மணி நீங்கள் தான். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

கயல்விழி சிக்கனமாய்ப் புன்னகை புரிந்தாள்.

"பெருமைப்படுகிறேன்."

"ஹெப்டாத்தலேன் போட்டியில் எந்த விளையாட்டு உங்களுக்குச் சிரமமாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?"

"ஜாவ்லின் த்ரோ..."

"ஏன்...?"

"சீனாவைச் சேர்ந்த டாங் யாவா வியும், மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த சோபியா செளராவும் எனக்குக் கடுமையான போட்டியாளர்களாக இருப்பார்கள்." கும்பலில் நீந்தி முன்னால் வந்த — பூபேஷ் பத்திரிகை நிருபர்களை ஒதுக்கிக் கொண்டே, "இந்த கூட்டத்தில் எந்தக் கேள்விகளும் வேண்டாம்... ஹோட்டல் ஓபராய் டவர்ஸுக்கு வாருங்கள். அங்கே உங்கள் பேட்டியை வைத்துக் கொள்ளுங்கள். ப்ளீஸ்... நகருங்கள்..." வழி ஏற்படுத்த முயன்றார், தோற்றார்.

விளையாட்டுக் குழுவைச் சேர்ந்த அனைவருமே மூர்க்கமாக மொய்க்கப் பட்டார்கள். சந்தன மாலைகளும், ஜரிகை மாலைகளும் சரமாரியாய் விழ — 'பொக்கே'க்கள் வலுக்கட்டாயமாய்த் திணிக்கப்பட்டன. ஆட்டோகிராப்புக்காக நூற்றுக்கணக்கான டயரிகள் நான்கு பக்கங்களிலிருந்தும் முளைத்து நீண்டன.

பூபேஷ் போலீஸைப் பார்த்துக் கத்தினார்.

"அவர்களைக் காருக்குக் கொண்டு போக வேண்டும்... கும்பலை விலக்கி உதவுங்கள்."


PHILIPS
PHILIPS
வளமான
வாழ்வு வழங்குவது
பிலிப்ஸ்
பிலிப்ஸ் வீட்டுபயோக சாதனங்கள்
உங்கள் சொகுசான வசதியான வாழ்விற்கேற்ப விசேஷமாக அழகுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன—பிலிப்ஸ் வீட்டுபயோக சாதனங்கள்— நீங்கள் சிறப்பாகவும் விரைவாகவும் வேலை செய்திட உதவிடும். ஆகவே உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் நேரம் மிச்சம்.
பிலிப்ஸ் இஸ்த்திரி பெட்டியால் இஸ்த்திரி செய்வதே அலாதி மகிழ்ச்சி. அட்டாச்மெண்ட்டுடன் கூடிய மிக்ஸர் கிரைண்டர் மூலம் சமையல் வேலைகள் செய்வதில் சலிப்பே இல்லை. அத்துடன் பிலிப்ஸ் சிட்ரஸ் பிரஸ்ஸில் நொடியில் சாறு பிழியலாம்.
அது, ஆரோக்கியத்துடன் கூடிய அற்புத சுவை அளிக்கிறது. பிலிப்ஸ் சுவற்றுக் கடியாரம் மற்றும் மேஜை கடியாரம் உங்களுக்கு நல்ல நேரம் காட்டுகின்றன.
பிலிப்ஸ் நம்பிக்கை-சிறந்த வாழ்க்கை

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தன் தலைமையில் — கான்ஸ்டபிள்களோடு கும்பலை நெட்டித் தள்ள — கிடைத்த இடைவெளியில் பூபேஷ் வீரர்களைக் கூட்டிக் கொண்டு போனார்.

ஏர்போர்ட்டுக்கு வெளியே — கார்கள் வரிசையாய் நின்றிருக்க — ஒவ்வொரு காராய்க் கையசைத்துக் கூப்பிட்டு — அது வந்து நின்றதும்—காரின் பின்பக்கக் கதவைத் திறந்து — வீரர்களை ஏற்றினார். டிரைவர்களிடம் குனிந்து சொன்னார்.

''காரை எங்கும் நிறுத்தாதீர்கள்... ஹோட்டலின் போர்டிகோவில் போய்த்தான் நிறுத்த வேண்டும்...''

கார்கள் கும்பலை விலக்கிக் கொண்டு 'குபுக் குபுக்'கென்று கிளம்பின. ஹாக்கி காப்டன் உத்தமும், கோச் குருதேவ் சிங்கும் கும்பலினின்றும் பிய்த்துக் கொண்டு — அந்த அம்பாஸிடர் காரில் ஏறினார்கள்.

'பொக்கே'க்கள் காருக்குள் திணிக்கப்பட்டன. பூபேஷ் கத்தினார்: — ''டிரைவர்! சீக்கிரம் வண்டியை எடுங்கள்...''

கார் அரை வட்டம் அடித்துக் கொண்டு— கான்க்ரீட் ரோட்டில் வேகமாய்ப் பீறிட்டது.

''ஜனங்களின் இந்த ஆர்வத்திற்காகவாவது... ஹாக்கியில் தங்கப் பதக்கத்தை வெல்ல வேண்டும்... உத்தம்...'' கோச் குருதேவ்சிங் சொல்ல —

தோள்களைக் குலுக்கி — உத்தம் சிரித்தான்.

''எனக்கும் அதே எண்ணம்தான். ஆனால் நம் அணி இடம் பெற்றுள்ள 'ஏ' வரிசையில்எல்லாமேபலம்வாய்ந்தஅணிகள். கிரேட்பிரிட்டன், வெஸ்ட் ஜெர்மனி டீம்களோடு நாம் தாக்குப் பிடித்து விளையாட முடியுமா... என்பது சந்தேகமாக உள்ளது...''

''இந்தத் தடவை நாம் தங்கம் வெல்லவில்லையென்றால்... ஹாக்கி விளையாடுவதை விட்டுவிட வேண்டியதுதான்...'' சொன்ன குருதேவ் சிங்கின் பார்வை — உத்தமின் மடியிலிருந்த 'பொக்கே'யின் மேல் தாவிய போது —'தாடி — மீசை — டர்பனுக்குள்' — முகம் மாறினார்.

''உத்தம்...'' கொஞ்சம் கலவரமாய்க் கூப்பிட்டார்.

''ம்...''

''அந்த'பொக்கே'யைஎன்னிடம்கொடுங்கள்...''


உத்தம் கொடுத்தான்.... புரியாமல்... அவரைப் பார்த்தான். குருதேவ் சிங், 'பொக்கே'யின் கண்ணாடித் தாளை உருவி — உள்ளேயிருந்த பூங்கொத்துக்களை அள்ள — அதன் நடுவே —

உயிரோடு —

'டிக்... டிக்...' —என்று முனகிக்கொண்டு—

அழகான பாசி பச்சை நிறத்தில் — கோழி முட்டை சைஸில் — வெடிக்கப் போகிற கடைசி விநாடிகளோடு — ஒரு டைம்பாம் — உட்கார்ந்திருந்தது.

(தொடரும்)



''50%தள்ளுபடியில்விற்கிறதா போர்டு எழுதி வெச்சிருக்கீங்களே... ரொம்பப் பழசோ...?''

''இல்லீங்க. புதுசா எழுதின போர்டு தான்!''

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

• • • • • • • • • • • • • •




அரசியல்வாதி 1: தலைவரோட கல்யாணத்துலகூட தலைவருக்குப் பணத் தாசை விடலைன்னு எப்படி சொல்றீங்க?

அரசியல்வாதி 2: தலைவர் கழுத்துல மணப்பெண் மாலை போடற சமயம், 'மாலைக்குப் பதிலா பணமாக் கொடுத்துடு'ன்னு சொன்னாரே!

— எஸ். முகம்மது யூசுப்.

• • • • • • • • • • • • • •



கணவன்: அடியே, இந்தத் தீபாவளிக்கு நான் எடுத்துக் கொடுத்த புடைவை சரியில்லேன்னா அதுக்காக, நீ இப்படி கோஷா போட்டுமூடிக்கிட்டு என் பின்னாடி நடந்து அவமானப்படுத்தறது கொஞ்சம்கூட நல்லாயில்லை...!

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.

படித்தவர்கள்

எதிர்பாராத – மின்னல் – இடி – குண்டு வெடிப்பு – இவற்றில் ஒன்றைக் கண்டது போல் அங்கிருந்தவர்கள் அதிர்ந்து போயிருந்தனர்.

இதற்கு முன் இதுபோன்ற இடியோசையை அந்த மருத்துவமனையில் அவர்கள் கேட்டதில்லை.

வந்தது வரட்டுமென்று அவன் துணிந்து விட்டிருந்தான்.

''உங்கப்பன் வீட்டுச் சொத்தையா எடுத்தாந்து கொடுக்கச் சொல்றோம்... நான் மருந்து வாங்கியாரல. இங்க இருக்கற மருந்தையே போடு. தர்ம ஆஸ்பத்திரியில மருந்து வச்சுக்கிட்டே இல்லேன்னு சொன்னா.... நாங்க என்ன இளிச்ச வாயங்கன்னு நெனைச்சுக்கிட்டியா?''

கம்பவுண்டர் பதிலுக்குச் சீறினான், ''வாய அடக்கிப் பேசு. மருந்து இல்லேனு சொன்னா உனக்குப் புரியாதா?

''இல்லேன்னு சொல்றது புரியுது! ஏன் இல்லேனு சொல்றேனும் தெரிஞ்சு போச்சு!''

''என்னாத்தப் பெரிசா உனக்குப் புரிஞ்சி போச்சு?''

''நீ மருந்து இல்லேன்னு சொல்றே. அந்த ஆளு என்னடான்னா, உன் கையில பணத்தை வச்சா ஊசி போடுவேன்னு சொல்றான். அப்போ... காசு குடுத்தா மட்டும் மருந்து ஆகாசத்துல இருந்து வந்து குதிக்குமா? இல்லேன்னா வந்தது பறந்து போயிடுமா?'' — வீராச்சாமியின் சத்தம் காம்பவுண்ட் எல்லையையும் தாண்டிக் கொண்டிருந்தது.

இப்படி சிங்கமென வீராச்சாமி கர்ஜிக்க, இவன் கொஞ்சம் பெரிய ஆளாக இருப்பான் போல் இருக்கே என்றும், ஆனாலும் சட்டெனத் தாம் விட்டுக் கொடுத்து விட முடியாதே என்றும் கம்பவுண்டர் மாறி மாறி எதையெதையோ கூறிச் சமாளித்துக் கொண்டிருந்தார். இருந்தாலும் வீராச்சாமியின் தாக்குதலில் ஆடிப் போய் விட்டிருந்தார் கம்பவுண்டர். இந்த மனுஷன் கதிர்வேலு ஆழம் தெரியாமல் — ஆள் தெரியாமல் — காலை விட்டுத் தொலைத்திருப்பது தெரிந்தது. கதிர்வேலு இவருடைய ஏஜெண்டுதான். ஆனால் எந்தப் புற்றில் எந்தப் பாம்போ என்கிற பயம் இருந்திருக்க வேண்டாமோ? இருந்தாலும் இப்போது அவருக்கு வேறு வழியிருக்கவில்லை. அவரும் முரட்டுத்தனமாகக் கத்தினார்....

''எவண்டா அவன் ஒனக்கு நாங்க மருந்த வச்சுக்கிட்டே இல்லேன்னு சொல்றோம்னு சொன்னது? எவண்டா உள்ள பூந்து பார்த்தவன்?''

''அதோ... அந்தப் பச்சச் சட்டை போட்ட ஆளு... ''வெளியில போயி ஏன் முப்பது நாப்பது குடுத்து வாங்குறே? மருந்து இங்கேயே இருக்கும். நான் வேணா கம்பவுண்டர் கிட்டச் சொல்றேன். ஒரு இருவது ரூபா குடுத்தாப் போதும்'னு சொன்னான்...''

கம்பவுண்டர், கதிர்வேலு அங்கே இல்லாததை உறுதி செய்து கொண்டு, ''எவண்டா அவன், அவனக் கூப்புடு!'' என்றார்.

வீராச்சாமி அவசரமாக வராந்தா முழுக்கக் கண்களை ஓட்டினான். கதிர்வேலு இவனுடைய முதல் சத்தத்தின் போதே நழுவிப் போய் விட்டிருந்தான். அவனைக் காணாததால் கொஞ்சம் திகைத்தாலும் வீராச்சாமி மடங்கி விடவில்லை. அவன் விடாது பேசினான், ''யோவ், அவன் எங்கயோ போயிப் புகுந்துக்கிட்டதுனால, அடிச்சுப் பேசுறியா? அவன் உன் புரோக்கருதான்யா! நான் வேணாச் சத்தியம் பண்றேன். மருந்து உள்ள இருக்கு. பெரிய அதிகாரிங்க வந்து செக் பண்ணட்டும். மருந்து இல்லேன்னா நான் ஒனக்கு ஆறு மாசத்துக்குச் சேவகம் பண்றேன். மருந்து இருந்துட்டா நீ என்னா செய்றே?'' என்று கேட்டவன், ''மரியாதையா ஊசி போட்டுட்டு மரியாதையா வீடு போய்ச் சேரு'' என்றான்.

''என்னடா, மரியாதை கிரியாதைனு வாய் நீளுது. இடியட். வெளியே போடா! ஊசி போட முடியாது'' என்று கம்பவுண்டரும் எகிறினார்.

''கழுதப் பயலே, என்னடா இங்கிலீஸ்ல திட்டுறே. கொர வளையக் கடிச்சுத் துப்பிடுவேன். எங்கிட்ட வச்சுக்காதே.''

கம்பவுண்டருக்குப் பயம் வந்து விட்டது. வீராச்சாமி ஆளும் அப்படித்தான் இருந்தான். ஒருவேளை சொல்கிறபடி செய்தாலும் செய்து விடுவானோ என்னவோ!

நல்ல கருப்பு – வைரம் பாஞ்ச... என்று சொல்வார்களே, அப்படிப்பட்டதொரு உடம்பு. இளமையும், சத்தியமும் கொப்பளிக்கும் கண்கள் – இதுதான் வீராச்சாமி.

அவனது கிராமத்தில் அவனுக்கு நல்ல பெயர். கழனிக்காட்டுத் தகராறில் இருந்து, பெண் பிள்ளைகள் பிரச்னை வரை எதுவாயிருந்தாலும் பஞ்சாயத்துக் கூடுகிற போது, பெரிசுகள் இவனையும் சேர்த்துக் கொள்ளத் தவறுவதில்லை. 'நல்ல பையன்... தைரியசாலி' என்பது ஊர் அவனுக்குச் செய்யும் சிறப்பு.

இந்தச் சண்டைக்குக் காரண கர்த்தாவான அவன் கூட வந்திருந்த அவனது நோயாளித் தந்தைக்கோ தர்மசங்கடம். பையன் சத்தம் போடப் போட அவருக்குப் பயமாகவும் இருந்தது; அதே சமயம் மகன்

அருவி

காரியத்தில் உள்ள நியாயமும் புரிந்தது.

நாயாகக் காத்திருந்து, சீட்டு வாங்க நாலணாக் கொடுத்து, டாக்டரைச் சேவித்து ஊசி போட கம்பவுண்டரிடம் வந்தால்... அந்த ஆள் 'கடைக்குப் போய் மருந்து வாங்கி வா; சுமார் நாற்பது ரூபாய் ஆகும்' என்கிறான். மொத்தம் பத்து நாளைக்குப் போட்டுக் கொள்ள வேண்டுமாம். சொந்தத்தில் நாற்பது ரூபாய் கொடுத்து ஊசி போட்டுக் கொள்வதென்றால், இது என்ன தர்ம ஆஸ்பத்திரியா? அல்லது நடப்பதுதான் சர்க்காரா என்று தான் வந்தது அவருக்கு.

கீழ விழுந்து மேல விழுந்து, எப்படியோ சமாளித்து, பஸ் சார்ஜுக்கும் அன்றைய செலவுக்கும் பணம் திரட்டிக் கொண்டு வரவே அவர்களுக்குப் போதும் போதும் என்றாகியிருந்தது.

அவர் மிகுந்த வருத்தத்தோடு 'இப்ப என்ன செய்யறது?' என்று மகனிடம் கேட்டுக் கொண்டிருந்த போதுதான் அந்த பச்சைச் சட்டை மனிதன் வந்து, இவர்கள் சீட்டை வாங்கிப் பார்த்து விட்டுக் 'கடையில் நாற்பது ரூபா ஆகும்; ஆ னா கவலப்படாதீங்க, ஒரு இருவது ரூபாய ரகசியமா கம்பவுண்டர் கிட்டத் தள்ளினா எல்லாம் அவரு பார்த்துக்குவாரு...' என்று சொன்னான். அப்போதுதான் வீராச்சாமிக்கும் ரத்தம் சூடேறிப் போனது.

இருந்தாலும் இப்போது அவர் மெதுவாக மகனிடம், "சரி போவுது விடு வீராச்சாமி நாம கிராமத்துலயே பாத்துக்கலாம். இது என்னா பெரிய சிக்கு!" என்றார்.

ஆனால் வீராச்சாமி விடுவதாயில்லை. "இல்லேப்பா, இதுல ரெண்டுல ஒண்ணு பாக்காம விடுறதில்ல. இவனுக கிராமத்தான் பூராவையும் இளிச்சவாயனா நெனைச்சுட்டானுக..." என்று மீண்டும் ஆரம்பித்து விட்டான்.

இந்தக் கட்டத்தில் ரவுண்ட்ஸ் வர ஆரம்பித்திருந்த சீஃப் வராந்தாவின் தென் முனையில் தென்பட்டார். அவரை முதலில் பார்த்தவன் வார்டு பாய் வெள்ளைச்சாமி. அவன் பதறிப் போய், "சார்! சீஃப் வர்ராரு" என்று கம்பவுண்டரிடம் சொல்லிவிட்டு, வீராச்சாமியிடம் திரும்பி, "சரி விடு தம்பி, சத்தம் வேணாம். சீப் வர்ராரு. அப்புறம் பேசிக்க





லாம், ஒனக்கு ஊசிதானே போடணும்'' என்று சமாதானத்திற்குத் தலைகுப்புற இறங்கினான்.

''வரட்டுமே! எனக்கென்ன பயமா? வரட்டும். அவருக்கிட்டயே சொல்றேன்...'' என்றான் இவன்.

வீராச்சாமியின் குரல் சீஃப்புக்கும் கேட்டு விட்டது. நடந்து விட்டதை உணர்ந்து கொண்ட சீஃப் அவராகவே அங்கே வந்தார்.

''என்ன விஷயம், என்ன கூட்டம் இங்கே?''

''ஒண்ணுமில்லே சார்...'' என்று வெள்ளைச்சாமி மறைக்கு முன்பே வீராச்சாமி அவரிடம் விஷயத்தைப் புட்டு வைத்துவிட்டான்.

சீஃப் சற்றே இமைகளைத் தாழ்த்திக் கொண்டு யோசித்தார். இதெல்லாம் அவர் அறியாததல்ல; நடந்திருக்கக் கூடியதுதான். இதன் முதல் மூலகர்த்தா இந்த கம்பவுண்டர் மட்டுமாக இருக்க முடியாது. ஒரு பெரிய கூட்டணியே இருக்கும்; அந்த புரோக்கர் முதல் டாக்டர் வரை! இவர்களை அவ்வளவாக ஒன்றும் செய்து விடவும் முடியாது. ரொம்ப மிரட்டினால் தம் மேலேயே பெட்டிஷன் போடுவார்கள். பொலிட்டிகல் பிரஷர் கொண்டு வருவார்கள். சும்மா பொய் மிரட்டுத்தான் மிரட்ட முடியும்.

அவர் கம்பவுண்டரிடம், ''என்ன விஷயம்?'' என்றார்.

கம்பவுண்டர் தயங்கியபடி, ''அந்த 'டிரக்ஸ்' ஸ்டாக் இல்லீங்க சார்'' என்றார்.

சீஃப் ஆங்கிலத்தில், ''நான் சோதனை போடலாமா?'' என்று கேட்க, கம்பவுண்டரின் தடுமாறிய பதிலே உண்மையைப் பேசி விட்டது.

இருந்தாலும் சீஃப் அவரைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. அப்படிச் செய்தால் இன்று மாலையே அனைவரும் கூடி 'பப்ளிக் முன்னால் தங்கள் ஆசாமி ஒருவனை இன்சல்ட் செய்து விட்டதற்காக ராஜினாமாச் செய்' என்று கோஷம் எழுப்பி விடுவார்கள்.

சீஃப் இரண்டிற்கும் மத்தியில் ஒரு காரியம் செய்தார். கையிலிருந்த, வீராச்சாமி கொடுத்த 'பிரிஸ்கிரிப்ஷன் சீட்டிலேயே, 'சப்ளை' என்று ஸ்டோருக்கு எழுதி அதை வெள்ளைச் சாமியிடம் கொடுத்து, ''வாங்கி வந்து கொடு'' என்று சொல்லி விட்டு நகர ஆரம்பித்தார். அதோடு, வீராச்சாமியைப் பார்த்து, ''ஸ்டோர்ல இருந்தே கொடுக்கச் சொல்லியிருக்கேம்ப்பா போட்டுக்க...'' என்றவர், எதனாலோ அவன் மேல் ஒரு பிரியம் எழ, லேசாகத் தட்டிக் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்.

வீராச்சாமி, ''ரொம்ப நன்றிங்க அய்யா'' என்றான்.

சற்றுநேரத்தில்வெள்ளைச்சாமி,ஸ்டோரிலிருந்து மருந்து கொண்டு வந்தான்.

கம்பவுண்டரின் முகம் ரொம்பத்தான் வாடிப் போய் விட்டது.

மற்றவர்கள் மத்தியில் வீராச்சாமி ஒரு வெற்றி வீரனாக நின்றான்.

அப்புறம், வீராச்சாமியின் தகப்பனை உள்ளே கூப்பிட்டார்கள். வீராச்சாமியும் கூடப் போன போது, ''நீ வெளியில இரு'' என்று சொல்லி விட்டார்கள்.

சற்று நேரத்தில் அவர் ஊசி போட்டுக் கொண்டு வெளியே வந்தார்.

படியிறங்கும் போது வீராச்சாமி கேட்டான். ''ஊசி போட்டாங்களா?''

''போட்டாங்க.''

''இப்ப எப்படி இருக்கு?''

''அதுக்குள்ள எப்படித் தெரியும். நாலு ஊசியாவது போட்டாத்தானே தெரியும்.''

அவர்கள் காம்பவுண்டைத் தாண்டிய போது, வீராச்சாமி வெற்றிக் களிப்பில் மிதந்தான். என்ன இருந்தாலும் இளைஞன் அல்லவா! இது அவனது சட்டையில் ஒரு பதக்கம் அல்லவா?

இவர்கள் வெளியேறியதைப் பெட்டிக் கடை வாசலில் நின்று பார்த்த கதிர்வேலு நேராகக் கம்பவுண்டரிடம் வந்தான்.

அவனைப் பார்த்த கம்பவுண்டர் நறநற வென்று பல்லைக் கடித்தார். ''என்யா மூளை இருக்கா? ஆள் தெரியாமப் பேசி மாட்டி வச்சுட்டியே?''

''கோவிச்சுக்காதிங்க சார். ஏதோ பட்டிக் காட்டுக்காரன்தானேனு சட்டுனு பேச்சை விட்டுட்டேன்.''

''அவன் சீஃப் வரையிலும் போயிட்டான்யா.''

''அப்புறம், சீப் என்ன சொன்னாரு?''

''அவரு ஒண்ணும் சொல்லலை. புதுசா ஸ்டோர்ல இருந்து சப்ளை செய்யச் சொல்லி எழுதிக் கொடுத்துட்டுப் போயிட்டாரு.''

''ம்.''

சற்று நேரம் கழித்துக் கதிர்வேலு சொன்னான், ''பய துடியான பய. பட்டிக்காட்ல பொறந்துட்டு, கொஞ்சம் கூடப் பயப்படலியே! சீஃப் வரையிலயும் போயி, காரியத்தைச் சாதிச்சுக்கிட்டுப் போயிருக்கானே...''

இதற்கு கம்பவுண்டர் இளக்காரமாகச் சொன்னார், ''ஆமா சாதிச்சான்! யோவ், ஆயிரம் சொல்லு, படிச்சவன் படிச்சவன் தான்; பட்டிக்காட்டான் பட்டிக்காட்டான் தான்.''

''என்ன சொல்றீங்க?''

''அவன் என்ன சத்தம் போட்டா என்ன, சீஃப் கிட்டப் போனா என்ன, ஸ்டோர்ல இருந்து மருந்து வாங்கியாந்தா என்ன? கடைசியில இந்த கம்பவுண்டர்கிட்ட இருபது ரூபாயைத் தள்ளாம ஒண்ணும் நடக்காதுய்யா. கடைசியில அவன் அப்பன் என்ன ஊசி போட்டுக்கிட்டுப் போனான் தெரியுமா?''

''என்ன ஊசி?''

''ஸ்ட்ரெப்டோமைசின் இல்லை. சுத்தமான டிஸ்டில்டு வாட்டர்...''

''ஓகோ!'' என்று முதலில் வியந்த கதிர்வேலு பின்பு பெரிதாகச் சிரித்துப் பொங்கி வழிந்தான்!

மாதவன் நாயரின் மகத்தான சாதனை...

பச்சைப் புல்வெளி முன்னணி. வட்ட வடிவமான — வலுவான கட்டடம். ஒன்றரை ஆள் உயரத்திற்குக் கலைநயம் மிக்க தேக்குக் கதவு. கதவு திறந்து நாம் அனுமதிக்கப் பட்டதும் எங்கிருந்தோ மெல்லிய தம்பூரா மீட்டல். எதிரே மின் வெளிச்சத்தில் நம்மை வரவேற்கும் கேரள இள நங்கை. "ஹலோ" என்று சொல்லுங்கள். பதில் வராது. அட, அவள் ஒரு பொம்மை!

தம்பூரா ஒலி தேய்ந்து ஸ்பீக்கரில் நம்மை மியூசியத்திற்கு வரவேற்கும் குரல். ஒளியும் ஒலியும் கலந்து நம்மை ஒவ்வொரு கட்ட மாக நகரச் சொல்கிறது.

எர்ணாகுளத்திலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் உள்ள பத்தடி பாலம் என்ற ஸ்டாப்பிங். அதன் வெகு அருகே —

கேரள சரித்திரமும் — அதை உருவாக்கிய வர்களும் என்று நம்மை அழைக்கும் மியூஸியம். மியூஸியம் என்றால் அரசாங்கமும், தொல்பொருள் ஆராய்ச்சித் துறையும் கலந்து, உழைத்து உருவாக்கிய மியூஸிய மில்லை.


ஒரு தனிநபர் — மாதவன் நாயர் என்ற எழுபது வயதைக் கடந்த மனிதர் உருவாக்கிய மியூஸியம். மாதவன் நாயரைப் பற்றி அப்புறம். முதலில்...

ஆதி மனிதனின் கற்கால வாழ்க்கையில் துவங்குகிறது கேரள சரித்திரம்.

ஒவ்வொரு கட்டத்திற்கும் தனியே ஒளி அமைப்பு. ஒரு முக்கிய காட்சியைப் பதுமைகளாக வடித்திருக்கும் அழகு நம் கண்களைக் கட்டிப் போடும் நேரத்தில் அந்தச் சரித்திரப் பின்னணியை விளக்கும் மறைவிடத்துக் குரல்.

கிறிஸ்துவிற்கு ஆயிரம் வருடங்கள் முன்பே கேரளத்தை ஆக்ரமித்த ஆரியர்கள், கி.பி. 52—ல் கேரளத்திற்கு கிறிஸ்துவ மதத்தைக் கொண்டு வந்த புனித தாமஸ், பத்தாம் நூற்றாண்டில் பிரபலமாயிருந்த தேவதாசி முறை, பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் போர்ச்சுகீசியத்தைக் கொண்டு வந்த வாஸ்கோ—ட—காமா, பதினாறாம் நூற்றாண்டில் மலையாள மொழியைச் சீர்ப்படுத்திய ராமானுஜ எழுத்தச்சன், ஓவியத்தில் காவியம் படைத்த ராஜா ரவிவர்மா, கொச்சின் துறைமுகத்தை உருவாக்கிய ஸர் ராபர்ட் பிரிஸ்டோ —

முப்பத்தைந்து வெவ்வேறு கட்டங்களில் சரித்திரத்தை ஒரு சுவாரஸ்யக் கதை போல் சொல்லியிருக்கும் முறை பிரமிக்க வைக்கிறது. பதுமைகளிலும், அவற்றிற்கு அணிவித்திருக்கும் அந்தந்த காலத்திய உடை அலங்காரங்களிலும், மியூஸியத்தை நிறுவியவர் எத்தனை அக்கறையும், கச்சிதமுமாக திட்டமிட்டிருக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி பிரதிபலிக்கிறது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் சரித்திரப் புத்தகத்தின்



சரித்திரம் சொல்லும்...

பக்கங்களில் வாழ்ந்து விட்டுத் திடீரென்று இன்றைய உலகிற்குள் வெளிநடக்கும் போது கொஞ்சம் வருத்தமாகக் கூட இருக்கிறது.

இந்த அற்புதமான தனியார் மியூஸியத்தை உருவாக்கியுள்ள மாதவன் நாயரை உடனே பார்க்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்படுகிறது.

சரித்திரம் படைத்தவரைச் சந்தித்த போது —


மாதவன் நாயர். எளிமையான கதர் வேட்டி, கதர் ஜிப்பா, நடையிலோ, குரலிலோ தென்பட்டு விடாத எழுபத்து மூன்று வயது. வசிக்கும் வீட்டிலும் திரும்புமிடமெங்கும் கலைநயம் பேசும் ஓவியங்கள், வேலைப்பாடுகள். ஆனால் குழந்தை, குட்டி, பேரன், பேத்தி ஒன்றுமே கண்ணில் தென்படவில்லை. மாதவன் நாயர் கல்யாணமே செய்து கொள்ளவில்லையாம்!

"ஏன் சார் அப்படி?"

"இன்றைக்குக் கேட்டு என்ன பிரயோஜனம்?" சிரித்தார். "அடிப்படையில் நான் பிஸினஸ்மேன். மீன்களைப் பதப்படுத்தி, ஏற்றுமதி செய்வதில் முக்கியமான பங்கு வகித்தவன். கல்யாணத்திற்கெல்லாம் நேரமில்லை...."

"பிஸினஸ் மேனுக்கு சரித்திரத்தில்







எப்படி நாட்டம் வந்தது?''

''ஆச்சரியமாயிருக்கிறதா? நான் எம்.ஏ. ஹிஸ்டரி படித்தவன். சரித்திரத்தில் எனக்கு என்றைக்கும் விருப்பம் உண்டு. பின்னி லிருந்து நான் ஓய்வு பெற்ற போது, எனக்கு எவ்வளவோ கொடுத்த சமுதாயத்திற்கு நான் பதிலுக்கு ஏதாவது தர வேண்டும் என்று முடிவு செய்தேன். 'கண் ஆஸ்பத்திரி கட்டு' என்றார்கள் சிலர். 'வயதானவர்களுக்குக் கருணை இல்லம் ஆரம்பியேன்' என்று ஐடியா கொடுத்தார்கள் நண்பர்கள். 'இதெல்லாம்தான் ஏற்கெனவே இருக்கிறதே, நான் வேறு விதமாய்ச் செயல்பட வேண்டும்'' என்று சிந்தித்தேன். வெகு சுலபமாகக் கடந்து வந்த பாதையை மறக்கிறவர்கள் நாம். சரித்திரம் பற்றி இன்றைய மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வித்தியாசமாக விளக்க நான் எடுத்துக் கொண்ட முயற்சிதான் இந்த மியூஸியம்.

''அரசாங்கம் எந்தவிதத்தில் உங்களுக்கு உதவியது?''

''அரசாங்கமா! அரசாங்கத்திற்கும், தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கும் இந்த மியூஸியம் இருப்பது கூட இன்று வரை தெரியுமோ, தெரியாதோ! நான் அவர்களிடம் உதவி கேட்டு எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தப்பட விரும்பவில்லை. மியூஸியம் நிறுவப்பட ஆன செலவு இருபத்தாறு லட்சமும் என் பணம். இங்கேயே பொம்மைகளும், பதுமைகளும் தயார் ஆயின.. பத்து வருட இடைவிடாத உழைப்புத்தான் இந்த மியூஸியம். சரித்திரத்தை ஆராய்ச்சி செய்து அந்தந்தக் காலத்திய சூழ்நிலை, உடையமைப்புகள் — இவற்றைக் கவனமாக முடிவு செய்தேன்.. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த செயிண்ட் தாமஸ் என்ன உடை அணிந்திருந்தார் என்பது பற்றி என் கிறிஸ்துவ நண்பர்களால் கூடச் சொல்ல முடியவில்லை. அப்புறம் பிரசித்தி பெற்ற 'LAST SUPPER' ஓவியங்களில் ஏசு கிறிஸ்துவும் அவர் சீடர்களும் எந்த உடை அணிந்திருந்தார்கள் என்பதைக் கவனித்து அதன்படி தாமஸிற்கு உடை அமைத்தேன்...''

''மியூஸியத்தை அமைத்ததில் உங்களுக்கு நிறைவிருக்கிறதா?''

''குரூப் குரூப்பாக மாணவர்களும், குழந்தைகளும் வந்து பார்க்கும் போது, மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஒவ்வொரு மாநிலத்திலும், பணக்காரர்கள் இதைப் போன்ற சரித்திர மியூஸியங்களை சுவாரஸ்யமாக அமைத்து அந்தந்த மாநிலத்துச் சரித்திரத்தை இன்றைய இளைஞர்களுக்கு எடுத்துச் சொன்னால் இன்னும் சந்தோஷப்படுவேன்..''

பிற மாநிலப் பணக்காரர்களே, உங்கள் காதில் இந்தக் கடைசி வாக்கியம் விழுகிறதா?



அத்தியாயம் 46
வானதி சிரித்தாள்!

நந்தி மண்டபத்தில் அமர்ந்து இளவரசரும் குந்தவை தேவியும் பேசிக் கொண்டிருந்த போது, — வானதி தூண் ஓரமாக நின்று கேட்டுக் கொண்டிருந்த போது, — கால்வாயில் படகில் காத்துக் கொண்டிருந்த பூங்குழலிக்கும் சேந்தன் அமுதனுக்கும் முக்கியமான சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது.

"அமுதா! ஒன்று உன்னை நான் கேட்கப் போகிறேன். உண்மையாகப் பதில் சொல்வாயா?" என்றாள் பூங்குழலி.

"உண்மையைத் தவிர என் வாயில் வேறு ஒன்றும் வராது, பூங்குழலி! அதனாலேதான் நாலு நாளாக நான் யாரையும் பார்க்காமலும் பேசாமலும் இருக்கிறேன்" என்றான் அமுதன்.

"சில பேருக்கு உண்மை என்பதே வாயில் வருவதில்லை. இளவரசருக்கு ஓலை எடுத்துக் கொண்டு இலங்கைக்குப் போனானே, அந்த வந்தியத்தேவன் அப்படிப்பட்டவன்."

"ஆனாலும் அவன் ரொம்ப நல்லவன். அவன் யாரையும் கெடுப்பதற்காகப் பொய் சொன்னதில்லை."

"உன்னைப் பற்றி அவன் ஒன்று சொன்னான். அது உண்மையா பொய்யா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்..."

"என்னைப் பற்றி அவன் உண்மையில்லாததைச் சொல்வதற்குக் காரணம் எதுவும் இல்லை. இருந்தாலும், அவன் சொன்னது என்னவென்று சொல்!"

"நீ என்னைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசியதாகச் சொன்னான்."

"அது முற்றும் உண்மை."

"நீ என்னிடம் ஆசை வைத்திருப்பதாகச் சொன்னான். என்னை நீ மணந்து கொள்ள விரும்புவதாகச் சொன்னான்..."

"அவ்விதம் உண்மையில் அவன் சொன்னானா?"

"ஆம், அமுதா!"

"அவனுக்கு என் நன்றியைத் தெரிவிக்க வேண்டும்."

"எதற்காக?"

"நானே உன்னிடம் என் மனத்தைத் திறந்து தெரிவித்திருக்க மாட்டேன்; அவ்வளவு தைரியம் எனக்கு வந்திராது. எனக்காக உன்னிடம் தூது சொன்னான் அல்லவா? அதற்காக அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்."

"அப்படியானால் அவன் சொன்னது உண்மைதானா?"

"உண்மைதான், பூங்குழலி! அதில் சந்தேகமில்லை."

"உனக்கு ஏன் என்னிடம் ஆசை உண்டாயிற்று, அமுதா?"

"அன்பு உண்டாவதற்குக் காரணம் சொல்ல முடியுமா?"

"யோசித்துப் பார்த்துச் சொல்லேன். ஏதாவது ஒரு காரணம் இல்லாமலா இருக்கும்?"

"அன்பு ஏன் ஏற்படுகிறது, எவ்வாறு ஏற்படுகிறது என்று இதுவரை உலகில் யாரும் கண்டுபிடித்துச் சொன்னதில்லை, பூங்குழலி!"

"ஒருவருக்கொருவர் அழகைப் பார்த்து ஆசை கொள்வதில்லையா?"

"அழகைப் பார்த்து ஆசை கொள்வதுண்டு; மோகம் கொள்வதும் உண்டு. ஆனால் அதை உண்மையான அன்பு என்று சொல்ல முடியாது. அது நிலைத்திருப்பதும் இல்லை. சற்று முன் வந்தியத்தேவன் என்று சொன்னாயே, அவன் என்னைப் பார்த்தவுடன் என்னிடம் சிநேகம் கொண்டு விட்டான். அவனுக்காக நான் என் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருந்தேன். என் அழகைப் பார்த்தா என்னிடம் அவன் சிநேகமானான்?"

"ஆனால் உன் சிநேகிதன் என் அழகைப் பற்றி ரொம்ப, ரொம்ப வர்ணித்தான் இல்லையா?"

"உன் அழகைப் பற்றி வர்ணித்தான். ஆனால் உன்னிடம் ஆசை கொள்ளவில்லை. பழுவூர் ராணியின் அழகைப் பற்றி நூறு பங்கு அதிகம் வர்ணித்தான். அவளிடமும் அவன் அன்பு கொள்ளவில்லை."

"அதன் காரணம் எனக்குத் தெரியும்."

"அது என்ன?"

"அதோ இளவரசருடன் பேசிக் கொண்டிருக்கும் இளையபிராட்டியிடம் அந்த வீரனின் மனம் சென்று விட்டதுதான் காரணம்."

"இதிலிருந்தே அழகுக்கும் அன்புக்கும் சம்பந்தமில்லையென்று ஏற்படவில்லையா?"

அமரர் கல்கி

"அது எப்படி ஏற்படுகிறது? இளையபிராட்டியை விட நான் அழகி என்றா சொல்லுகிறாய்?"

"அதில் என்ன சந்தேகம், பூங்குழலி? பழையாறை இளைய பிராட்டியைக் காட்டிலும், அதோ தூண் மறைவில் நிற்கும் கொடும்பாளூர் இளவரசியைக் காட்டிலும், நீ எத்தனையோ மடங்கு அழகி. மோகினியின் அவதாரம் என்று பலரும் புகழும் பழுவூர் இளைய ராணியின் அழகும் உன் அழகுக்கு இணையாகாது. இப்படிப்பட்ட தெய்வீகமான அழகுதான் எனக்குச் சத்துருவாயிருக்கிறது. அதனாலேயே என் மனத்தில் பொங்கிக் குமுறும் அன்பை என்னால் உன்னிடம் வெளியிடவும் முடியவில்லை. வானுலகத் தேவர்களும் மண்ணுலகத்தின் மன்னாதி மன்னர்களும் விரும்பக்கூடிய அழகியாகிய நீ எனக்கு எங்கே கிட்டப் போகிறாய் என்ற பீதி என் மனத்தில் குடி கொண்டிருக்கிறது!"

பூங்குழலி சற்று யோசனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "அமுதா! உன் பேரில் எனக்கு ஆசை இல்லை என்று நான் சொல்லி விட்டால், நீ என்ன செய்வாய்?" என்று கேட்டாள்.

"சில நாட்கள் பொறுமையுடன் இருப்பேன். உன் மனம் மாறுகிறதா என்று பார்ப்பேன்?"

"அது எப்படி மாறும்?"


"மனிதர்களின் மனது விசித்திரமானது. சில சமயம் நம் மனத்தின் அந்தரங்கம் நமக்கே தெரியாது. புறம்பான காரணங்களினால் மனம் பிரமையில் ஆழ்ந்திருக்கும். பிரமை நீங்கியதும் உண்மை மனம் தெரிய வரும்...."

"சரி; பொறுத்திருந்து பார்ப்பாய். அப்படியும் என் மனத்தில் மாறுதல் ஒன்றும் ஏற்படா விட்டால்?..."

"உன்னிடம் வைத்த ஆசையை நான் போக்கிக் கொள்ள முயல்வேன்..."

"அது முடியுமா?"

"முயன்றால் முடியும். கடவுளிடம் மனத்தைச் செலுத்தினால் முடியும். நம் பெரியோர்கள் பகவானிடம் பக்தி செலுத்தித்தான் மனத்தைக்





கட்டுப்படுத்திக் கொண்டார்கள்...''

''அமுதா! நீ என்னிடம் வைத்திருக்கும் அன்பு உண்மையான அன்பு என்று எனக்குத் தோன்ற வில்லை.''

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? உண்மை அன்பின் அடையாளம் என்ன?''

''என்னிடம் உனக்கு உண்மை அன்பு இருந் தால், நான் உன்னை மறுதலித்ததும் என்னைக் கொன்றுவிட வேண்டும் என்று உனக்குத் தோன் றும். உனக்குப் பதிலாக நான் வேறு யாரிடமாவது அன்பு வைப்பதாகத் தெரிந்தால் அவரையும் கொன்றுவிட வேண்டும் என்று நீ கொதித்து எழு வாய்...''

''பூங்குழலி! நான் கூறியது தெய்வீக மான ஸத்வ குணத்தைச் சேர்ந்த அன்பு. நீ சொல்வது அசுர குணத்துக்குரிய ஆசை. பைசாச கணத்துக்குரியது என்றும் சொல் லலாம்....''

''தெய்வீகத்தையும் நான் அறியேன்; பைசாச இயல்பையும் நான் அறியேன். மனித இயற்கைதான் தெரியும். அன்பு காரணமாக இன்பம் உண்டாக வேண்டும். அதற்குப் பதிலாகத் துன்பம் உண்டானால் எதற்காக அதைச் சகித்திருப்பது? நாம் ஒரு வரிடம் அன்பு செய்ய அவர் பதிலுக்கு நம் மிடம் அன்பு செய்யாமல் துரோகம் செய்தால், எதற்காக நாம் பொறுத் திருக்க வேண்டும்? பழி வாங்குவதுதானே மனித இயல்பு?''

''இல்லை, பூங்குழலி! பழி வாங்குவது மனித இயல்பு அல்ல. அது ராட் சஸ இயல்பு. ஒருவரிடம் நாம் அன்பு வைத்திருப் பது உண்மையானால் அவருடைய சந்தோஷம் நமக்கும் சந்தோஷம்







தர வேண்டும். அவர் நம்மை நிராகரிப்பது முதலில் கொஞ்சம் வேதனையாயிருந்தாலும் பொறுத்துக் கொண்டு பதிலுக்கு நன்மையே செய்தோமானால், பின்னால் நமக்கு ஏற்படும் இன்பம் ஒன்றுக்குப் பத்து மடங்காகப் பெருகியிருக்கும்...''

''நீ சொல்வது மனித இயல்பேயல்ல; மனிதர்களால் ஆகக்கூடிய காரியமும் அல்ல. வந்தியத்தேவனுடன் வைத்தியர் மகன் ஒருவன் வந்தான். அவன் என்னைப் பார்த்ததும் ஆசை கொண்டான். அது நிறைவேறாது என்று அறிந்ததும், அவனுடைய ஆசைக்குக் குறுக்கே நிற்பதாக அவன் எண்ணிய வந்தியத்தேவனைப் பழுவேட்டரையர் ஆட்களிடம் காட்டிக் கொடுக்க முயன்றான். என்னையும் அவன் கொன்று விட முயன்றிருப்பான்....''

''அப்படியானால் அவன் மனித குலத்தைச் சேர்ந்தவன் அல்ல; கொடிய அசுர குலத்தைச் சேர்ந்தவன்.''

''அதோ கொடும்பாளூர் இளவரசி நிற்கிறாள். அவள் பொன்னியின் செல்வருக்குத் தன் உள்ளத்தைப் பறி கொடுத்திருக்கிறாள். பொன்னியின் செல்வர் அவளை ஏற்றுக் கொள்ளா விட்டால், அவள் என்ன செய்வாள்? நிச்சயமாகப் பொன்னியின் செல்வருக்கு விஷம் வைத்துக் கொல்ல முயல்வாள். அவருடைய மனத்தை வேறு எந்தப் பெண்ணாவது கவர்ந்து விட்டதாக அறிந்தால், அவளையும் கொல்ல முயல்வாள்.''

''ஒரு நாளும் நான் அப்படி நினைக்கவில்லை, பூங்குழலி! சாத்வீகமே உருக் கொண்ட வானதி அப்படி ஒரு நாளும் செய்ய முயல மாட்டாள்.''

''இருக்கலாம்; நானாயிருந்தால் அப்படித்தான் செய்ய முயலுவேன்.''

''உன்னைக் கடவுள் மன்னித்துக் காப்பாற்ற நான் பிரார்த்தித்து வருவேன்...''

''கடவுள் என்ன என்னை மன்னிப்பது! நான்தான் கடவுளை மன்னிக்க வேண்டும்!''

''நீ தெய்வ அபசாரம் செய்வதையும் கடவுள் மன்னிப்பார்!''

''அமுதா! நீ உத்தமன். என் பெரிய அத்தையின் குணத்தைக் கொண்டு நீ பிறந்திருக்கிறாய்......''

''அது என்ன விஷயம்? திடீரென்று புதிதாக ஏதோ சொல்கிறாயே?''

''என் பெரிய அத்தை இறந்து போய் விட்டதாக நம் குடும்பத்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா?''

''யாரைச் சொல்கிறாய்? என் தாய்க்கும் உன் தந்தைக்கும் உடன் பிறந்த

மூத்த சகோதரியைத்தானே?''

''ஆமாம்; அவள் உண்மையில் இறந்து விடவில்லை.''

''நானும் அப்படித்தான் பராபரியாகக் கேள்விப்பட்டேன்......''

''அவள் இலங்கைத் தீவில் இன்றைக்கும் பைத்தியக்காரியைப் போல் அலைந்து கொண்டிருக்கிறாள்...''

''குடும்ப சாபக் கேட்டுக்கு யார் என்ன செய்ய முடியும்?''

''அவள் இன்று பைத்தியக்காரி போல் அலைவதற்குக் குடும்ப சாபம் மட்டும் காரணம் அல்ல. சோழ குலத்தைச் சேர்ந்த ஒருவரின் நம்பிக்கைத் துரோகம்தான் அதற்குக் காரணம்.''

''என்ன? என்ன?''

''இளம் பிராயத்தில், என் அத்தை இலங்கைக்கு அருகில் ஒரு தீவில் வசித்து வந்தாள். அவளைச் சோழ ராஜகுமாரன் ஒருவன் காதலிப்பதாகப் பாசாங்கு செய்தான். அவள் நம்பி விட்டாள். பிறகு அந்த இராஜகுமாரன் இளவரசுப் பட்டம் சூட்டிக் கொண்டதும் அவளை நிராகரித்து விட்டான்.....''

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது, பூங்குழலி!''

''என் ஊமை அத்தையின் சமிக்ஞை பாஷை மூலமாகவே தெரிந்து கொண்டேன். இன்னொன்று சொல்கிறேன், கேள்! சில காலத்துக்கு முன்பு பாண்டிய நாட்டார் சிலர் இங்கே வந்திருந்தார்கள். என் அத்தையை வஞ்சித்த இராஜ குலத்தினரைப் பழிக்குப் பழி வாங்குவதற்கு என் உதவியைக் கோரினார்கள். அப்போதுதான் என் அத்தையின் கதையை அறிந்திருந்த எனக்கு இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. அவர்களுடன் சேருவதென்றே முடிவு செய்து விட்டேன். அச்சமயம் என் பெரிய அத்தையின் மனப்போக்கை அறிந்து கொண்டேன். அவள் தனக்குத் துரோகம் செய்தவனை மன்னித்ததுமல்லாமல், அவனுக்கு இன்னொரு மனைவி மூலம் பிறந்த பிள்ளையைப் பல தடவை காப்பாற்றினாள் என்று அறிந்தேன். பிறகு பாண்டிய நாட்டாருடன் சேரும் எண்ணத்தை விட்டு விட்டேன். நீ சொல்கிறபடி, என் அத்தையின் அன்பு தெய்வீகமான அன்புதான். ஆனால் என் அத்தையைப் போல் நான் இருக்க மாட்டேன்......''

''பின்னே என்ன செய்வாய்!''

''என்னை எந்த இராஜகுமாரனாவது வஞ்சித்து மோசம் செய்தால் பழிக்குப் பழி வாங்குவேன். அவனையும் கொல்வேன்; அவனுடைய மனத்தை என்னிடமிருந்து அபகரித்தவளையும் கொல்லுவேன். பிறகு, நானும் கத்தியால் குத்திக் கொண்டு செத்துப் போவேன்!''

''கடவுளே! என்ன பயங்கரமான பேச்சுப் பேசுகிறாய்?''

''அமுதா! இரண்டு வருஷமாக என் மனத்திலுள்ள கொதிப்பை நீ அறிய மாட்டாய். அதனால் இப்படிச் சாத்வீக உபதேசம் செய்கிறாய்.''

''உன் அத்தைக்கு இல்லாத கொதிப்பு உனக்கு என்ன வந்தது?''

''அது என் அத்தையின் சமாசாரம்; இது என் சமாசாரம்!''

''உன்னுடைய சமாசாரமா? உண்மைதானா, பூங்குழலி, நிதானித்துச் சொல்!''

''ஆம் அமுதா! என் உடம்பிலிருந்து கொஞ்சம் இரத்தத்தையும், அந்த வானதியின் உடம்பிலிருந்து கொஞ்சம் இரத்தத்தையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால், ஏதாவது வித்தியாசம் இருக்குமா?''

''ஒரு வித்தியாசமும் இராது.''

''அவள் எந்த விதத்திலாவது என்னை விட உயர்ந்தவளா? அறிவிலோ, அழகிலோ, ஆற்றலிலோ?''

''ஒன்றிலும் உன்னைவிட உயர்ந்தவள் அல்ல. நீ அலை கடலில் வளர்ந்தவள். அவள் அரண்மனையில் வளர்ந்தவள். நீ காட்டு மிருகங்களைக் கையினால் அடித்துக் கொல்லுவாய்; கடும் புயற் காற்றில் கடலில் ஓடம் செலுத்துவாய்; கடலில் கை சளைத்துத் தத்தளிக்கிறவர்களைக் காப்பாற்றுவாய்! வானதியோ கடல் அலையைக் கண்டு பயப்படுவாள்; வீட்டுப் பூனையைக் கண்டு பீதி கொண்டு அலறுவாள்; ஏதாவது கெட்ட செய்தி கேட்டால் மூர்ச்சையடைந்து விழுவாள்!''

"அப்படியிருக்கும் போது இளைய பிராட்டி என்னைத் துச்சமாகக் கருதக் காரணம் என்ன? வானதியைச் சீராட்டித் தாலாட்டுவதின் காரணம் என்ன?"

"பூங்குழலி! இளையபிராட்டியின் மீது நீ வீண் பழி சொல்கிறாய். அவருக்கு வானதி நெடுநாளையத் தோழி. உன்னை இப்போதுதான் இளைய பிராட்டிக்குத் தெரியும். இளவரசரைக் கடலிலிருந்து காப்பாற்றி இங்கே கொண்டு வந்து சேர்த்ததற்காக உனக்கு எவ்வளவோ அவர் நன்றி செலுத்தவில்லையா?"

"ஆ! அந்த அரண்மனைச் சீமாட்டியின் நன்றி இங்கே யாருக்கு வேணும்? அவளே வைத்துக் கொள்ளட்டும். அமுதா! இளவரசரைப் படகில் ஏற்றிக் கொண்டு திரும்பப் புத்த விஹாரத்துக்குப் போக வேண்டுமாயிருந்தால், நீ மட்டும் படகைச் செலுத்திக் கொண்டு போ! நான் வந்தால், ஒரு வேளை வேண்டுமென்று படகைக் கவிழ்த்தாலும் கவிழ்த்து விடுவேன்......"

"ஒரு நாளும் நீ அப்படிச் செய்ய மாட்டாய், பூங்குழலி! இளவரசர் என்ன குற்றம் செய்தார், அவர் ஏறியுள்ள படகை நீ கவிழ்ப்பதற்கு?"

"அமுதா! எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. என் சித்தம் என் சுவாதீனத்தில் இல்லை. என் அத்தைக்கு இவர் தந்தை செய்த துரோகத்தை நினைத்துப் படகைக் கவிழ்த்தாலும் கவிழ்த்து விடுவேன். நீயே படகை விட்டுக் கொண்டு போ!"

"அப்படியே ஆகட்டும்; நானே இளவரசரைக் கொண்டுபோய்விட்டு வருகிறேன். நீ என்ன செய்வாய்?"

"நான் வானதியைப் பின் தொடர்ந்து சென்று, அவள் தலையில் ஒரு கல்லைத் தூக்கிப் போடுவேன்!"

இவ்விதம் கூறிக் கொண்டே பூங்குழலி குனிந்து கால்வாயின் கரையில் கிடந்த ஒரு கூழாங் கல்லை எடுத்தாள். அச்சமயம் கால்வாயின் கரையில் இருந்த அடர்த்தியான தென்னந் தோப்புக்குள்ளிருந்து கம்பீரமான ராஜ ரிஷபம் ஒன்று வெளியேறி வந்தது. அதைப் பார்த்த பூங்குழலி தன் கோபத்தை அக்காளையின் மேல் காட்ட எண்ணிக் கூழாங்கல்லை அதன்பேரில் விட்டெறிந்தாள்.

அந்தக்கூழாங்கல், ரிஷபராஜனின் மண்டை மீது விழுந்தது.

காளை ஒரு தடவை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது. கல் வந்த திசையை உற்றுப் பார்த்தது.

"ஐயோ! பூங்குழலி! இது என்ன காரியம்? மாட்டின் மீது கல்லை விட்டெறியலாமா?" என்றான் அமுதன்.

"எறிந்தால் என்ன?"

"வாயில்லாத ஜீவன் ஆயிற்றே! அதற்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தெரியாதே?"

"என் குலத்தில் வாயில்லாத ஊமைப் பெண் ஒருத்தி இருந்தாள்! அவளுடைய மனத்தைப் புண்படுத்தியவர்களை என்ன செய்வது? அவள் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முடியாமையால்தானே, அவளை அரசகுமாரன் ஒருவன் வஞ்சித்து அவளுடைய வாழ்க்கையைப் பாழாக்கினான்?"

"உன் அத்தைக்கு யாரோ செய்த அநீதிக்கு இந்த மாடு என்ன செய்யும்?"

"இந்த மாடு அப்படியொன்றும் நிராதரவான பிராணி அல்ல. இதற்குக் கூரிய கொம்புகள் இருக்கின்றன. தன்னைத் தாக்க வருகிறவர்களை இது முட்டித் தள்ளலாம். காது கேளாத, பேச முடியாத, உலகமறியாத ஏழைப் பெண்ணால் என்ன செய்ய முடியும்? என்னிடம் அப்படி ஒரு ராஜகுமாரன் நடந்து கொண்டால் நான் அவனை இலேசில் விட மாட்டேன்!"

"இலேசில் விடமாட்டாய்! காளை மாட்டின் மேல் கல்லை எடுத்தெறிவாய்! அதுவும் கால்வாயில் படகில் இருந்து கொண்டு! மாடு உன் கிட்டே வந்து உன்னை முட்ட முடியாதல்லவா?"

"என்னை முட்ட முடியாவிட்டால் வேறு யாரையாவது அந்தக் காளை முட்டித் தள்ளட்டுமே?"

"உனக்கு யார் மேலோ உள்ள

கோபத்தை இந்தக் காளையின் பேரில் காட்டியது போல் அல்லவா?''

இவர்களுடைய சம்பாஷணையை என்னவோ அந்த ரிஷபத்தினால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், பூங்குழலி கூறியதுபோலவே கிட்டத்தட்ட அது செய்து விட்டது.

கால்வாயில் இறங்கிப் படகிலிருந்த பூங்குழலியின் மீது அது தன் கோபத்தைக் காட்ட முடியவில்லை. திரும்பித் துள்ளிக்குதித்துக்கொண்டு சென்றது. அச்சமயம் வானதி தென்னந்தோப்பின் மறுபுறத்தில் இருந்த பல்லக்கை நோக்கித் தனியாகப் போய்க் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் குதூகலத்தினால் துள்ளிக்குதித்துக்கொண்டிருந்தது. எதிரில் துள்ளிக் குதித்துக் கொண்டு வந்த ரிஷப ராஜனைப் பார்த்ததும் முதலில் அவள் குதூகலம் அதிகமாயிற்று; ஆனால் ரிஷபராஜன் தலையைக் குனிந்து கொண்டு கொம்பை நீட்டிக் கொண்டு வாலைத் தூக்கிக் கொண்டு தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் பயந்து போனாள். கால்வாய்க்கரையைநோக்கித் திரும்பி ஓடிவருவதைத் தவிர வேறு வழியில்லை. நந்தி மண்டபத்துக்கு வெகு சமீபத்தில் கால்வாய்க் கரைக்கு அவள் வந்துவிட்டாள். அப்புறம் மேலே செல்ல முடியவில்லை. ஏனெனில், கரையிலிருந்து கால்வாய் ஒரே கிடுகிடு பள்ளமாயிருந்தது. கரையோரமாக நந்தி மண்டபத்துக்கு வரலாம் என்று திரும்பினாள். அச்சமயம் ரிஷபம் அவளுக்கு வெகு சமீபத்தில் வந்திருந்தது. பின்புறமாக நகர்ந்து கால்வாயில் விழுவதைத் தவிர வேறு மார்க்கம் ஒன்றும் இல்லை. அப்போதுதான் ''ஐயோ! ஐயோ! அக்கா! அக்கா!'' என்று அவள் கத்தினாள்.

வானதியின் அந்த அபயக் குரல் தான் பொன்னியின் செல்வன், குந்தவை இவர்களின் காதில் வந்து விழுந்தது.

வானதியின் அபயக் குரல் வந்த திசையைப் பொன்னியின் செல்வனும் குந்தவையும் திடுக்கிட்டு நோக்கினார்கள். அவர்கள் இருந்த நந்தி மண்டபத்துக்குச் சற்றுத் தூரத்தில், கால்வாயின் உயரமான கரையில் வானதி தோன்றினாள். கால்வாயின் பக்கம் அவள் முதுகு இருந்தது. அவள் தனக்கு எதிரே ஏதோ ஒரு பயங்கரமான பொருளைப் பார்ப்பவள் போலக் காணப்பட்டாள். அவளை அவ்விதம் பயங்கரப் படுத்தியது என்னவென்பது மறுகணமே

அதி நவீன பட்டு வகைகள்



100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை
கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள் • இணையிலா புதுமைகள், எண்ணிலா வகைகள்

DIPR/1768/MS88/HTA

தெரிந்து விட்டது. "அம்ம்ம்மமா!" என்ற கம்பீரமான குரல் கொடுத்துக் கொண்டு, அவளுக்கு எதிரே ரிஷப ராஜன் தோன்றினான்.

இன்னும் ஓர் அடி வானதி பின்னால் எடுத்து வைத்தால் அவள் கால்வாயில் விழ வேண்டியதுதான். பின்னால் நகருவதைத் தவிர அவளுக்கு வேறு வழியும் இல்லை. இதையெல்லாம் அருள்மொழிவர்மன் பார்த்த தட்சணமே அறிந்து கொண்டான். உடனே நந்தி மண்டபத்தின் படிக்கட்டிலிருந்து கால்வாயில் குதித்து மின்னலைப் போல் பாய்ந்து ஓடினான். வானதி கால்வாயின் கரையிலிருந்து விழுவதற்கும்அருள்வர்மன்கீழேஓடிப் போய்ச் சேர்வதற்கும் சரியாக இருந்தது. கால்வாயின் தண்ணீரில் வானதி தலைகுப்புற விழுந்து விடாமல் இரு கரங்களாலும் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

வானதிக்கு நேர்வதற்கு இருந்த அபாயத்தை அறிந்து ஒரு கணம் குந்தவை உள்ளம் பதைத்துத் துடிதுடித்தாள். மறுகணம் அருள்மொழிவர்மன் அவளைத் தாங்கிக் கொண்டதைப் பார்த்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தாள்.

வேலும் வாளும் வீசி வஜ்ராயுதம் போல் வலுப் பெற்றிருந்த கைகளில் துவண்ட கொடியைப் போல் கிடந்த வானதியைத் தூக்கிக் கொண்டு அருள்மொழிவர்மன் குந்தவையின் அருகில் வந்தான்.

"அக்கா! இதோ உன் தோழியை வாங்கிக் கொள்! கொடும்பாளூர் வீர வேளிர் குலத்தில் இந்தப் பெண் எப்படித்தான் பிறந்தாளோ, தெரியவில்லை!" என்றான்.

"தம்பி! இது என்ன காரியம் செய்தாய்? கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்ணை நீ எப்படிக் கையினால் தொடலாம்?" என்றாள் குந்தவை.

"கடவுளே! அது ஒரு குற்றமா? பின்னே, இவள் தண்ணீரில் தலை கீழாக விழுந்து முழுகியிருக்க வேண்டும் என்கிறாயா? நல்லவேளை! இவளை நான் தாங்கிப் பிடித்தது இவளுக்குத் தெரியாது. விழும்போதே மூர்ச்சையாகி விட்டாள்! இந்தா, பிடித்துக் கொள்!" என்றான் அருள்மொழி வர்மன்.

வானதி கலகலவென்று சிரித்தாள். சிரித்துக் கொண்டே அவன் கரங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தரையில் குதித்தாள்.

"அடி கள்ளி! நீ நல்ல நினைவோடு தான் இருந்தாயா?" என்றாள் குந்தவை.

"கண்ணை மூடிக் கொண்டு மூர்ச்சையடைந்தது போல் ஏன் பாசாங்கு செய்தாள் என்று கேள், அக்கா!" என்றான் பொன்னியின் செல்வன்.

"நான் ஒன்றும் பாசாங்கு செய்யவில்லை, அக்கா! இவர் என்னைத் தொட்டதும் எனக்குக் கூச்சமாய்ப் போய்விட்டது. வெட்கம் தாங்காமல் கண்களை மூடிக் கொண்டேன்!"

"அது எனக்கு எப்படித் தெரியும்? மூர்ச்சை போட்டு விழுவது உன் தோழிக்கு வழக்கமாயிற்றே என்று பார்த்தேன்!"

"இனிமேல் நான் மூர்ச்சை போட்டும் விழமாட்டேன்; அப்படி விழுந்தாலும் இவர் இருக்குமிடத்தில் விழமாட்டேன், அக்கா! இன்று இவருக்கு நான் செய்த உதவியை மட்டும் இவர் என்றைக்கும் மறவாமலிருக்கட்டும்!" என்றாள் வானதி.

"என்ன? என்ன? இவள் எனக்கு உதவி செய்தாளா? அழகாயிருக்கிறதே?" என்றான் அருள்மொழிவர்மன்.

குந்தவையும் சிறிது திகைப்புடன் வானதியை நோக்கி, "என்னடி சொல்கிறாய்? என் தம்பி உனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன் என்று சொல்கிறாயா?" என்றாள்.

"இல்லவே இல்லை, அக்கா! நான் தான் உங்கள் தம்பிக்குப் பெரிய உதவி செய்தேன். இவர் அதற்காக என்னிடம் என்றைக்கும் நன்றி செலுத்தியே தீர வேண்டும்!"

"நான் இவளைக்கால்வாயில்விழாமல் காப்பாற்றியதற்காக இவளுக்கு நான் நன்றி செலுத்த வேண்டுமா? உன் தோழிக்கு ஏதாவது சித்தக் கோளாறு உண்டா, அக்கா!" என்றான் பொன்னியின் செல்வன்.

அருள்வாக்கு

ஆசார்யாளுக்கு எல்லாக் கலையும் தெரியுமா என்று பார்ப்பதற்காக ஒரு சக்கிலியன் பரீக்ஷை பண்ணினானாம். 'செருப்பு தைக்க வருமா?' என்று அவரைக் கேட்டானாம். உடனே அவர், ஊசியை மூக்கின் மேலே தேய்த்துக் கொண்டு விட்டு, வெகு நேர்த்தியாகச் செருப்புத் தைக்க ஆரம்பித்து விட்டாராம். மூக்குத் தோல்மேல் ஊறும் ஒரு திரவம் ஊசியில் படுவதால் அது செருப்புக்குள் சுலபமாகத் துளைத்துக் கொண்டு போகும் என்பதால் சக்கிலியர் அப்படித்தான் தேய்த்துக் கொள்வார்களாம். அப்படியே பண்ணி அந்தத் தொழிலாளியிடம் 'ஸர்ட்டிபிகேட்' வாங்கினதில் ஜகதாசாரியர்களும் பெருமைப்பட்டார்களாம்.'

இதே மாதிரி இன்னொரு கதை உண்டு. மாட்டின் முதுகில் ஏதாவது பட்டால் அது சிலிர்த்துக் கொண்டு முதுகில் சுழிசுழியாகப் பரவுமே, அதே மாதிரி ஒரு பெரியவர் ராஜ ஸபையில் சுழித்துக் கொண்டு காட்டினாராம். ராஜா பீதாம்பரம் போர்த்தினானாம். அதே சமயத்தில் ஒரு கோனார் இந்த வித்தைக்கு 'சபாஷ்' கொடுத்துத் தன்மேல் போட்டிருந்த கிழிந்த கம்பளியை எடுத்து அவர் மேல் போட்டானாம். அவர் ராஜாவின் பீதாம்பரத்தைவிட மாட்டோடேயே ஜீவனம் செய்கிற இந்தக் கோனாரின் கிழிசல் கம்பளிதான் விசேஷமானது என்றாராம்.



இந்த இரண்டு கதைகளிலிருந்து எல்லா வித்தைகளும் தொழில்களும் அவற்றைச் செய்கிற தொழிலாளிகளும் கலைஞர்களும் பெற வேண்டிய உயர்ந்த மதிப்பு தெரிகிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

''என் சித்தம் சரியாகத்தான் இருக்கிறது. இவருக்குத்தான் மனம் குழம்பியிருக்கிறது. புரியும்படி சொல்லுகிறேன். இவர் சிறு வயதில் ஒரு சமயம் காவேரியில் விழுந்தார் என்றும் ஒரு பெண் இவரை எடுத்துக் காப்பாற்றினார் என்றும் சொன்னீர்கள். மறுபடி இவர் கடலில் விழுந்து தத்தளித்தார். அங்கேயும் ஒரு ஓடக்காரப் பெண் வந்து இவரைக் காப்பாற்றினாள். இப்படிப் பெண்களால் காப்பாற்றப்படுவதே இவருக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. அந்த அபகீர்த்தி மறைவதற்கு நான் இவருக்கு உதவி செய்தேன். கால்வாயில் விழப்போன ஒரு பெண்ணை இவர் தடுத்துக் காப்பாற்றினார் என்ற புகழை அளித்தேன் அல்லவா? அதற்காக இவர் என்னிடம் நன்றி செலுத்த வேண்டாமா?''

இவ்விதம் கூறிவிட்டு வானதி சிரித்தாள். அதைக் கேட்ட குந்தவையும் சிரித்தாள். பொன்னியின் செல்வனும் சிரிப்பை அடக்கப் பார்த்து முடியாமல் குபீர் என்று வாய்விட்டுச் சிரித்தான்.

அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து சிரித்த சிரிப்பின் ஒலி நந்தி மண்டபத்தைக் கடந்து, வான முகடு வரையில் சென்று எதிரொலி செய்தது.

படகில் இருந்தவர்களின் காதிலும் அந்தச் சிரிப்பின் ஒலி கேட்டது. ''அமுதா! அந்த மூன்று பைத்தியங்களும் சிரிப்பதைக் கேட்டாயா?'' என்று சொல்லிவிட்டுப் பூங்குழலியும் சிரித்தாள். அமுதனும் அவளுடன் கூடச் சிரித்தான்.

தென்னந் தோப்பில் வாசம் செய்த பட்சிகள் 'கிக்கிளு, கிக்கிளு' என்று ஒலி செய்து சிரித்தன.

இத்தனை நேரமும் கால்வாயின் கரை மீது கம்பீரமாய் நின்ற காளையும் ஒரு ஹுங்காரம் செய்து சிரித்து விட்டுச் சென்றது.

கடல் அலைகள் கம்பீரமாகச் சிரித்தன.

கடலிலிருந்து வந்த குளிர்ந்த காற்றும் மிருதுவான குரலில் சிரித்து மகிழ்ந்தது.

(தொடரும்)

பொன்னியின் செல்வன் மூன்றாம் பாகம் முற்றியது.

கொச்சித் துறைமுகமும் கொள்ளையழகுப் பயணமும்...



படகுப் போக்குவரத்து...

இந்தியாவின் மிகப் பிரபலமான இயற்கைத் துறைமுகங்களில் கொச்சித் துறைமுகமும் ஒன்று. கப்பல் கரையைத் தொட்டுக் கொண்டு வந்து நின்று நங்கூரம் பாய்ச்சுமிடத்தில் ஆழம் சுமார் நாற்பது அடி

நாங்கள் சென்ற போது துறைமுகத்தில் மூன்று கப்பல்கள் ரெஸ்ட் எடுத்துக்

கொண்டிருந்தன. ஒரு கப்பலில் இருந்து உரத் தயாரிப்பிற்குத் தேவைப்படும் மூலப் பொருள்கள் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களால் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரே சமயத்தில் பத்து கப்பல்கள் துறைமுகத்தில் வந்து நிற்கலாம். பத்துக்கு மேற்பட்ட கப்பல்கள் வரும் நேரத்தில் அவை கடலில் சுமார் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் நிற்க வைக்கப்பட்டு, துறைமுகத்தில் இடம் காலியானதும், பைலட் கப்பல்கள் சென்று ராஜமரியாதையுடன், நிற்கும் கப்பல்களை ஒன்றன் பின் ஒன்றாக அழைத்து வரும்.

துறைமுகத்தில் வந்து இறங்கும் உரத் தயாரிப்புப் பொருட்களை அப்படியே கோடவுனில் சேர்ப்பதற்கு ராக்ஷஸ கன்வேயர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கொச்சித் துறைமுகத்தில் கப்பல்களில் தீப்பிடித்தால் அணைப்பதற்கு ஒரு தீயணைப்புக் கப்பலும் சித்தமாயிருக்கிறது.



கொச்சித் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகும் முக்கிய பொருட்களுள் ஒன்று இறால்.

துறைமுகத்தையொட்டி வைபின் தீவு, குண்டுத் தீவு, மட்டாஞ்சேரி போன்ற சின்னச் சின்ன தீவுகளும் இடங்களும் இருக்கின்றன.

மட்டாஞ்சேரியில் ஒரு டச்சு அரண்மனை இருக்கிறது.

கொச்சித் துறைமுகத்தில் ஒரு ஸ்டீமரில் ஏறி துறைமுகத்தை வலம் வந்தோம். சீன முறைப்படி வலை வீசி மீன் பிடிப்பதை அப்போதுதான் காண நேர்ந்தது. வரிசையாகக் கரையை ஒட்டி அந்த வலைகள் நிற்பது தனி அழகெனில், ஆதவன் உதிக்கும் அல்லது மறையும் நேரத்தில் அந்த இடத்தைப் பார்ப்பது இன்னும் அழகு. கடலில் சீற்றம் இல்லை. அலைகள் இல்லை. ஏரி நீரில் பிரயாணம் போல் இருந்தது ஸ்டீமரில் போன போது.

நீர் வழிப் பயணம்

கேரள அரசு தண்ணீர்ப் போக்குவரத்துத் துறையினர் எர்ணாகுளம், கொச்சி, ஆலப்புழை, கோட்டயம், கொல்லம் போன்ற இடங்களில் நீரில் காலூன்றி இருக்கிறார்கள்.

எர்ணாகுளத்தில் இருந்து பல்வேறு சின்னச் சின்ன நகரங்களுக்கு தோடு என்று செல்லமாகச் சொல்லப்படும் கால்வாய்கள் மூலமாகவும், காயல் என்று அழைக்கப்படும் ஆறுகள் மூலமாகவும் ஸ்டீமர்கள் போகின்றன. கேரளாவில் பின்னிப் பிணைந்திருக்கும் இந்த ஆறுகளில் ஓடும் ஸ்டீமர்களில் ஒருமுறையாவது பயணம் செய்ய வேண்டும்.

நாங்கள் ஆலப்புழையிலிருந்து கோட்டயத்திற்கு ஸ்டீமர் மூலம் பயணப்பட்டோம். ஸ்டீமருக்கு உள்ளேயே கண்டக்டர் வருகிறார். டிக்கெட் தருகிறார். ஸ்டீமரின் இடைவிடாத ரீங்காரம்.

ஸ்டீமர் மெதுவாக நகர்கிறது. அவ்வப்போது ஸ்டாப்பிங்குகளில் நிற்கிறது. ஸ்டீமர் செல்லும் வழி முழுக்கக் கரையோரம் வீடுகள். வீடுகளில் இருக்கும் மக்கள் சொந்தமாகத் தோணி வைத்திருக்கிறார்கள். தோணி மூலமே அடுத்த ஊருக்குச் செல்கிறார்கள். தோணிகளில் வைக்கோல், அரிசி முதலான பல்வேறு பொருள்கள் ஒரு நகரத்திலிருந்து அடுத்த நகரத்திற்குப் போகின்றன.

தோணிகளில் மிதந்து போய்க் கொண்டிருந்தவர்களைப் பார்க்கும் போது பாரதியாரின் பாடல் வரி நினைவுக்கு வருகிறது. நதியின் பெயரில் மட்டும் மாறுதல்.

நாங்கள் சென்ற ஆற்றில் படகுப் போட்டி விசேஷ காலங்களில் நடைபெறும் என்று சொன்னார்கள். நாங்கள் போன போது விசேஷ காலமில்லை என்றாலும் இரு கரைகளிலும் தென்னைகள் வளைந்திருக்க, ப சு மை ம லி ந் தி ரு க் க, அவற்றினூடே தோணியில் பாட்டுப் பாடிக் கொண்டு பயணப்படுவதே மிகச் சுகமான அனுபவம்.


கேரளாவில் அந்த அனுபவத்தை அவர்கள் தினந்தோறும் பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள்.

நாம் வறட்சியான நகரங்களில், இயந்திரங்களுக்கு நடுவில், டீஸல் புகைக்கு மத்தியில், செயற்கையான வெளிச்சத்தில், மெஷின் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

கேரள மாநிலக் கட்டுரைகள்:

சுரேஷ் — பாலா.

மேலட்டை மற்றும் வண்ணப்படங்கள்,
புகைப்படங்கள்: **கே. வி. ஆனந்த்.**



கூத்தம்பலத்தின் முன் கதகளி வகுப்பு...

வங்கத்தில் சாந்தினிகேதன்; கேரளத்தில் கலாமண்டலம்...

அவர் நல்ல உயரம். நீண்ட கைகள். நீளமான கால்கள். நேர்ப் பார்வை. ஏறு போல் நடை. மலையைப் பார்த்தால், முகிலைப் பார்த்தால், சரம் சரமாய் இறங்கும் மழையைப் பார்த்தால், அவருக்குக் கவிதை பாடத் தோன்றும். பாடினார். அவரது பாடல்கள் போற்றப்பட்டன. அந்தக் கவிதைச் சித்தன்தான் வள்ளத்தோள் நாராயண மேனன். கேரளாவில் இன்றைக்கு 'வள்ளத்தோள்' என்று சொன்னால் தெரியாத குழந்தை இருக்க முடியாது.

ஆயிரத்து எண்ணூற்று எழுபத்தெட்டில் பிறந்த வள்ளத்தோள் கவிஞனாக உலகுக்குத் தம்மை வெளிப்படுத்திக் கொண்ட பிறகு, வங்காளத்தில் ரவீந்திரநாத் தாகூர் உருவாக்கிய சாந்திநிகேதனைப் பார்த்து, அது போல் தாமும் கேரளக் கலைகளுக்கும் கலாசாரத்திற்கும் ஏதாவது ஒரு மேம்பாட்டுப் பணியைச் செய்ய வேண்டும் என்ற விடாத மன அரிப்பின் காரணமாகக் கலா மண்டலத்தை நிறுவினார்.

ஷோரனூருக்கு வெகு அருகில் பாயும் நதி பாரதப் புழா. நீர் எப்போதும் சலசலக்கும் இந் நதியையொட்டி ஒரு மேடான பிரதேசம். அங்கு இயற்கையின் நடனம். உயர உயரமாய் வளர்ந்த மரங்கள் காற்றில் சிலு சிலு சிலு சிலு என்று சலங்கை ஒலி எழுப்ப, மரத்தின் பட்சிகள் 'டிர்ர்ர் டிக்' 'சிபு, சிபு' என்று கானம் பாட, கையால் தொடும் தூரத்தில் உள்ளது போல் தோன்றிய தொடு வானில் வெள்ளி மேகங்களும் கறுப்பு மேகங்களும் இணைந்து மத்தளம் வாசிக்க, ஆற்று நீரோடு நிலவுக் கன்னியும் ஜல் ஜல் என்று நடனம் ஆடியதைக் கண்டார் வள்ளத்தோள். தமது கனவில் கண்ட அதே இடம் என்று பாரதப் புழா ஆற்றங்கரையை நினைத்தார்.

கலா மண்டலம் உருவானது.

1930—ல் நிறுவப்பட்ட கலாமண்டலம் 1973—ல் இன்னும் அகன்ற நிலப்பரப்புக்கு இடம் மாறி தற்போது ஷோனூரிலிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் இருக்கும் செருதுருத்தியில், இயற்கையின் எழிலுக்கு நடுவில் இயங்குகிறது.

கலாமண்டலம் என்ன செய்கிறது?

கேரளாவின் தொன்மையான கலைகள் உலகெங்கும் உள்ள மக்களின் மனத்தில் நீங்கா இடம் பெற வேண்டும் என்ற ஆசையில் எல்லோருக்கும் அந்தக் கலைகளைக் கற்பிக்கிறது.

கலா மண்டலம் கற்றுத் தரும் கலைகள்:

கதகளி, கூடியாட்டம், மோகினியாட்டம், பரதம், குச்சுப்பிடி, வாய்ப்பாட்டு, தாள வாத்தியங்கள்.

கலாமண்டலத்தின் எல்லைக்குள் நாங்கள் நுழைந்தோம்.

இடது பக்கம் திரும்பினால் ஒரு பெரும் கோவில். அருகே போன பின்தான் தெரிந்தது, அது கோவில் அல்ல; கோவிலுக்கு நிகரான கூத்தம்பலம் (அரங்கம்) என்று. தமிழ்நாட்டுக் கோயில்களில் ஆடல் பாடல்களுக்கு என்று அமைக்கப்படும் அரங்கங்களைப் போலவே இந்த அரங்கமும் அமைந்திருந்தது.

சுற்றி வரச் சின் வண்டின் ரீங்காரம். காற்றின் லேசான விஸ். கூத்தம்பலத்தின் உள்ளே அமைதி. நெடிய தூண்கள். பார்வையாளர் அமர மென்மையான கடப்பைக்கல் தரை. உள்ளே நுழைந்து எந்தத் தூணைத் தொட்டாலும் நிச்சயம் ஸ்வரம் பாடும் என்று தோன்றியது.

கூத்தம்பலத்திற்குச் சற்றுத் தள்ளி கலா மண்டலத்தின் பிரதானக் கட்டடம். கட்டடத்தின் வலப்புறத்தில் பெரிய ஹால். ஹால் சுவரில் மாட்டப்பட்டிருந்த உயிரோவியங்கள். அத்தனை படங்களும் கலா



* இய்யங்கோடு ஸ்ரீதரன் — செயலாளர்



* வள்ளத்தோள்: தாகூரின் பாதிப்பு



* விடியா : பிரான்ஸிலிருந்து வந்தவர்...

மண்டலத்தில் வந்து பயிற்றுவித்த சங்கீத ஆசான்களின் படங்கள்; கலாமண்டலத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் படங்கள்; ஆயில் பெயின்டிங்.

அதைத் தவிர அந்த ஹாலில் கதகளி நடனத்திற்குத் தேவையான உபகரணங்கள் அத்தனையும். உலகின் அத்தனை நிறங்களிலும் ஆடைகள். கதகளி ஆட்டக்காரர்கள் தலையில் அணியும் விசேஷமான கிரீடங்கள். அறையில் செண்டை 'ஜிங்' 'ஜிங்' என்று ஒலிக்கிறாற் போல் ஒரு பிரமை. அந்த கிரீடங்களைக் காண்கையில் அவை வலதும் இடதும் அசைகிறாற் போல் ஒரு தோற்றம்.

நாங்கள் அந்த அறையை விட்டு வெளிப்பட்டோம். கலாமண்டலத்தின் செயலாளராகப் பணிபுரியும் இய்யம் கோடு ஸ்ரீதரனை அவரது அறையில் சந்தித்தோம்.

கலாமண்டலத்தைப் பற்றிச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டோம். ஸ்ரீதரன் சொன்னதில் இருந்து சில செய்திகள்:

- கலையைக் காதலிப்பவர்களுக்கு உகந்த இடம். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து மட்டுமல்ல, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் வந்து தங்கிப் பயிலும் மாணவ மாணவியர் இருக்கிறார்கள்.
- இருநூறு மாணவர்களுக்குப் பயிற்சி தர அறுபது திறமை வாய்ந்த ஆசிரியர்கள். அட்மிஷனிற்கு இரண்டே தகுதிகள்தான்:
  1. ஏழாவது வரை படித்திருக்க வேண்டும்.
  2. வயது 12—லிருந்து 18—க்குள் இருக்க வேண்டும்.
- கலாமண்டலத்தின் சேவையைப் பாராட்டி அன்றையப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார். இன்றைக்கும் மத்திய, மாநில அரசுகளின் மானியங்கள் கலாமண்டலத்திற்கு உண்டு.
- கலாசாரப் பரிமாறுதல் வகையில் இங்கு பயின்ற மாணவர் கருணாகரன் பிரான்ஸில் கதகளி வகுப்புகள் நடத்துகிறார். அங்கு பயின்ற பிரெஞ்ச் மாணவி விடியா, மேற்படிப்பிற்காகக் கலாமண்டலத்தில் இப்போது தங்கியிருக்கிறார். (விடியா புடைவை கட்டியிருந்தார். எங்களைப் பார்த்ததும் கைகூப்பி நமஸ்காரம் தெரிவித்தார். வெட்கப்பட்டார். கதகளி பற்றி மழலை ஆங்கிலத்தில் பேசினார். சந்தோஷமும் சிரிப்பும் விகசித்தன அவர் முகத்தில்.)
- ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்சு போன்ற பல்வேறு நாடுகளுக்குக் கலாமண்டலத்தின் குழு பலமுறை சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தி இருக்கிறது. இந்தியாவிற்குப் பெருமை சேர்த்திருக்கிறது.
- ரஷ்யாவில் நடந்த இந்தியக் கலாச்சார விழாவில் கலாமண்டலம் கலந்து கொள்ள ஏனோ வாய்ப்புத் தரப்படவில்லை!

செயலாளர் இய்யம்கோடு ஸ்ரீதரனும் ஒரு கவிஞர். மாணவர்கள் கலாமண்டலத்திலேயே தங்கிக் குருகுல வாசம் செய்து தான் கலைகளைக் கற்று வருகிறார்கள் என்றார் அவர் மேலும்.

கலாமண்டல எல்லையை ஒரு முறை சுற்றி வந்தோம். சுற்றி வர அமைதிதான். சலனமற்ற அமைதி.

கூத்தம்பலத்தின் எதிரே கதகளி ஆட்டத்திற்கான பயிற்சி நடந்து கொண்டிருந்தது. மேளமின்றித் தாளமின்றி மாணவர்கள் இடதும் வலதும் மடிந்து மடிந்து, உயர எம்பிக் குதித்து, பின்னால் ஓடி, முன்னால் தாவி, அழுது, சிரித்து, ஆக்ரோஷ முகம் காட்டி பயின்று கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு கதகளி பயிற்றுவித்த கோபாலகிருஷ்ணன் கதகளி ஆட்டத்திற்கே சிறப்பைத் தரும் நவரசபாவங்களை மேக்கப் இல்லாத முகத்தில் வரவழைத்துக் காட்டினார்.

அந்த எல்லையை விட்டு நாங்கள் மெல்ல மெல்ல வெளியே வந்தோம். எங்களுக்குப் பின்னால் செண்டைகள் ஒலித்தன. மத்தளங்கள் அதிர்ந்தன. கலை நர்த்தனத்திலிருந்து விலகி வருகிறோமே என்ற ஒரு மெலிதான சோகம் எங்கள் மனங்களில்.

நீரில் மிதக்கும் நிலா

14

இளங்குமரன் கையில் ஒரு பத்திரிகை வைத்திருந்தான். அதைப் பிரித்துக் காற்றில் விசிறி போல் ஆட்டிக் காண்பித்தான்.

"பாருய்யா... காமிராமேன்... என்னான்னு நியூஸ் போட்டிருக்கான்னு பாரு..."

ஸ்ரீநாத் இன்னும் அடிவாங்கிய பிரமிப்பி லிருந்து மீளாமல் இருந்தான்.

பிருத்விராஜ் ஓடி வந்தான். இளங்குமரன் ஏறக்குறைய விசிறியடித்த அந்தப் பத்திரி கையைக் கையில் வாங்கினான். 'பிக்சர் இன்பர்மேஷன்' என்று தமிழில் எழுதப் பட்ட சினிமா பத்திரிகை. இளங்குமரன் நடுவில் விரல் விட்டுப் பிடித்திருந்த பக்கத் தைப் பிரித்தான்.

'எங்கே என் இதயம்' தோல்வியி னால் பாதிக்கப்பட்டிருப்பது காமிராமேன் ஸ்ரீநாத்தானாம். அதனாலேயே 'நீரில் மிதக்கும் நிலா' படத்தின் டைரக்ஷன் பொறுப்புகள் அத்தனையையும் காமிராமேன் ஸ்ரீநாத்தே மேற்கொண்டிருக்கிறாராம். இளங் குமரன் இனி தேற மாட்டார் என்று ஸ்ரீநாத்தே பத்திரிகையாளர்களிடம் தெரிவித்த தகவல் இது. கடைசியாக வந்த செய்தி! டைரக்டர் இளங்குமரன் அதிகமாகத் தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டு தற் கொலைக்கு முயன்றார் என்று ஒரு கிசுகிசு நம்பத் தகுந்த வட்டாரங் களில் நிலவுகிறது'

பிருத்விராஜ் அந்த பத்திரிகைச் செய்தி யைப் படித்து விட்டு, ஸ்ரீநாத்திடம் காண்பித் தான். ஸ்ரீநாத் கண்களை மட்டும் திருப்பி அந்தச் செய்தியைப் படித்தான்.

"நம்பிக்கைத் துரோகி, உருப்படுவியாடா நீ? நான் செத்தா போய்ட்டேன். செத்தா போய்ட்டேன். என்னால டைரக்ட் பண்ண முடியாதுன்னு உங்கிட்ட சொன்னேனா? எனக்கு என்ன மூளைக்காய்ச்சலா வந்தி டுச்சி... இப்படி நியூஸைக் கொடுத்திருக் கியே. ஒன்னையெல்லாம் காமிராமேனா மதிச்சி தலையில தூக்கி வெச்சிக்கிட்டேன் பாரு..."என்னைச் செருப்பால அடிக்க ணும்... என்னைச் செருப்பால அடிக்க ணும்..."



''டைரக்டா... நிறுத்து... நிறுத்துன்னா நிறுத்தணும்.''

இளங்குமரன் ஸ்ரீநாத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

''பிக்சர் இன்ஃபர்மேஷன் ரிப்போர்ட்டரைப் பத்தி ஒனக்குத் தெரியுமில்ல.. நூறு ரூபாக் காசு கொடுத்தா ஒன்னை இந்திரன் சந்திரன்னு எழுதுவான். தரலைன்னா மூட்டி விடுவான். இந்தப்பய என் வீட்டுக்கு வந்து காசு கேட்டான். குடிக்கறதுக்குக் கொஞ்சம் கொறையுதாம். காசு கொடு ப்ரதர்னு சொன்னான். என்ன 'தில்' இருக்கணும் அவனுக்கு. இல்லேன்னு சொல்லி அனுப்பிட்டேன். அதான்புத்தியை இப்படிக் காட்டிட்டான்... நீயும் இந்த ரிப்போர்ட்டர் நியூஸ்தான் உலகத்திலேயே நெஜமான நியூஸ்ங்கற மாதிரி வந்து என்னை அடிச்சிட்டே... இந்த ஆளு ஒங்கிட்ட இதுவரைக்கும் வம்பு பண்ணலை... மனசைத் தொட்டுச் சொல்லு...''

இளங்குமரன் தொழுவத்திலிருந்து திடீரென்று மைதானத்திற்கு வந்து விட்ட கன்றுக்குட்டி போல மிரண்ட பார்வை பார்த்தான். இரண்டு கைகளையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கும்பிட்டான்.

''ஸாரி ப்ரதர்... நான் ஒரு நெலையில இல்ல... அதான் கைநீட்டிட்டேன்... மன்னிச்சிரு... மன்னிச்சிரு... என்னம்மா... மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொல்லு..''

''பரவாயில்லை'' என்றான் ஸ்ரீநாத்.

''ஆங்.. அதான் பெரிய மனுஷத்தனம். என்ன பண்றே...? ஷூட் பண்றியா? எங்க நம்ப புது ஹீரோயினு... மதுமதியா... ஷில்பாவா... ஷில்பா... ஷில்பாம்மா... ஸ்ரீநாத் சரக்குக்காரன்... ஷாட் எல்லாம் அவனே பாத்து வெப்பான். அவன் மனசு நோகாம நடந்துக்க... ஸ்ரீநாத் பாத்துக்க



இதுவரை நடந்தவை:

அனாதை இளைஞன் பிருத்விராஜ், ஓர் அற்புதமான கதையுடன், படவுலகில் ஜெயித்துக் காட்ட வேண்டும் என்ற வெறியுடன் டைரக்டர் இளங்குமரனை அணுகுகிறான்.

கதைக்காக பிருத்விராஜைச் சேர்த்துக் கொள்கிறான், இளங்குமரன். கதையின் நாயகியாக ஷில்பாவைத் தேர்ந்தெடுக்கிறான். ஷில்பா, பிருத்விராஜின் கதை சொல்லும் பாணியில் மயங்கிப் போகிறாள்.

மேக்கப்மேன் ஜூபிடர் ரத்தினம் வறுமையுடன் நிறையப் போராடியவர். மனைவியை இழந்தவர். ராணி, ஷில்பா, திலகா என்ற மூன்று பெண்களுக்குத் தந்தை. அழகான ஷில்பாவை ஹீரோயினாக ஆக்கிவிட்டால் சுகவாழ்வு வாழலாம் என்ற கற்பனையில் மகளை 'அப்படி, இப்படி' அட்ஜஸ்ட் செய்து கொள்ளச் சொல்லும் பரிதாபத் தந்தை.

ஹீரோ அஸ்வின் குமார் ஷில்பாவை வீழ்த்த முயன்று, தோற்று, ஷில்பாவின் தந்தை மூலம் அவளுக்குப் பங்களா வசதியெல்லாம் தந்து அவளை அடைய நாள் பார்க்கிறான்.

காமிராமேன் ஸ்ரீநாத், தன் வாழாவெட்டித் தங்கை புனிதாவுடன் இருக்கிறான். புத்திசாலி. பிருத்விராஜைத் தன் வீட்டிலேயே தங்குமாறு கூறுகிறான். பிருத்விராஜ் சம்மதிக்கிறான்.

இளங்குமரனின் 'எங்கே என் இதயம்' படம் தோல்வியைத் தழுவ, அதனால் அவன் குடியில் புத்தியைச் சிதறவிட, ஸ்ரீநாத்தும் பிருத்விராஜும் பிருத்விராஜின் கதையான 'நீரில் மிதக்கும் நிலாவை' செல்லுலாய்டில் வளர்க்கிறார்கள்.

ஷில்பாவின் தங்கை திலகா, சந்திரன் எனும் பணக்கார இளைஞனுடன் திடீர்க் காதல் வசப்படுகிறாள்.

ராஜா... பத்திரிகைக்காரன் ஒண்ணும் பொய்யாச் சொல்லிடலை போலிருக்குது.. நீதானே பாத்துக்கறே... நான் வீட்டுக்குப் போறேன்... அங்க எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்குது... பாத்துக்கறியா...''

இளங்குமரன் சடாரென்று திரும்பினான். வந்த வழியே வாசலை நோக்கி விருவிரு என்று நடந்தான்.

செட் பெருமூச்சு விட்டது.

''லைட்ஸ் ஆன்...''

செட்டில் இருந்த அத்தனை லைட்களும் உயிர் பெற்றன.

கிளாப் தட்டும் பையன் காமிராவுக்கு முன்னால் ஸீன் நம்பர், டேக் நம்பர், எழுதிய பலகையைக் காட்டி உருவிக் கொள்ள, ''ஆக்ஷன்'' என்றான் பிருத்விராஜ்.

புனிதா, ஸ்ரீநாத், பிருத்விராஜ் மூன்று பேரும் டைனிங் டேபிளின் நாற்காலிகளில் அமர்ந்து விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''அப்புறம்?'' என்றாள் புனிதா, சிரிப்பை அடக்க முடியாமல்.

''டெய்லரையும் வெச்சிகிட்டா ஷூட்டிங் நடத்தறோம். சேனாபதிக்கு ஒடம்பு நார்ச்சுரலாவே கொஞ்சம் பெரிசு... ஒரு தடவை குனிஞ்சி நிமிந்த உடனேயே பாண்ட் பட்னு போயிருச்சி. அவசரம் அவசரமா அடை

சுபா

● ● கேரள மாநில பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களில் 'அ' என்ற எழுத்துக்கு 'அம்மா' என்ற உதாரண வார்த்தையாகத் தரப்பட்டிருந்ததை எடுத்து விட்டு 'அரிவாள்' என்ற வார்த்தை புகுத்தப்பட்டிருக்கிறது.

— ஏ. கே. நாசர்.

யாறுல இருக்கிற ஒரு டெய்லரைப் புடிச்சி பாண்டை லூசாக்கித் தச்சு அதுக்கப்புறம் தான் ஷூட்டிங் கன்டின்யூ ஆச்சி... இன்னொரு சப்பாத்தி போடேன்."

"பிருத்வி..."

"என்னங்க...?"

"அட, இந்த வாங்க போங்க சமாச்சாரமெல்லாம் விட்டுருங்க... வா, போன்னே சொல்லுங்க... நான் உங்களை விட வயசில பெரியவளா இருந்தா வாங்க, போங்க ஓ.கே. புனிதா ஈஸ் ஜஸ்ட் ட்வென்டி ஒன்..."

"அதெல்லாம் சரி. எனக்குச் சட்டுனு வாங்க போங்கவை விட முடியாதே... நானா மாத்திக்கறேன்... என்னவோ சொல்ல வந்தீங்களே..."

"ஒரு சர்தார்ஜி ஜோக்."

"சொல்லுங்க... படத்தில வெக்க முடியுதான்னு பாக்கலாம்."

"வெறும் வயத்தில எத்தனை சப்பாத்தி சாப்பிடுவேன்னு ஒரு சர்தார்ஜியைப் பாத்து இன்னொருத்தர் கேட்டாராம்..."

"ம்."

"அஞ்சு சப்பாத்தின்னு பதில் சொன்னாராம் நம்ப சர்தார்ஜி."

"ம்னு சொன்னாத்தான் ஜோக்கை மேல சொல்லுவியா... சொல்லேன் புனிதா" என்றான் பிருத்விராஜ் பொறுமை இழந்து.

"தட்ஸ் குட். ஒருமைக்கு இவ்வளவு சீக்கிரம் வருவீங்கன்னு எதிர்பார்க்கல... எல்லாம் எடத்தைக் கொடுத்தா மடத்தைப் புடுங்கற கேஸ்."

"ஐயையோ... இல்லைங்க... ஜோக் கேக்கற அவசரத்தில..."

"நீங்க கேட்ட விதம்தான் கரெக்ட். ஜோக்கை விட்டுட்டீங்களே... அஞ்சு சப்பாத்தின்னு சொன்னாராம் சர்தார்ஜி.. அது எப்படி, ஒரு சப்பாத்தி விள்ளலை வாயில போட்டாலே வெறும் வயிறு சப்பாத்தி இருக்கற வயிறா மாறிடுமே... அப்புறம் எப்படி வெறும் வயத்தில அஞ்சு சப்பாத்தி சாப்பிடுவேன்னு சொல்வீங்க...ன்னு கேட்டு சர்தார்ஜியோட ஃப்ரண்ட் மடக்கிட்டாராம். 'அடடா... நல்ல ஜோக்னு சர்தார்ஜி சொல்லிட்டு அதே கேள்வியைத் தன்னோட வேற ஒரு ஃப்ரண்ட்கிட்ட கேட்டாராம். 'வெறும் வயித்தில எத்தனை சப்பாத்தி சாப்புடுவ ராம்தயாள்?'

'ஆறு'ன்னு சொன்னாராம் ராம்தயாள். 'போங்க ராம்தயாள்.. அஞ்சு சப்பாத்தின்னு சொல்லியிருக்கக் கூடாது.. நான் ஒரு நல்ல ஜோக் சொல்லி இருப்பேனே..." புனிதா சிரிக்காமல் சொல்லி முடித்தாள்.

ஸ்ரீநாத்தால் சிரிப்பை அடக்க முடியவில்லை. பிருத்விராஜால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"எங்கேருந்து பிடிக்கற இந்த ஜோக்கையெல்லாம்?" என்று கேட்டான் ஸ்ரீநாத்.

"எனக்கு வேற வேலை என்ன இருக்குண்ணா. நீ காமிராமேன். தொழில் இருக்கு. இவரு ரைட்டர். பேனா போதும். எனக்கு என்ன இருக்கு. புத்தகமெல்லாம் படிக்கறதுதானே என் வேலை...." என்றாள் புனிதா.

சர்ரக் என்று அம்பு ஒன்று பாய்ந்து வந்து தைத்த மாதிரி இருந்தது பிருத்விராஜிற்கு.

திலகா வாசற்படியைத் தொடும் போது ராணி கேட்டாள்.

"எங்கே போறே? சொல்லிட்டுப் போ..."

"போவும் போதே கேட்டியாக்கா... உருப்பட்டா மாதிரித்தான்."

"ஆமா... நீ வெட்டி முறிக்கப் போறே பாரு... ஏற்கெனவே வீட்டுக்கு வர விருந்தாளிங்ககிட்டல்லாம் நீ கோயில் மாடுன்னு பேரை வாங்கிட்டு இருக்கே. இவ்வளவு காலையில, லீவு நாள் அன்னிக்கு உனக்கு என்ன வேலை?"

"ஸ்பெஷல் கிளாஸ் போறேன். போதுமா?"

திலகா வீட்டை விட்டு வெளிப்பட்டாள். பஸ் ஸ்டாண்டிற்குத் தெருமுனை வரை நடக்க வேண்டி இருக்கிறது. ஆட்டோ வந்தால் பரவாயில்லை. ஷில்பாவிடம் சொல்லிக் கூடிய சீக்கிரம் ஒரு கார் வாங்கச் சொல்ல வேண்டும்.

"ஆட்டோ..."

திருவான்மியூர் பஸ் ஸ்டாண்ட் அருகே ஆட்டோவை நிறுத்தி இறங்கினாள். எதிர்ச்சாரியில் சந்திரனின் கார் காத்திருந்தது. சாலையைச் சடாரென்று ஒரு ராணி பார்வை பார்த்துக் கடந்தாள்.

"ஸாரி சந்திரா" என்றாள் காரின் முன் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து.

"ரொம்ப லேட்டாக்கிட்டே..."

"அதான் ஸாரி சொல்லிட்டேனே..."

"முதலைப் பண்ணை கிடையாது..."

"பின்னே?"

சந்திரன் பதில் சொல்லாமல் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு மாருதியை ஸ்டார்ட் செய்தான்.

மாருதி சர்ரென்று மகாபலிபுரம் சாலையில் விரைந்தது.

கடற்கரையோரமாக அமைந்திருந்த ஒரு மூன்று நட்சத்திர அந்தஸ்து உடைய ஹோட்டல் காம்பவுண்டில் நுழைந்தது.

கேட் கீப்பர் சந்திரனுக்குக் கையைத் தூக்கி சல்யூட் அடித்து விட்டுப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த திலகாவை உருவி விடுகிற பார்வை பார்த்தான்.


துப்பறியும்
சூர்யா - கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
கிரணிடம் தன் கதையைத் தொடர்ந்து கூறினார் சூரானா.
இந்த விஞ்ஞானிகளைப் பாருங்கள்...
இவர் டாக்டர் வில்லியம். ரசாயனத்தில் இரண்டு வருஷங்களுக்கு முன் நோபெல் பரிசு பெற்றவர்......
இவர் டாக்டர் ஸ்மித். ஸ்விடன் நாட்டு நிபுணர்.
எனக்கு யாரையும் பார்க்க வேண்டாம்.
இந்த விஞ்ஞானிகள் என்னுடன் ஒத்துழைக்க மறுத்தவர்கள்!
என்னைக் குருடாக்கி விட்டான்.
இவனுடைய ஆட்கள் என் மகள் கற்பைச் சூறையாடினர்.
போதும்! போதும்! கேட்டவரை போதும்!
இப்போது சொல்லுங்கள் உங்கள் முடிவு என்ன?
14
(தொடரும்)



பிரிவு

அவள் உள்ளம் ஏக்கத்துடன் தாய்வீடு உள்ள கிராமத்தையே வட்டமடித்துக் கொண்டிருந்தது. குமுறிக் குமுறி அழுது தீர்க்க வேண்டிய அவசரம். அழவும் முடிய வில்லை.

'என்னைக் காண ஆவலுடன் காத்திருக் கும் பெரியம்மா.... என் அக்கா... அவள் குழந்தைகள்....

'கிராமத்து வீட்டின் வெளி முற்றத்தை இந் நேரம் இருள் தழுவியிருக்கும். வாசல் படியில் அகல் விளக்கு எண்ணெய் குறைந்து தீய்ந்த வாசனையுடன் மங்கத் தொடங்கி யிருக்கும். இப்படித்தான் ஒருநாள் அந்திப் போதில்...

'பெரியம்மா அழுதாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இயல்பாகி, என்னை ஆறுதலாக அணைத்துக் கொண்டு கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டாள். இது அவள் வழக்கம்... இந்த சந்தியா வேளையிலும் பெரியம்மா தனியாக உட்கார்ந்திருப் பாளோ? அவளுக்கு நகரத்துப் பகட்டும் போலித்தனமும் புரியுமோ....?'

அவள் மௌனமாக மருகி அழுதாள்.

இந்த நகரத்தைப் பார்க்காமலேயே பெரி யம்மா இதை வெறுத்து வந்தாள். காரண மில்லாமல் இருக்குமா? வீட்டுக்கு மேல் வீடு! அடுக்கடுக்காய் இதென்ன குடியிருப்பு டப் பாக்களை அடுக்கி வைத்த மாதிரி? இதிலே என்னால் நிம்மதியாய் — பத்திரமாய் வாழ முடியுமோ? ஊஹூம்....!

அவள் வாசல்படியைத் தாண்டி வெளிக் கேட் பக்கம் போனதும் நின்றாள். இரும்புக் கேட் குளிர்ந்திருந்தது. இதமான குளிர்ச்சி. முகத்தை இரும்புப் பட்டையில் புதைத்துக் கொண்டதும் கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது.

பின்தங்கிய நினைவுகள் ஏன் இப்படி முட்களாகக் குத்துகின்றன? இனம் தெரி யாத துயரம், ஏக்கம், வேதனை பல பிறவி களைத் தாண்டித் தொடர்ந்து வருபவை போல் ஒழிக்க ஒழியாத பிணைப்புகளாகச் சூழ்ந்திருக்கின்றனவே....!

வாசல் பக்கம் தலைமுடியைக் கோதி வாரிக் கொண்டிருக்கும் காலை வேளையில், காற்றின் இனிய ஒலி செவிகளைத் தழுவும் போது, கவலையும், புரியாத அச்சமும் ஏன் சங்கடப்படுத்துகின்றன? திருமணம் நிச்சய மானதும், பிறகும் பெரியம்மாவின் மடியில் முகம் புதைத்து அழுதது நினைவிருக்கிறது. அப்போது கதவுப் பக்கம் நின்று கொண்டு அக்கா நமுட்டுச் சிரிப்புடன், "பெரியம் மாவை விட்டுப் பிரிந்து போகணுமே என் கிற துக்கமாக்கும் தங்கச்சிக்கு. இதுக்காக மாப்பிள்ளை பிடிக்கல்லைன்னு சொல்லிடு வியா? நல்ல சிவப்பு இல்லாட்டாலும், மாநிறத்திலே களையான வசீகரம். முகத் திலே பொலிவு. நல்ல ஆபீஸ் வேலை. வாடகை வீடுன்னாலும் நிறைய வசதி. பின்னே என்ன? உனக்கு இஷ்டமில்லைன் னால் சொல்லிடு...!"

அன்று நான் உரக்க அழுதிருப்பேனோ?

உள் வாசலைத் தாண்டி அரங்கில் நுழைந்த போது.... சோஃபா உறையில் பளிச்சிட்ட பூக்கள், மடிப்புக் கலையாத சட்டை, வேட்டி, சன்னமான கரை, புதிய தோல் செருப்புகள், அமர்ந்த பாதங்கள்... முழு உருவையும் ஒருசேரப் பார்க்கவில்லை, முடியவில்லை. பரீட்சையில் கேள்வித் தாளைக் கையில் கொடுத்து விட்டு வாய் மொழிப் பதிலுக்கு எதிர்பார்த்திருக்கிற மாதிரி எல்லார் பார்வையும் என் மேல் பதிந் திருக்க.... பிள்ளை வீட்டாரின் கேள்விக்குப்

பதில் சொல்ல இயலாமல் நான் தத்தளித்து நிற்க... உள்ளே ஓடி வந்து பெரியம்மாவின் மடியில் முகம் புதைத்து அழுது தீர்த்தேன்.

"என்னடி கண்ணே! கலியாணம் வேண்டாமா?" — சிரித்துக் கொண்டே கேட்டாள் பெரியம்மா.

அவள் கேவி அழுது கொண்டே சொன்னாள். "நான் எங்கியும் போக மாட்டேன். இந்த மாளிகைப்புரை வீட்டில் எனக்கு வசிக்க இடமில்லையா?"

தாம்பூலச் செல்லாவிலிருந்து ஒரு வெற்றிலையை எடுத்து, தடவி, காம்பு நீக்கியவாறே, பெரியம்மா சொன்னாள். "பெண்ணுக்கு ஆண் துணை வேணும்மா. ஆனால் மதி மறந்து ஆசாபாசம் வைக்கலாகாது. எதிர்த் தரப்பிலிருந்து அன்பு — பாசம் கிடைக்காமே போனால் கண்ணீர் விட வேண்டி வரும்..."

"என்ன பெரியம்மா, இதையெல்லாம் போய் இவளிடத்திலே சொல்லிக்கிட்டு... இவளும் உங்களைப் போலப் பரிதவிக்கணுமா? கணவனை நேசிக்கத்தான் வேணும்; இவள் நேசிப்பாள்" — அக்கா குறுக்கிட்டு வாதித்தாள்.

அக்கா இவள் பக்கம் திரும்பி, "இதோ பார் இந்து! நீ நேசிக்காமல் இருக்க முடியாது. கணவனை நேசிக்காமல் உன்னால் இருக்க முடியுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

இந்து தலையசைத்தாள். மறுதலிப்பாக இருந்தது. எதை மறுக்கிறாள்? எவருக்கும் தீங்கு செய்ய முடியாது இவளால்... ஆனால் எல்லாரையும் நேசிக்கவும் இயலாது. ஸ்கூல், ஹைஸ்கூல், காலேஜ் என்று படித்து முடித்த பிறகும் இவளுக்கென்று அந்தரங்க சகிகள் கிடையாது. ஹாஸ்டலில் அறைக்குள் அடைந்து கிடப்பதில் தனி சுகம் காண்பவள். இப்பவும் இப்படித்தானா? மணப் பெண்ணானதும் மனசு மாறாதா?

பெரியம்மா இந்துவின் தலைவகிட்டில் விரலால் தடவி ஆதரவுடன் சமாதானப் படுத்த முயன்றாள்.

இந்து சட்டென்று ஒரு கேள்வி கேட்டாள். "முன்பின் பழக்கமில்லாத ஓர் ஆண் பிள்ளையோடே இரவிலே எப்படி பெரியம்மா சேர்ந்து படுத்து உறங்க முடியும்?"

பெரியம்மா சிரித்து விட்டாள். அனுபவம் பொதிந்த ஆளுமைச் சிரிப்பு. "ஊருக்கு ஊரு நாறு வைப்பாட்டிகளை வெச்சுக்கிட்டு லீலா விநோதம் பண்ணிக்கிட்டிருந்த உன் முரட்டுப் பெரியப்பனோடே நான் காலமெல்லாம் ராவிலே படுத்து உறங்கல்லே...? பெண்ணாப் பிறந்திட்டால் இதெல்லாம் பட்டாகணும், இந்து!"

இந்து விதிர்த்துப் போனாள். காலம் முழுவதும் ஆண் வர்க்கத்தை வெறுத்து வந்த பெரியம்மாவே இப்போது இவளுக்கு எதிராகப் பேசத் தொடங்கியிருக்கிறாளே...! சிறு பிராயத்தில், கண்ணுக்கு மையிட்டு, நெத்திக்குப் பொட்டு இட்டு, மடியிலே கிடத்திக் கொண்டு, மார்போடு அணைத்துக் கொண்டு, இதே பெரியம்மா எத்தனை எத்தனை கதைகள் சொல்லியிருக்கிறாள்! நினைவு தெரிந்து, விவரம் புரிந்து வளர்ச்சி பெற்று வந்த பிராயத்தில் பெரியப்பாவை நான் தீவிரமாக வெறுத்திருக்கிறேன்... அப்பாவையும் வெறுத்திருக்கிறேன்... அப்பு மாஸ்டரை வெறுத்திருக்கிறேன். அக்கம் பக்கத்திலிருந்த ஆண்களையெல்லாம் வெறுத்திருக்கிறேன்... ச்சை! மிருகங்கள்.

இந்துவின் மனத்திலிருந்து கனல் பொறிகள் பீறிட்டன. 'யாரிடத்திலே பகை? எதற்காக? எனக்கு எதிரி யார்? பெரியப்பாவா? அப்பாவா? எனக்கு நானே எதிரியோ...? உள்ளத்துள் இருள் கவ்வியிருக்கும் போது முகத்தில் வெளிச்சம் பட்டால் சரியாகுமா...?'

"வீண் பேச்சு, கண்ணு! கழுத்திலே தாலி ஏறினால் இந்தக் கலக்கமெல்லாம் கரைந்து போகும். நீ தாயில்லாப் பெண்... நீ குடியும் குடித்தனமுமாய் பிள்ளை குட்டிகளோடே நிறைஞ்சு வாழுற போது நான் நிம்மதியாய்க் கண் மூடணும், இந்து...!" தழுதழுத்த குரலில் பெரியம்மா சொன்னதும் வாயடைத்துப் போனாள் இந்து.

கலியாண மேடையில் புத்தாடை, பூமாலை, அணி அலங்கார ஒப்பனையுடன் நிற்கும் போது வாய் விட்டு அழ வேண்டும் என்று தோன்றியது; அழுகை வரவில்லை. மல்லிகை மலரின் நறுமணத்தில் கிறங்கியபடியே அந்த இடத்தை விட்டு ஓடி விட வேண்டும் என்று மனசு பரபரத்தது. அடக்கிக் கொண்டாள். திருமண மங்கலச் சடங்குகள் நிறைவு பெற்று, விருந்து முடிந்து, மணவாளனுடன் படியிறங்கி வெளியே வந்த போது, திரும்பி ஓடிப் போய் மாளிகைப் புரை வீட்டுக்குள் புகுந்து கொள்ள வேண்டும் என்று ஆவேசம் உந்தியது.

"என்ன இது? ரொம்ப வேர்க்கிறதா?" — நெற்றியில் முத்துக்களாகக் குமிழ்ந்திருந்த வியர்வைகளைப் பிரியமாகத் துடைத்து விட்ட ஆணின் முதல் கைபடல் தீயாகச் சுட்டது. கணவனின் கரத்தை ஒதுக்கினாள். கூச்சப்படுகிற நாணம் என்று எண்ணி, அவன் இதமாக முறுவலித்ததும் மனத்தில் பதிந்தது.

"கொஞ்சம் டயமாகும், ஸாரே?" — அக்கா குறும்பாகச் சிரித்துக் கொண்டே சமாதானப்படுத்திய விதம் — அசல் கேலி.

கார் இந்துவையும் அமர்த்திக் கொண்டு செம்மண் சாலையைக் கடக்கும் போது, அவளது கலங்கிய கண்கள் குன்றுகளில் பதிந்திருந்தன. கருமுகில்கள் குன்றுகளைத் தழுவி நின்றும் பொழியாமல் விலகிப் போவதை சங்கடத்துடன் பார்த்தாள். கார் மேகங்கள் துண்டங்களாகச் சிதறி விரை

செல்லம்மாள் ஜோசப்

வது தன் எண்ணங்களின் பிரதிபலிப்பாகத் தோன்றியதால் கண் கலங்கினாள்!

"என்ன இந்து! சிறு பெண்ணைப் போல அழப் போகிறாயா?"

தீச்சூடுபட்டாற் போலிருந்தது. கணவன் பரிவுடன் பற்றி இழுத்து அழுத்திக் கொண்ட தன் கையை வலிய விடுவித்துக் கொண்டாள்... இதென்ன ஒட்டாத உறவா...?

"வா, இந்து! ஏன் இப்படி ஒதுக்குறே? ஒட்டாமல் ஒதுங்கறே? இனியும் கூச்சம் வெட்கமெல்லாம் கட்டுபடியாகுமா?"

ஓர் ஆண் புது மணவாட்டியிடம் முதலில் கேட்கும் இறக்க மூட்டும் கேள்வி. இந்துவிற்கு முள் குத்தியது. தான் நிராதரவாய், நிர்க்கதியாய் சிக்கிக் கொண்டு பரிதவிப்பதையும், தன்னிடமுள்ள சிறப்பெல்லாம் பறிபோகப் போவதையும் குலைநடுங்க, பதை பதைப்புடன் உணரலானாள்.

அவள் விம்மினாள். "நான் பெரியம்மாவை முதல் முதலாகப் பிரிந்து வந்திருக்கிறேன்... எனக்கு அம்மா; அப்பா எல்லாம் அவங்கதான். என் அக்கா குழந்தைகளுக்கு என் பேரிலே உசிரு. எனக்கும்தான்; இதனாலேதான்...."

"கவலைப்படாதே இந்து. இரண்டு நாள் போகட்டும். திரும்ப உன் கிராமத்திற்குப் போவோம். எல்லாரையும் பார்க்கலாம்."

"நிசம்மா....!" — குழந்தையைப் போலக் குதூகலித்தாள்.

பிறகு அந்த மனிதன் முணுமுணுப்பதும் காதில் விழுந்தது. "ஊரிலே இருக்கிறவங்களையே நினைச்சுக்கிட்டு ஏங்கறதுக்கு நீ என்ன பாப்பாவா? இனிமேல் நாம் நம் வாழ்க்கையைத்தானே கவனிக்கணும், இந்து!"

பயங்கரமான பேய் — பிசாசுக் கதையில் வரும் திடீர் திருப்பத்தைக் கேட்டு விட்டதைப் போல் விதிர்த்துப் போனாள்.

புதிய வீடு, புதிய குடித்தனம், புதிய துணை; எல்லாமே அந்நியம். படுக்கையறை அழகாக இருந்தும் அருவருப்பான சிறைக் கொட்டடி போல் தோன்றியது. அளைந்து பறக்கும் கூந்தலை முடிக்காமலேயே தலையணையில் முகம் புதைத்து விம்மினாள்.

என் பெரியம்மா! அகல் விளக்கை அணைக்காமல், இருள் புகாமல், அமைதி பூத்த என் படுக்கையறை, பக்கத்தில் பெரியம்மா. திரி படர்ந்து எண்ணெய் காய்ந்த வாசனை சூழ, அந்த அறையில் எத்தனை சுகமாய் — நிம்மதியாய் உறங்க முடிகிறது! பெரியம்மாவை அணைத்துக் கொண்டு....

சிகரெட் மணம் கவிய, பட்டு ஜிப்பாவும் சென்ட் வாசனையும் தாக்க, "வா, இந்து!" — வலுவான கரம் அணைத்து இழுக்கும் போது, பயப்பிராந்தி தாக்கியது. மேனி நடுங்கியது.

"ஏன் இப்படி....? என்ன பதற்றம் இது...?" புதிய துணையானவன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

இந்து முகம் பொத்தி அழ ஆரம்பித்தாள்.

கணவன் துணுக்குற்றான். "என்னம்மா இது? ஏன் அழறே? என்னைப் பிடிக்கலையா? முதலிலேயே சொல்லியிருக்கலாமே."

அவள் பதில் கேவல்தான்.

"நீ வேறே யாரையாவது நேசிக்கிறியா? காதலிச்சியா?"

அழுகையினூடே, "இல்லை, இல்லை... என்னாலே அதெல்லாம் முடியாது" என்றாள்.

"சரி, நீ படுத்துத் தூங்கு. காலையிலே எல்லாம் சரியாயிடும். நான் கூடத்திலே படுத்திருக்கேன்."

மறுநாள் காலையில் இந்து குளித்து விட்டு தலைமுடியைக் கோதி உலர்த்திக் கொண்டிருக்கும் போது, கணவன் சொன்னான். "நீ காப்பி போட வேண்டாம். ஹோட்டலிலேயிருந்து வரவழைச்சுக்கலாம். இன்னைக்கு நீ அடுப்பே மூட்ட வேண்டாம். ஹோட்டலிலே சாப்பிடுவோம்."

கணவனுடன் சேர்ந்து பல இடங்களுக்குப் போய் விட்டுச் சாயந்திரம் வீடு திரும்பினாள். நண்பனைச் சந்தித்து வர அவன் தனியாகப் புறப்பட்டான். வெளியேயும், இப்போது வீட்டிலேயும் ஒட்டுதல் இல்லாமல் ஒதுங்கியே இருக்கிறாள். அந்நியத்தனம் ஆட்கொண்டிருக்கிறது.

வீடு திரும்பிய கணவன் எந்த முஸ்தீபும் இல்லாமல் இந்துவை இழுத்து இறுக அணைத்துக் கொண்டான். மூச்சு முட்டியது அவளுக்கு. உதறிக் கொண்டு, தவித்துத் தளர்ந்து போனாள். மூளைப்படலத்தில் ஏதேதோ பளிச்சிடுகின்றன.

பெரியம்மாவை பெரியப்பா முரட்டுத்தனமாய் தாக்குவது. பெரியம்மா அலறி அழுது, சபித்து விட்டு சுருண்டு விழுவது. ரகளை ஓய்ந்தும் அச்சம் நீங்காத பேய்த்தனமான மௌனம், கேவல்கள்...

"ஐயோ! என்னாலே முடியாது. எனக்கு உடனே ஊருக்குப் போகணும்! போயாகணும் இப்பவே....!" அலறி விட்டாள்.

இனிய மாளிகை இடிந்து தரைமட்டமாகி விட்டதன் பேரிழப்பு தரும் அதிர்ச்சி அவனுக்கு. இந்துவை முறைத்துப் பார்த்தான். நிதானித்துக் கொண்டு, "உன் வியாதிக்கு இங்கே வைத்தியம் இல்லை. பின்னிரவில் ரயில் இருக்கிறது. புறப்படு, உங்க ஊருக்கே போகலாம்" என்றான்.

இந்துவின் முகம் பிரகாசமடைந்தது. மகிழ்ச்சி பெருக, "நிசம்மா? நான் ரெடியாகட்டுமா? அந்த ரயிலிலே போகலாமா?" — குழந்தையைப் போல் குதூகலித்தாள்.

கணவனின் பெருமூச்சைத்தான் பதிலாகப் பெற்றாள். வெளியே மழை ஓயவில்லை. தொலைவிலிருந்து தொழிற்சாலைச் சங்கு காற்றின் ஒலியோடு இழைந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

தமிழாக்கம்: **சௌரி**


10 கணக்குகள் போட வேண்டும்.
ஆங்கில பாடத்தில் வீட்டு வேலை.
பூகோளப் பரீட்சைக்குப்படிக்க வேண்டும்.
மேலும், நாளைக்கு அவனுக்கு கிரிக்கெட் மேட்ச் வேறு இருக்கிறது.
"அம்மா, இந்த கொசுத்தொல்லைக்கு ஏதாவது செய்யேன்!"
BANISH
மாலை, இரவு நேரங்களில் கொசுவுடன் விடாது போராட வேண்டியிருந்தால், பள்ளிப்பாடத்தில் மட்டுமல்ல, விளையாட்டிலும் சாம்பியனாக இருப்பது அவ்வளவு எளிதல்ல.
ஆகவே இன்றே பேனிஷ் வாங்குங்கள்.
அது மிகவும் பாதுகாப்பானது. (உங்கள் குழந்தை அதைக் கையாளலாம்.) அத்துடன், அது கொசுக்களை விரைவாக ஒழிக்கும் மிக நவீனமான சாதனம்.
அதில் உள்ள விசேஷ எலக்ட்ரானிக் சிப், தொடர்ந்து ஒரே சீராக சூடாவதற்கு உறுதி செய்கிறது. மிகவும் செறிவாக மருந்து பூசப்பட்ட வில்லைகள், எந்த வில்லைகளையும் விட அதிக சக்தியுடன் செயலாற்றுகின்றன. பேனிஷ் இருந்தால் கொசுத்தொல்லையே இருக்காது.
நேரத்திலிருந்து, காலை கண் விழிக்கும் நேரம் வரை 12 மணி நேரத்திற்குத் தொடர்ந்த பாதுகாப்பு
BANISH
மிகவும் சக்தி வாய்ந்த எலக்ட்ரானிக் கொசு விரட்டி.
HTA 7003


நியுபான்
தாயின் அரவணைப்புக்கு ஈடான
சிறந்த டானிக்
சிறந்த
மூலிகைகளைக்
கொண்டு
குழந்தைகளுக்காகத்
தயாரிக்கப்பட்ட
ஜீரண டானிக்.
nubon
பிறந்த குழந்தையின் ஜீரண உறுப்புகள் சரியாக அமைந்திருந்தாலும் அவை முதிர்ச்சி அடையும் காலத்தில் முழுமையான ஜீரண சக்தி அமையாமல், பசியின்மை, வயிற்று வலி, விக்கல், வயிற்றுப் பொருமல், எதுக்களித்தல், மலபந்தம், பேதி முதலியவைகளால் குழந்தை பாதிக்கப்படலாம். மேற்குறித்த காரணங்களால் தேவையற்ற அழுகை, அமைதியற்ற தன்மை, தூக்கமின்மை ஆகியவையும் மற்றும் ஜலதோஷம், இருமல் ஆகியவையும் ஏற்படக்கூடும்.
அனுபவமிக்க தாய்மார்கள், பன்னெடுங் காலமாகத் தங்கள் குழந்தைகளின் ஜீரண சக்தியை வலுப்படுத்தவும், உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் உபயோகித்து நல்ல பலன் கண்ட சிறந்த மூலிகைகளான ஓமம், வசம்பு, சித்தரத்தை, அதிமதுரம், திப்பிலி, கடுக்காய், ஏலக்காய் ஆகியவைகள் தேவையான அளவு நியுபானில் சேர்க்கப்பட்டுள்ளன. குழந்தை முழுமையான ஆரோக்கியத்துடனும் புஷ்டியாகவும் வளர, விரும்பிச் சாப்பிடக்கூடிய ஜீரண டானிக்கான நியுபான் அவசியம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது - பாதுகாப்பானது.
ஆல்கஹால், போதைப் பொருட்கள், சோடியம் பை கார்பனேட் கலப்பு இல்லாதது.
PHARM PRODUCTS
பார்ம் ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
'விஜய்', மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 613 007, தமிழ்நாடு.
தொலைபேசி எண் : 22025/22225 டெலக்ஸ் : 0468-205 PPPL IN
விநியோகஸ்தர்கள் மேலும் தேவை : விபரங்களுக்கு அணுகவும்.
SOBHAGYA

தொடுவான மனிதர்கள்

7

ராதிகா சொன்னதைக் கேட்டு சில வினாடிகள் அவளையே தீர்க்கமாகப் பார்த்தாள் பாட்டி. அந்த முகத்தில் விரவிக் கிடந்த குழப்பமும், கலவரமும், சோகமும் தேவையற்றதாகப் பட்டது. வாழ்க்கையின் சில நிஜங்களைச் சந்திக்காமல் புறக்கணிக்க முடியாது என்று தோன்றிற்று. நடைமுறைக்குத் தகுந்தவாறு சிலவற்றை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். அதிலும் சற்று முன் அவள் சொன்ன விஷயம் எல்லா வகையிலும் உசிதமாக, ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க — இந்தப் பெண் ஏன் இப்படி குழம்பித் தவிக்கிறது என்ற கேள்வி எழுந்து பாட்டியையும் சங்கடப்படுத்திற்று.

ராம்குமாரும் அவளும் இருந்த அந்நியோன்யத்தைப் புரிந்து கொண்டவள் பாட்டி. அந்த ஜோடிப் பொருத்தத்தையும், மனப் பொருத்தத்தையும் பார்த்துப் பார்த்து சந்தோஷப்பட்டவள். 'ஈஸ்வரா இவர்களையாவது நல்லபடியாக வை' என்று வேண்டிக் கொண்டவள். ஆனால் அந்த வேண்டுதலுக்கு ஈஸ்வரன் செவிசாய்க்கவில்லை. ராம்குமார் விபத்தில் சிக்கி இவ்வாறு செத்துப் போவான் என்பது முன் கூட்டித் தெரிந்திருந்தால் என்னவாகி இருக்கும்...? அவன் இவளையோ — இவள் அவனையோ நேசித்திருக்கப் போவதில்லை. பழகியிருக்கப் போவதில்லை. சில மாத வாழ்க்கைதான் பாக்கியிருக்கிறது என்பது தெரிந்திருக்கிற பட்சத்தில் அந்தப் பிள்ளை நிச்சயம் ராதிகாவின் வாழ்க்கையில் குறுக்கிட்டிருக்காது. அதெல்லாம் தெரியாத வகையில், எதிர்காலம் என்பதை மூடு மந்திரமாக்கி, மாயையில் தடுமாற வைக்கிறதுதான் ஈஸ்வர சங்கல்பம். அதே சங்கல்பம்தான் இப்போது ராம்குமார் என்ற கதவைச் சாத்தி கார்த்திகேயன் என்கிற கதவைத் திறந்து இவளை சுவாசிக்கச் சொல்கிறது. மூச்சுத் திணறாமலிருக்க வழி செய்திருக்கிறது. இருட்டில் தடுமாறாமல் வெளிச்சம் காட்டுகிறது.

இவளது வாழ்க்கை இந்தப் பத்தொன்பது வயதிலேயே கருகிப் போக விடக் கூடாது. இழந்ததையே நினைத்து நிகழ் காலத்தை மறக்கும்படி செய்யக் கூடாது. கல்யாணமாகிக் குடித்தனம் பண்ணி வீட்டுக்காரன் செத்துப் போகிறவர்கள் எல்லாம் திரும்பக் கல்யாணம் பண்ணிக் கொள்கிற காலம் இது. தன்னை மாதிரி மழித்த தலையும், நார்மடிப் புடைவையுமாக நிற்கிற காலமில்லை.

பாட்டி கொஞ்சம் கூடப் பிசிறு தட்டாத குரலில், வழக்கம் போல் மிகவும் நிதானமாய்ப் பேச வேண்டியதையெல்லாம் ஒழுங்குபடுத்திக் கொண்டு விட்ட மாதிரி ஆரம்பித்தாள். மிகவும் இதமாய், மென்மையாய் அவளது உணர்வுகளைப் புரிந்து கொண்டவளாக வருடிக் கொடுக்கிற விதத்திலேயே தொடர்ந்தாள்....

'நீ சொன்னதையெல்லாம் கேட்டுண்டேன் ராதிகா... ஒரு வார்த்தை விடாம மனசுல வாங்கிண்டேன். உன்னோட சங்கடம், குழப்பம் எல்லாம் எனக்கு நன்னாவே புரியறது. உங்க சேர்மென் உன்னைக் கூப்பிட்டுச் சொன்னதை நீ எதிர்பார்க்கலேன்றது தெரியறது. அந்தப் பிள்ளை ராம்குமார் உன் மனசுல மட்டுமில்லாமல் எல்லார் மனசுலயும் தன்னைக் கல்வெட்டுல செதுக்கின மாதிரி செதுக்கி வச்சுட்டுப் போயிட்டான்றது வாஸ்தவம் தான். அத்தனை சுலபமாவோ, சீக்கிரமாவோ அவனை மறக்க முடியாதுன்றது நிஜம். ஆனா அதுக்காக அவனையே நினைச்சுண்டு உருகிண்டிருக்க முடியுமா சொல்லு...? கல்வெட்டுல செதுக்கின பகவானைக் கூட அவாவா நேரத்துக்கும், சக்திக்கும் தகுந்த மாதிரி ஒரு நிமிஷமோ, ஒரு மணி நேரமோ நெனைச்சுண்டு, பூஜைன்ற பேர்ல 'உன்னை மறக்கலடாப்பான்னுன்ற'தை அவனுக்குத் தெரியப் படுத்திக் காட்டிட்டு அதுக்கப்புறம் அவாவா வேலையை, நித்ய கர்மாவை கவனிக்க ஓடறோம் இல்லையா...? அதை விட்டுட்டு அவனையே நினைச்சுண்டிருக்கேன்னு பூஜை ரூமிலேயே உட்கார்ந்துண்டிருந்தா தினசரி வாழ்க்கை என்ன ஆறது...? பொழைப்பு எப்படி நடக்கறது...? இத்தனை பேரையும் படைச்சு, இந்த நடைமுறை வாழ்க்கையை ஏற்படுத்தினதே அவன்தானே...? கண்ணுக்குத் தெரியாத ரூபத்துல எங்கோ இருந்துண்டு அத்தனை பேரையும் ஆட்டிப்படைக்கிறது அவன் தானே...? இந்த ஜன்மாவை சிருஷ்டனை பண்ணினவனுக்கு நாம ஒதுக்கறது கொஞ்ச நேரம்தான்ற போது, நம்ம வாழ்க்கைல கொஞ்ச காலம் குறுக்கிட்டு, அந்தத் தெய்

இந்துமதி

வமே அனுப்பி வச்ச மாதிரி வந்து, பரிவையும், பாசத்தையும் கொட்டியவனை நினைச்சுண்டு காலம் முழுசையும் ஓட்டிட முடியுமான்னு யோசிச்சுப் பாரு...?''

"பாட்டி..." என்று இடையில் ராதிகா ஏதோ கேட்க வர அவளைச் சட்டென்று அடக்கி விட்டுச் சொன்னாள் பாட்டி...

"...இரு... அவசரப்படாதே... நான் சொல்ல வந்ததையெல்லாம் சொல்லிடறேன். அப்புறமா நீ பேசு. கேட்டுக்கறேன். நான் பேசறதுக்கும் உன் விஷயத்துக்கும் நிறையச் சம்பந்தமிருக்கு. இப்படி ஆதியோட அந்தமா எடுத்துச் சொன்னால்தான் உனக்குப் புரியும்னு சொல்றேன். உனக்குள்ள உறுத்தலோ, குற்றம் பண்ணிட்ட உணர்ச்சியோ ஏற்படக் கூடாதுன்னு விரிவா பேசறேன். காலம் ரொம்ப வேகமா மாறிண்டு வர்றது. பொம்மனாட்டிகள் விவேகமா நடக்க ஆரம்பிச்சுட்டா... படிச்சு, முன்னுக்கு வந்து சரிசமமா வேலைக்குப் போறா... இப்போ இந்த மாதிரி— என்னைப் போல — ஒருத்தியை நிற்க வைக்க முடியுமா சொல்லு...? நிற்க வைக்கலாமா...? முதல்ல இதுலேர்ந்து வெளில வந்தா — அப்புறம் இளம் வயசுல வீட்டுக்காரன் செத்துப் போயிட்டா ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்க ஆரம்பிச்சா.. அதுக்கப்புறம் அப்படி ஆனவளுடைய அப்பா, அம்மாவே அவளை அந்த மாதிரி நிற்க வச்சுட முடியாது— விட்டுடக் கூடாது.. அவளுக்குத் துணை தேவைன்னு புரிஞ்சுண்டு தாங்களே கல்யாணம் பண்ணி வைக்கத் துணிச்சலா முன்னுக்கு வந்தா... இப்போ... அதையெல்லாம் தாண்டி மனசு ஒத்துப் போகலேன்னோ — வேற சில காரணத்தாலோ — விவாகரத்து கூட வாங்கிண்டு அதுக்கப்புறம் வேற கல்யாணம் பண்ணிக்கறா..

"அந்த அளவுக்கு எல்லாம் மாறி இருக்கு. முன்னேறியிருக்குன்றப்போ நீ மட்டும் பழைய மாதிரி இருந்துட முடியாது ராதிகா. இருக்கவும் கூடாது. கல்யாணம் கூட பண்ணிக்காத ஒருத்தனை மனசளவுல ஸ்மரிச்சதால அவனையே நினைச்சுண்டு, அப்படியே அழுதுண்டு, மூஞ்சியை சோகமா வச்சுண்டு, வேலைக்குப் போய் சம்பாதிச்சுப் போடற வெறும் இயந்திரமா இருந்துட முடியுமா சொல்லு...?"

"ஐயோ... பாட்டி... நான் சொல்றதை



நீங்க புரிஞ்சுக்க மாட்டேன்றேளே... நாங்க வெறும் மனசால மட்டும் ஸ்மரிச்சவா இல்ல....''

கால் வினாடி அவளைக் கண்ணிமைக்காமல் பார்த்த பாட்டி கேட்டாள்.

''அப்படின்னா... புருஷன் பெண்டாட்டி மாதிரி நடந்துண்டதாச் சொல்றியா...?''

ராதிகா தலைகுனிந்து மெதுவாக இல்லை என தலையாட்ட பாட்டி கேட்டாள்.

''அப்படின்னா... வேற என்ன சொல்ல வரே...?''

''அந்த அளவுக்குப் போகலைன்னாலும் நாங்க... நாங்க....

''புரியறது... இந்தக் கால சினிமாவுல வர்ற மாதிரி நடந்துண்டிருப்பீங்க... அவ்வளவுதானே...?''

''........''

''இதப் பாரு ராதிகா... நீ குழந்தை இல்ல... கிழவியாகவும் ஆயிடல... பத்தொன்பது வயசுல நிக்கற குருத்து. குருத்துலயே வாடி வதங்கவோ, கருகிப் போயிடவோ கூடாதுன்ற ஆதங்கத்துனால இத்தனை பேசறேன். உன் வாழ்க்கை இப்படியே போயிட முடியாதும்மா... பணம் சம்பாதிக்கறேன். குடும்பத்தை நடத்தறேன். தம்பிங்களைப் படிக்க வச்சுக் கரையேத்திடுவேன்றதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். அதையெல்லாம் மீறி மனசுன்னு ஒண்ணு இருக்கு. உடம்புன்ற ஒன்னை தெய்வம் தந்திருக்கு. அதுதுக்குச் சில தேவைகளை ஏற்படுத்தி வச்சிருக்கு. அந்தந்தத் தேவை அப்பப்போ கிடைக்கணும்மா... நான் என்ன சொல்றேன்றது உனக்குப் புரியும். இப்பப் பிடிவாதமா — இன்னும் சொல்லப் போனா அசட்டுப் பிடிவாதம்னு கூடச் சொல்லுவேன் — இருந்துடலாம்னு கூடத் தோணும். ஆனா போகப் போக வயசாக ஆக அதுக்காக வருத்தப்படும். மனசு ஏங்கும். ஏதோ சிலரைத் தவிர கல்யாணம் வேண்டாம்னு நின்ன முக்கால்வாசிப் பேரும் அப்புறமா அந்தத் தப்புக்கு உள்ளுக்குள்ள வருத்தப்படறவாதான். இப்படி நின்னுட்டமேன்னு ஏக்கப்படறவாதான். மனசுல இருக்கிற எண்ணங்களைப் பகிர்ந்துக்கக் கூட ஒரு துணையில்லாமல் போன சங்கடங்களை அனுபவிக்கறவாதான். அதனால எத்தனையோ விதமான பாதிப்புக்கு உள்ளாகறவா... அதெல்லாம் உனக்கு ஏற்படக் கூடாது; நீ அப்படி நின்னு போயிடக் கூடாதுன்ற தவிப்புல பேசறேன். பழசையே நினைச்சுண்டிருக்கிறதுனால ஆகப் போறது ஒண்ணுமில்லேன்றதை தெரியப்படுத்தறேன்.

''உன் சேர்மெனும் தங்கமான பிள்ளையாத் தெரியறார். ரொம்ப உயர்ந்த மனுஷனாப் படறார். தன் மனசுல ஏற்பட்ட அத்தனை ஆசையையும் மறைச்சு எதையும் வெளியில் காட்டாம உங்க ரெண்டு பேருக்கும் தானே முன்ன நின்னு கல்யாணம் பண்ணி வைக்கிறதாச் சொன்ன அந்த மனசு யாருக்கு வரும்னு யோசிச்சுப் பாரு. ரொம்ப ரொம்பப் பெரிய மனசுக்குத்தான் வரும். அதனால — உன்னை நன்னாப் புரிஞ்சுண்டிருக்கிற இவருக்கு — நீயும், ராம்குமாரும் பழகினதெல்லாம் தெரிஞ்சிருக்கிற இவருக்கு நீ தைரியமா சரி சொல்லலாம்; சொல்லணும்கிறதுதான் என் தீர்மானமான முடிவு. நான் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிட்டேன். அப்புறம் நீ யோசிக்க வேண்டியது ஏதாவது இருந்தா அதையும் யோசிச்சு ஒரு நல்ல முடிவுக்கு வா. என்ன...?''

பாட்டி பளிச்சென்று சொல்லி விட்டுப் போய் விட்டாள். நிதர்சனமான விஷயங்களை வெகு சுலபமாக எடுத்துச் சொல்லி விட்டாள். பாட்டி சொன்னதெல்லாம் சரி, நியாயம், நடைமுறை வாழ்க்கை என்பது புரிபட்டாலும் அவளுக்குள் ஏதோ ஒன்று இடறிற்று. உடனே ஒப்புக் கொள்ள முடியாமல் தயங்க வைத்தது. ராம்குமாரின் நினைவு மட்டுமின்றி வேறொன்றும் அவளை யோசிக்க வைத்தது.

ராம்குமார் மாதிரி கார்த்திக் இருப்பானா...? அந்த அரவணைப்பான அன்பும் — தன்னைத் தோளில் சார்த்தி அழைத்துக் கொண்டு போன பாதுகாப்பும் கிடைக்குமா...? உன்னுடைய கஷ்டங்கள் எல்லாம் என்னுடையவை என்று நீண்ட அதே உதவிக்கரம் இவனிடமிருந்தும் நீளுமா...


வாழ்க்கையின் மிக மிக உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிற இவன் — வளர்ந்த அல்லது வளர்க்கப்பட்ட வெளிநாட்டுக் கலாச்சார இடைவெளி — இவற்றை நினைத்துப் பயந்தாள்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவளுக்கு அவன் ஒரு தொடுவான மனிதனாகத் தோன்றினான். யாரையும் தன் அருகே நெருங்க விடாதவனாகவும் — தானும் யாருடைய அந்தரங்கங்களிலும் குறுக்கிடாதவனாகவும் — தன்னைச் சுற்றி ஒரு வட்டம் போட்டுக் கொண்டு ஒட்டியும், ஒட்டாமலும் பழகுபவனாகவும் தொட நினைக்கிறவர்களை விட்டு தூரப் போகிறவனாகவும், விட்டேர்த்தியாய் வாழப் பழகிப் போனவனாகவும் தெரிய —

அவனிடமிருந்து சேர நினைக்கிற கரமும், சரிய வேண்டுகிற தோளும் கிடைக்குமா என்பது புரியாமல் — தானும் மனுஷி — தன்னுடையதும் எதிர்பார்ப்புகளைக் கொண்ட சாதாரண மனம்தான் என்பதை உணர்ந்து கொண்டவளாக — அடிமனசுக்குள் இத்தனையும் ஒளிந்து கொண்டு தன்னிடம் கண்ணாம்பூச்சி காட்டுவதை எண்ணி — 'ஒரு மனத்திற்குள் இத்தனை எண்ண ஓட்டங்கள் எழ முடியுமா...?' என்ற கேள்வியுடன் தன் கேள்விக்கு விடை கிடைக்காதவளாக ஆபீசுக்குக் கிளம்பத் தயாரானாள்...

(தொடரும்)

இந்த குடும்பத்திற்கு பிடித்தமான சோ
எது என்று யூகிக்க முடியுமா?



சன்ஸார். குடும்பம் முழுவதும் விரும்
ஒரே குளியல் சோப்.

சன்ஸார் சோப், உலகின் சில முக்கிய
தொழிற்சாலைகளின் ஒன்றான இத்தாலியன் தொழில்
நுட்ப துறையின் மூலம் நவீனமயமாக்கப்பட்ட
தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. சுத்தமான மூல
பொருட்களை மட்டுமே கொண்டு தயாரிக்கப்பட்டு
உங்கள் பணத்திற்கு மதிப்பையும், உங்கள் குடும்பத்திற்கு
நாள் முழுவதும் புத்துணர்ச்சியை கொடுக்கிறது.

FROM THE HOUSE OF MYSORE SANDAL SOAP

கர்நாடகா சோப்ஸ் அண்டு டிடர்ஜென்ட்ஸ் லிட்.,பெங்களூர் 560


அண்ணா
தங்கை
விசேட
சலுகை!
Sansar
THE FRESH FAMILY BATH SOAP
Sansar
புதிய
குறைக்கப்பட்ட
விலை ரூ. 3.75+
உள்ளூர் வரிகள்
தனி
Sansar
THE FRESH FAMILY BATH SOAP



ஆதிசங்கரர் கோவிலின் முன்புறத் தோற்றம்...

அருள் தரும் ஆலயங்கள்

திருவனந்தபுரம் ஸ்ரீ அனந்தபத்மனாப சுவாமி கோயில்:

திவாகர முனிவர் ஆதர்த்த தேசத்தில் தவம் புரிந்து கொண்டிருந்த போது, விஷ்ணு பகவான் அவர் முன்னிலையில் இரண்டு வயது பாலகனாகத் தோன்ற, முனிவர் அக்குழந்தையின் பேரில் மாறாக் காதல் கொண்டார். குழந்தையைத் தன்னோடு தங்கிவிடும்படி வேண்ட, குழந்தையும் அதற்கு ஒப்புக் கொண்டது. ஒரு நிபந்தனையின் பேரில்.

'எனக்கு ஏதாவது அவமானம் ஏற்பட்டால் நான் உன்னுடன் இருக்க மாட்டேன்.'

முனிவரும் ஒத்துக் கொண்டு சிறு குழந்தையின் குறும்புகளை ரசித்து வந்தார்.

ஒருநாள் முனிவர் சாளக்கிராமம் வைத்து பூசை செய்கையில், குழந்தை அந்த சாளக்கிராமத்தை எடுத்துக் கடித்து விளையாடியது. கோபம் கொண்ட முனிவர் குழந்தையைத் திட்ட, குழந்தை முன்பு சொன்னபடி உடனே ஓடி மறைந்து விட்டது.

திவாகரமுனிவருக்குப் பித்துப் பிடித்தது போல் ஆகியது. குழந்தையைத் தேடித் தேடி அலைந்த போது, அனந்தன் காட்டிற்கு அவரை வரச் சொல்லி குழந்தையின் குரல் ஒலித்தது.

அனந்தன் காட்டைத் தேடி திவாகர முனிவர் அலைந்து, கடைசியில் கடலோரத்தில் உள்ள ஒரு வனத்தில் ஒரு பெரிய இலுப்பை மரப்பொந்தில் குழந்தையைப் பார்த்தார். முனிவர் பார்த்த அதே கணம் மரம் நிலத்தில் விழுந்தது. அனந்த சயன வடிவமாக மகா விஷ்ணு முனிவருக்குக் காட்சி அளித்தார்.

மகாவிஷ்ணு, துளு முனிவரான திவாகர முனிவருக்கு அனந்த சயன வடிவத்தில் காட்சியளித்த அனந்தன் காடுதான் இன்றைக்குத் திருவனந்தபுரம். அனந்த சயன வடிவத்தில் மகாவிஷ்ணு காட்சி அளித்த இடத்தில் எழுப்பப்பட்ட கோயிலே அனந்த பத்மனாப சுவாமி கோவில் (அட்டை வண்ணப்படம் காண்க) என்பது தல வரலாறு.

கோவில் சுத்தமாக இருக்கிறது. அமைதியாக இருக்கிறது. பிராகாரத்தில் லேசான சந்தன மணம் காற்றில் கலந்து இருக்கிறது. கோவிலுக்குள் மூலவர் அனந்த பத்மனாபருக்குத்தான் கூட்டம் அத்தனையும்.

பெரிய சந்நிதி. மூன்று வாசல்கள். இடப் பக்க சந்நிதியில் அனந்த பத்மனாபரின் தலையைத் தரிசிக்க முடிகிறது. நடுச் சந்நிதியில் உடல். வலப்புற சந்நிதியில் பாதங்கள்.

ஐதீகப்படி பத்மனாபரின் தலை திருவல்லத்திலும், பாதம் திருப்பாப்புரத்திலும் உடல் திருவனந்தபுரத்திலுமாக நீண்டு கிடந்ததாகவும், திவாகர முனிவரின் வேண்டுகோளின்படி இறைவன் தன் உருவைச் சுருக்கிக் கொண்டான் என்றும் சொல்லப்படுகிறது.



குருவாயூர்க் கோயில் முகப்பில்...

பத்மனாபருக்கு சிரட்டையில் மாங்காய் நைவேத்தியம் படைக்கப்பட்டு பூஜை நடத்தப்படுகிறது.

கோயிலின் மூலவர் சந்நிதிக்கு இடது புறத்தில் ஒரு மண்டபத்தில் சிற்ப வேலைப் பாடுகள். மூலவர் குடிகொண்டிருக்கும் கர்ப்பகிருகத்தின் வெளிப்பக்கச் சுவரில் சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. ராமாயணக் காட்சிகள்; தேவர்கள்; அசுரர்கள் ஆகியோரின் சித்திரங்கள் இடம் பெற்றுள்ள அந்தச் சுவர் நிச்சயம் பார்க்கப்பட வேண்டிய விஷயம். கோவிலுக்குள் நுழையும் அத்தனை உள்ளூர்வாசிகளும் படு சுத்தமாகக் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் கோயிலை ஒட்டி இருக்கும் கோயில் குளத்தில் குளிக்காதத்தால் அவ்வளவு சுத்தமாகக் காட்சி தருகிறார்கள் போலும்.

கோயில் குளம் அழுக்கோ அழுக்கு. திரும்பி வரும் போது பத்மனாபரைத் தரிசித்த நிம்மதியோடு வந்தாலும் கோயில் நிர்வாகத்தினர் இந்தக் குளத்தைக் கொஞ்சம் நல்லபடியாக நிர்வாகம் செய்யலாமே என்ற ஆதங்கமும் எழாமல் இல்லை.

குருவாயூர்:

ராஜா சுதாபஸுவிற்குக் குழந்தை இல்லையே என்ற குறை நீண்ட நாட்களாக. அவனும் அவன் மனைவியுமாக குழந்தை வரம் வேண்டி பிரம்மனை நோக்கித் தவமிருக்க பிரம்மன் அவர்கள் முன் தோன்றி ஒரு சிலையைக் கொடுத்து, அச் சிலையை வழிபட்டால் குழந்தை பிறக்கும் என்று சொல்ல, ராஜா சுதாபஸு அச் சிலையை வைத்து வழிபாடுகள் செய்தான்.

சுதாபஸுவிற்குக் கிடைத்த அந்தச் சிலை, துவாரகையின் அழிவிற்குப் பின்னர் பிரஹஸ்பதியாலும் அவருடைய சீடன் வாயுவாலும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு குருவாயூரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பிருஹஸ்பதி என்ற குருவாலும் அவருடைய சீடனான வாயுவாலும் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட சிலையே குருவாயூரப்பன் சிலை. குருவாயூர் என்று பெயர் வரக் காரணமும் இதுவே.


கேரள பாணிக் கோயில். முகப்பில் கோபுரத்தில் மரமே பிரதான அங்கம். கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கும் குளம் படு சுத்தம். அவ்வப்போது குளத்து நீரைச் சுத்தம் செய்யச் சுத்திகரிப்புச் சாதனம் பொருத்தப்பட்டிருக்கிறது. கோயிலில் இருக்கும் ஊழியர்களுக்காக ஒரு அழகான மாளிகை கோயிலுக்குப் பக்கத்திலேயே கட்ட.ப்பட்டிருக்கிறது.

கோயிலின் உள்ளே கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி மர ஃப்ரேம்களில் அகல் விளக்குகள் வரிசையாகப் பொருத்தப்பட்டுள்ளன. விழாக் காலங்களில் அந்தி நேரங்களில் இந்த விளக்குகள் எரிய, நடுவே சந்நிதானத்தில் விளக்கின் ஒளியில் குருவாயூரப்பன் மிக உன்னதமான அழகுடன் காட்சி தருகையில் உணர்ச்சிவசப்படாத பக்தர்களே இருக்க முடியாது.


கோயிலுக்குள் (கேரள) வழக்கம் போல் சட்டை அணியக் கூடாது. வேஷ்டிதான் உடுத்த வேண்டும். செண்டை ஒலிக்க, துந்துபி முழங்க, யானை பிளிற, கர்ப்பூர ஆரத்தியின் நடுவே புன்னகை மன்னன் குருவாயூரப்பனைக் காணுவது தனி அனுபவம். அது உணர்ந்தால்தான் புரியும்.

குருவாயூரப்பனைத் தரிசிப்பவர்கள் அத்தனை பேரும் ஒருமுறையாவது ''குருவாயூரப்பா'' என்று வாய் விட்டுச் சொல்

கோயிலாக்கப்பட்டுள்ள ஆதிசங்கரர் ஜனித்த இடம்...



ஆதிசங்கரர் தாயாரின் சமாதி.



லாமல் இருக்க முடியாது. அந்தப் பெயரில் இருக்கும் சக்தி அது.

கோயில் சுத்தமாக இருக்கிறது. கோயிலில் வழங்கப்படும் ஸ்பெஷல் நைவேத்தியமான பால் பாயசத்திற்கு மக்கள் கியூவில் நிற்கிறார்கள். இப்போது அன்னதானமும் நடப்பதால் அதற்கும் தனி க்யூ.

குருவாயூர் கோயிலில் அனைவரும் அறிந்த விசேஷம் துலாபாரம்.

குருவாயூர் கோயிலுக்குள் நுழைந்து வெளிப்பட்டால் மனத்தில் இருக்கும் அழுக்குகள் அத்தனையும் ஒருமுறை கழுவப்பட்ட மாதிரி ஓர் உணர்வு தோன்றுகிறது. அதைப் பெறுவதற்காகவே நாளும் நாளும் குருவாயூரப்பன் கோயிலுக்குள் நுழையலாம். பால் பாயசத்தை விட இந்தத் தூய்மை உணர்வே சிறந்த வரப்பிரசாதம். ஆனால் பிரசாத கவுண்டர்களில் பிளாக் மார்க்கெட்டை நுழைய விட்டதால் இந்த உன்னதமான உணர்வை பக்தர்கள் இழந்து விடுகிறார்கள். தேவஸ்தான நிர்வாகிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆதிசங்கரர் அவதரித்த காலடி:

பூர்ணா என்றும் பெரியாறு என்றும் சொல்லப்படும் நதியின் வலது கரையில் உள்ள ஒரு சிறு கிராமம் — காலடி.

எட்டாவது நூற்றாண்டில் கைப்பிள்ளி இல்லம் என்ற கேரள பிராம்மண குடும்பத்தில் சிவகுரு என்பவருக்கும், ஆர்யாம்பா என்ற அவர் மனைவிக்கும் ஆதிசங்கரர் பிறந்தது இந்த புனிதக் காலடி மண்ணில் தான். காலப் போக்கில் காலடி கவனமிழந்து போன போது, இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் காலடியில் ஆதி சங்கரருக்கென கோயில் எழுப்ப முனைந்தார் சிருங்கேரி சாரதா பீடத்தின் 33—வது ஆச்சாரியரான சச்சிதானந்த ஸ்வாமிகள்.

ஆதி சங்கரர் அவதரித்த வீடு இன்று கோயிலாகியிருக்கிறது. அவர் தம் தாயாரைத் தகனம் செய்த இடமும் அவர் தாயார் பூஜை செய்த கிருஷ்ணர் கோயிலும் பக்தியோடு தரிசிக்கப்படுகின்றன. ஆதி சங்கரர் பயின்ற ஓலைச் சுவடிகள் இப்போது புத்தகங்களாக்கப்பட்டுக் காட்சிப் பொருள்களாகியுள்ளன. சந்நியாசம் பெறத் தாயின் சம்மதத்தைப் பெற வேண்டி முதலையின் வாயில் தமது காலை ஆதி சங்கரர் கொடுத்த முதலைக் கடவுத் துறையும் சங்கரர் கோயிலுக்கு வெகு அருகே உள்ளது.

காலடி மண்ணில் நம் காலடிகள் ஸ்பரிசம் செய்யும் போதே ஒரு புதுவிதப் பக்தியின் சிலிர்ப்பு உச்சி வரை ஏற்பட்டுப் பரவசமடையச் செய்கிறது. ஆதிசங்கரர் அவதரித்த இடத்திற்குள் (கோயிலுக்குள்) சென்றால் அமைதி... அமைதி... அப்படியோர் அமைதி! கோயிலை ஒட்டி ஓடும் பெரியாற்று நீரின் சலசலப்பைத் தவிர வேறு சப்தமே கிடையாது. அந்த ஆற்று நீரின் சலசலப்புக் கூட வெறும் சலசலப்பாக அல்லாமல், 'பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே...!' என்று அந்தர்யாமியாக நின்று ஆதிசங்கரரே ஒலிப்பது போல் ஒரு பிரமை; அதையும் அனுபவித்துத்தான் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆதிசங்கரரின் வரலாற்றை எளிமைப்படுத்திப் பக்தர்களுக்கு விளங்கும் வண்ணம் வகைப்படுத்தியிருக்கும் காஞ்சி காமகோடி பீடத்தால் கட்டப்பட்டுள்ள ஆதிசங்கரர் கீர்த்தி ஸ்தம்பம் காலடியில் பார்க்க வேண்டிய மற்றொரு முக்கிய அம்சம்.

காலடி எங்கே இருக்கிறது?

எர்ணாகுளத்திலிருந்து 40 கி.மீ. கிழக்கே. திருச்சூரிலிருந்து 50 கி.மீ. தெற்கே. கோட்டயத்திலிருந்து 90 கி.மீ. வடக்கே.

சென்னை — கொச்சின் ரயில் பாதையில் இருக்கும் அங்கமாலி ஸ்டேஷன் — காலடியிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் இருக்கிறது. கேரளத்தின் பல முக்கிய ஊர்களிலிருந்து அங்கமாலிக்கும், காலடிக்கும் நிறைய பஸ் வசதிகள் உண்டு. ஒருமுறையாவது சென்று வாருங்கள்!

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



Marvel
மார்வல்–இதம் தரும் தன்மை
காஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.
ஸ்பன் ஸில்க் போன்ற தன்மை. காஞ்சீவரம் பட்டுப் போன்ற மென்மை. தேங்காய் எண்ணெயின் இயற்கையான நற்குணங்கள் தரும் நுரைவளத்தின் செழுமை.
மற்ற சோப்புகளை விட.
3 மடங்கு அதிகம் தேங்காய் எண்ணெய் கொண்டது.
Mudra:B:G:5004:TM

ISTERED No. M. 4392
istered as a Newspaper in Sri Lanka